
தமிழர் மெய்யியல் கோட்பாடு

(திருக்குறள், ஔவை நூல்கள்)



ஆசிரியர்

நா.வை. குமரிவேந்தன்

(மகேந்திரராசா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் மெய்யியல் கோட்பாடு

(திருக்குறள், ஔவை நூல்கள்)

அமரர் வைத்திலிங்கம் அரியரத்தினம்
நினைவாக
அன்பளிப்பு
நா.வை.குமரிவேந்தன் (மகேந்திரராசா)
பிரதிகணக்காளர் (ஓய்வு) கே.பி.சபை
முன்னாள் செயலர், கிளி மாவட்டத் தமிழ்ச்சங்கம்,

மாணவர்களின் தமிழ் இலக்கியத்திறன் தேர்வுக்கான பாடநூல். தமிழர் அனைவரும் பயன்பெறத் தொகுக்கப்பட்டது

நூல்களுக்குத் தரும் தொகை செலவல்ல முதலீடு

ஆசிரியர்:-

நா.வை.குமரிவேந்தன் (மகேந்திரராசா)

குமரித் தமிழ்ப் பணி மன்றம்

வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலடக்கம்

நூலின் பெயர்	:-	தமிழர் மெய்யியல் கோட்பாடு (திருக்குறள், ஔவைநூல்கள்)
நூல் ஆசிரியர்	:-	நா.வை.குமரிவேந்தன் (மகேந்திரராசா)
நூலுரிமை	:-	ஆசிரியருக்கே
முதல் பதிப்பு	:-	கன்னிப்புரட்டாதித் திங்கள் தி.ஆ.2045 (கி.பி 2014)
தொடர்பு	:-	84, வெற்றி (யெயந்திநகர், கிளிநொச்சி.
கைப்பேசி	:-	077 6203788
வெளியீடு	:-	குமரித்தமிழ்ப்பணி மன்றம்
பதிப்பகம்	:-	வேழன் பதிப்பகம், கனகபுரம், முதன்மைச்சாலை, கிளிநொச்சி.
நகல்	:-	1000 படிகள்
விலை	:-	உரூபா 250

Book Title	:-	Thamizhar Meiyeal Kodpaadu
Author	:-	N.V. Kumariveanthan (Mahendrarajah)
Copy Right	:-	Author
Publication	:-	Kumarith Thamizh Pani Mantram 84, Jeyanthinagar, Kilinochchi, Srilanka.
Telephone	:-	+ 94776203788
FIRST Edition	:-	Kannith Thinkal Thiruvalluvar Aandu 2045 (September 2015)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளுறை

முன்னுரை 5

பகுதி – க

1. திருக்குறள் (உயிரிரக்கவரைவிலக்கணம்)
1.1 திருவள்ளுவர் (திருக்குறள்)
1.2 திருக்குறளின் சில சொற்கருத்தியல் 12
2. திருக்குறட் பொழிப்புரை 25

பகுதி – உ

3. ஔவையார் 80
4. சங்க கால ஔவை 87
4.1 அஞ்சியின் வீரம் 88
4.2 தொண்டைமானிடம் தூது 90
4.3 பகைவர்க்கு எச்சரிக்கை 90
4.4 தமிழ்வாழ ஈகை 92
4.5 ஈகைச் சிறப்பு 92
4.6 நல்ல நிலம் 93
4.7 மூவேந்தருக்கு அறிவுரை 94
4.8 வரலாற்றுச் செய்தி 95
4.9 கொடையின் தன்மை 96
4.10 எவர் சான்றோர் 97
5. நீதி நூல் ஔவையார் 99
5.1 ஆத்திசூடி 99

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. 2	கொன்றைவேந்தன்	110
6.	ஔவைக் கதைகள்	120
6.1	நாலுகோடி	120
6.2	அரியது	122
6.3	இனியது	123
6.4	தொண்டர் பெருமை	124
6.5	மனைவியை இழந்தவர்	127
6.6	இணங்கி வாழும் இல்லற வாழ்வே நல்லற வாழ்வாகும்	128
6.7	தென்னையின் நன்றி உணர்வு	133
6.8	வலியவராயினும் துணைவேண்டும்	133
6.9	கல்லாதவன் கவி	134
6.10	அற்பருக்கு உதவுதல் இடர்விழைவிக்கும்	135
6.11	மூவகைச் சினத்தார்	137
6.12	அடக்கம் உடையவர் அறிவிலர் ஆகார்	137
6.13	மரங்களின் ஈகை உணர்வு	138
6.14	உண்மை உறவினர்	139
6.15	பழமரமும் வெளவாலும்	140
6.16	கடுமையும் மென்மையும்	141
6.17	உதவும் உயர்குணத்தார்	142
6.18	ஒவ்வொருவரும் ஒவ்வொன்றில் வல்லார்	144
6.19	கம்பரும் ஔவையும்	145
6.20	வரப்புயர	148

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னுரை

தொல் பழங்காலத்திலிருந்து தமிழர்கள் சில மெய்யியல் கோட்பாடுகளை வரையறை செய்து அதன் அடிப்படையிற்றான் மாந்தயினம் தனக்காகவும், பிறருக்காகவும் வாழ முனைப்புடன் செயற்பட வேண்டும் என்பதற்காக பல நூல்களை யாத்தனர். இந்நூல்கள் முழுமையும் அகம், புறம் என்றவாறாகப் பிரிக்கப்பட்டு தனி மனிதன் தான் எப்படி இன்பம், பொருள், அறம் என்ற நெறி முறையில் வாழ வேண்டும் என்பதை அகம் என்றும், உலகோடு எப்படி இணைந்து வாழ அறம், பொருள், இன்பம் என்பதைப் புறமாகவும் வகுத்து இதில் வீரம், கொடை, புகழில், மாந்தன் உயர்ந்து நிற்கும் படியாகவும் நூல் யாத்தனர். இவை தமிழர்களின் பண்பாட்டு மதிப்புக்களாக வரையறுக்கப்பட்டன. இதனூடாக மாந்தன் பண்பில், ஒழுக்கத்தில், பணிவில், அன்பில், உயிரிரக்கத்தில், உயர்ந்து நிற்க இவை வழிகாட்டின.


இவற்றை நடுவகப் பொருளாகக் கொண்டே தமிழ் நூல்கள் யாக்கப்பட்டன. இதன் படி எமது பண்பாட்டின், மெய்யியல் கோட்பாட்டின் உயர் உச்சிகளாக உயர்ந்து நிற்கும் நூல்களில் செந்நாப் போதர் திருவள்ளுவர் பெருமான் ஆக்கிய திருக்குறளும், காலத்திற்கு காலம் வாழ்ந்த ஔவைப்பாட்டிகளின் நூல்களும் முதலிடம் பெறுகின்றன. எனவே திருக்குறளின் 1330 குறள்களில் 227 குறள்களையும், சங்க கால ஔவையின் ஆக்கங்களிலிருந்து வீரம், கொடை, புகழ் பற்றியனவும், நீதிநூல் ஔவையின் ஆத்திசூடி, கொன்றை வேந்தன், ஔவைக்கதைகள் (மூதுரை, நல்வழி, தனிப்பாடல் திரட்டு) சிலவற்றையும் தொகுத்து "தமிழர் மெய்யியல் கோட்பாடு" என்னும் நூலாக மாணவர், பெரியோர், பயன்பெறும் வகையில் தொகுத்துள்ளேன்.

எனவே நான் யாத்த நூல்களான "உலக உயர்தனிச் செம்மொழி செந்தமிழ்", "தமிழர் இலக்கிய இலக்கணம்", "தமிழர் மெய்யியல் கோட்பாடு" ஆகியவை ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. சில இடங்களில் ஒரே குறிப்பு மூன்று நூல்களிலும் காணப்படுகின்றன. இவை படிப்போர் மனதில் பதிவாக வேண்டும் என்பதற்காகவேயாகும். தமிழர்களின் இலக்கிய இலக்கண மெய்யியல் வரலாற்று அறிவுகள் நாம் பள்ளிகளில் கற்கும் நூல்களில் மிகமிக குறைந்து காணப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூல்களை மாணவர்கள் கற்றுத் தமிழின் அடிப்படைகளை அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவும் இதன் மூலம் வளரும் தலைமுறையினர் பண்பில், பணிவில், ஒழுக்கத்தில், மொழி, இன உணர்வில் மேம்பட்டு வளம்பெற வேண்டும் என்பதே அடியேனின் பெரு விருப்பமாகும். இவற்றை பள்ளி பொத்தகக்கல்வியோடு மாணவர்களுக்கு ஊட்ட ஆசிரியச் சான்றோர்கள் முன்வர வேண்டும். இந்நூல்களை அடிப்படையாகக் கொண்டு ஆண்டுதோறும் தேர்வுகள் நடத்தவும் அவர்களுக்கு பரிசில்கள் வழங்கி ஊக்குவிக்கவும் மனங் கொண்டுள்ளேன். எனவே இதற்கு மாணவர்களோடு தொடர்புடைய கல்வி அமைச்சர்கள் (நடுவன், மாகாண), கல்விப் பணிப்பாளர்கள், பள்ளி முதல்வர்கள், ஆசிரியர்கள், மாணவர்களின் பெற்றோர்கள் குமுகாய சான்றோர்கள் ஒத்துழைப்பும் ஊக்கமும் தருமாறு வேண்டி நிற்கின்றேன்.

இந்நூலை மெய்யுப்பு பார்த்த எனது துணைவியார் நல்லினி (புனிதலீலாவதி)க்கும், கையெழுத்துப் படியை எழுதித்தந்த செல்வி. பசு.நிருத்திக்காவிற்கும், பதிப்பித்துத் தந்த வேழன் பதிப்பக உரிமையாளர் திரு. த. பாலேந்திரராசாவிற்கும், தட்டச்சு செய்த செல்வி. ப. மதியழகிக்கும், அட்டை வடிவமைப்புச் செய்த திருவாட்டி ரமேசு வியிதாவுக்கும், அந்நிறுவனத்தில் பணியாற்றும் ஏனைய பணியாளர்களுக்கும் என்நன்றிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் மெய்யியல் கோட்டுபாடு

பகுதி – க

திருக்குறள்

(DEFINITION OF HUMANISM)

உயிரிரக்க வரைவிலக்கணம்

திருக்குறள் காட்டும் மறுமை (வீடுபேறு)

மாந்தனை மாந்த அன்பன் (மனித நேயன்) ஆக்குவது திருக்குறள்.
மாந்தனை வாலறிவன் ஆக்குவது திருக்குறள்.
மாந்தனை பகுத்தறிவாளன் ஆக்குவது திருக்குறள்.
மாந்தனை வாழ்வாங்கு வாழ ஆக்குவது திருக்குறள்.
மாந்தனை தெய்வம் ஆக்குவது திருக்குறள்.
மாந்தனை இறைவன் ஆக்குவது திருக்குறள்.
மாந்தனை கடவுள் நிலை (பேரா இயற்கை)யாகிய இறவாப் புகழ் தருவது திருக்குறள்.

திருக்குறள் அறைகூவல் (பேரிகை) முழக்கங்கள்

"யாகாவாராயினும் நா காக்க"
"இனநலம் எல்லாப் புகழும் தரும்"

திருக்குறள் செம்பொருள் நுகர்வு

"என்பும் உரியர் பிறர்க்கு"
"மெய்ப்பொருள் காண்பது அறிவு"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகப் புகழ் உச்சியில் ஒளிவீசும் வானளாவிய அறச் சுடர் திருக்குறள் என்றால் அது மிகையாகாது. இது உலகப்பொது மெய்யியல் வாழ்வியல் நூலாய் என்றும் பறைசாற்றி நிற்பது. பல்சமயத்தாரும் தமதென உரிமைகோரும் தகுதிவாய்ந்த தனிப்பெரும் சிறப்புக் கொண்டு மிளிர்கின்றது. உலகில் வாழப்பிறந்த அனைவருக்கும் நம்பிக்கையூட்டி, அறம், பொருள், இன்பத்திற்கு ஒப்பிடமுடியாத அளவிற்கு இலக்கணம் காட்டி, "பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்" என்னும் வழுவிலா மாந்தநேய உயர்வை, உணர்வை "மாந்தநேய வரைவிலக்கணமாய்" வெளிப்படுத்தி நிற்பது. பெண்ணை இழிவுபடுத்தும் மநுநெறி, பகவத்கீதைக் கருத்துக்களைக் களைந்தெறிந்து, அடிமை நிலையறுத்துப் பெண்ணின் பெருமைகளை வெளிப்படுத்தும் பெண்ணியப் புரட்சி நூலாய் காட்சி தருவது, துறைசார் அறிஞர்கள் அனைவரும் தத்தமது நூல்களில், சொற்பொழிவுகளில் மேற்கோளாக காட்ட, உரைக்க ஏதுவாய் ஆக்கப்பட்ட அரும்பெரும் நூல். பல உலக நீதி நூல்களுக்கு வித்தாய், வேராய் அமைந்துள்ள நூல்.

குறிப்பாக இரசியப் பேரறிஞர் "தால்சுதாய்" அவர்கள் "போரும் அமைதியும்" என்ற நூலை எழுதவும், விக்டோரியாப் பேரரசி கிறீத்தவ (விவிலியம்) நூலுக்கு அடுத்தபடியில் வைத்துப்போற்றவும், காந்தியடிகளைத் தமிழ்படிக்கத் தூண்டியதும், இவ்வுலகப்புகழ் திருக்குறளேயாகும். இவை மாத்திரமல்லாது இரசிய கிரெம்பிளிங் மாளிகையின் பாதுகாப்புநில அறையில் வைத்துப் பாதுகாக்கப்படுவதும், திருவள்ளுவமாலையை யாக்கத்தூண்டியதும், வெள்ளித்தட்டில் இட்ட பொன் (தங்க) அப்பிள் எனப்பாராட்டப்பட்டதும், ஆல்பிரட் சுவைட்சர், இங்கல்சால் போன்ற பேரறிஞர்களால் போற்றிப் புகழப்பட்டதும், தாச்மகாலில் ஒரு கல்லைப்பெயர்த்து அப்பெயர்ப்புத் தெரியாமல் மற்றொரு கல்லை வைத்தாலும் வைக்கலாம். ஆனால் திருக்குறளின் ஒரு சொல்லை விடுத்து இன்னொரு சொல்லை அவ்விடத்தில் வைத்துவிட முடியாதெனப் பாராட்டப் பெற்றதுமாகும்.

தமிழ் நூல்கள் எதுவும் பதித்து வெளியிடக்கூடாது என்னும் பதிப்புச் சட்டம் இருந்த நாளில் கி.பி.1812 இல் முதன் முதல் வெளியிடப்பட்டதும், இதே ஆண்டில் எல்லீசு அவர்களால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு அவரே வள்ளுவர் பொன் (தங்க) காசும் வெளியிடத் தூண்டிய மெய்யியல் நூல் திருக்குறள். உலகின் பொது வாழ்வியல் மெய்யியல் நெறிநூலாக இருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தனை தகுதிகளையுமுடைய ஒரேயொரு தனிப்பெரும் நூல் திருக்குறளேயாகும்.

பல அறிஞர்கள் பெருமக்கள் திருக்குறளுக்கு அதன் உள்ளீடு கருதி பல பெயர்களை இட்டுள்ளனர். ஆனால் இந்நூல் உயிரிரக்கத்தையும் மாந்த அன்பையும் உள்ளீடாகக் கொண்டுள்ளதால் திருக்குறளுக்கு **உயிரிரக்க வரைவிலக்கண நூல் என்றும் மாந்த அன்பின் வரையறை** நூலென்றும் பெயர் சூட்டுவது மிகவும் பொருத்தமானதுமாகும். உலகமொழிகளில் கிறித்தவ (விவிலியம்) நூலுக்கு அடுத்தபடியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள நூல் திருக்குறளே. அதுவும் ஒரு வேற்றின மொழிக்காரன் சொல்லவேண்டும், சொன்னாலும் அப்படியா? என வாயைத் திறப்பதோடு சரி. அடுத்த வாய்திறப்பு மானங்கெட்ட சோற்றுக்குவளைக்குத் தான். தமிழரின் உணர்வின்மையால் எவனெவனோ என்னது என்னது என உரிமை கொண்டாடுகின்றான். ஆனால் இது ஒரு உலகப் பொது மெய்யியல் (மறை) ஆக இன்றுவரை ஏற்றுக்கொள்ளப்படவில்லை. எப்பெரிய முரண்பாடு. என்வீடும், அதனுள் எம்முன்னோர் ஈட்டித்திரட்டி வைத்திருக்கும் பொருளும் எனக்குரிமையுடையது எனக் குரல் எழுப்பவும், அவற்றைப் புரக்கவும் முற்றக்கற்றிருக்க வேண்டுமென்பதில்லை. கண்ணெதிரிலேயே நம்பொருள் களவாடப்படும் பொழுது வாளா விருந்து பார்த்திருக்க நெஞ்சு பொறுக்குதில்லையே. குற்றம் கண்ட பொழுது 'நெற்றிக்கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமேயென எதிர்க்குரல் கொடுக்க வேண்டும். வரலாறு என்பது வெறுமனே வாய்மெல்லத்தானா? 10 (பத்து) ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே செவ்வியற் றகுதியுற்ற தமிழும், தமிழினின்று முறையே கி.பி. 10ஆம், 13ஆம், கி.பி 17ஆம் நூற்றாண்டுகளில் இலக்கிய இலக்கணம் கண்ட தெலுங்கு, கன்னடம், சிங்களம், மலையாளம் போன்ற வேற்றுமொழிக் கலப்புமொழிகளும் ஒரே தகுதிபெற்றன என்கின்றனர். மொழிபற்றி அவர்கள் தெரிந்திராவிட்டாலும், ஆட்சி அவர்கள் கையிருப்பதால் அப்படி எடுத்துக்கொள்கின்றனர், செயற்படுகின்றனர். பரவாயில்லை. ஆனால் அதேநேரம் தமிழ்மொழியைத் தமிழனை காழ்ப்புணர்வு கொண்டு எதிரியாகப் பார்த்துச் செயற்படுகின்றனர்.

தஞ்சை ஆட்சியாளராயிருந்த சரபோசி மன்னன் ஒருமுறை கல்கத்தா சென்றபோது அங்கு அரசுத்தலைவராயிருந்த பிரித்தானியர் திருக்குறளின் ஆங்கில மொழி பெயர்ப்பைப் படித்திருந்ததால், சரபோசியிடம் அதுபற்றி வினவியதாகவும், அதுபற்றி அறியாதிருந்த சரபோசி தஞ்சை சென்று அந்நூலை அனுப்புவதாகவும் கூறி வந்ததாகவும், இந்நிகழ்வே தஞ்சையில் 'சரசுவதி மகால்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் நூல்நிலையம் அமையக் காரணமாயிருந்ததாகவும் கூறப்படுகின்றது. இங்கல்சார் என்னும் பகுத்தறிவாளர் திருவள்ளுவரின், திருக்குறளின் அறிவு, சிந்தனைப்போக்கைக் கண்டு (கு.421, 424, 453) அதில் மிக்க ஈடுபாடு கொண்டு தமது எழுத்திலும், பேச்சிலும் சுட்டியுமுள்ளார். யேர்மனியரான "கால் கிரெளல்" திருக்குறளின்; பொருளின், கலை வடிவத்தின் ஆழ, அகலம் கண்டு அதைக்கற்று யேர்மனிய, இலத்தீன் மொழிகளில் அதை மொழிபெயர்ப்புச் செய்துள்ளார். காந்தியடிகள் தால்சுதாயின் அறநெறி (அகிம்சை)க் கொள்கையை உருவாக்க உதவிய திருக்குறளின் (இன்னா செய்யாமை) குறட்பாக்களை மடல் மூலம் கண்டு, 'ஏரியல்' என்பாரின் பிரெஞ்சு மொழி பெயர்ப்பைப் படித்து திருக்குறளின் பெருமை உணர்ந்ததாகவும், தான் தமிழ் படிக்கத் தொடங்கியதற்கு காரணம் திருக்குறளின் மூலத்தை நேராகப் படித்தல் வேண்டும் என்ற உள்ளத்தின் வாஞ்சையே என்கின்றார்.

திருக்குறள் தனித்தமிழ் (வேற்றுமொழிக் கலப்பற்ற) நூல். அயற்கொள்கை எதிர்ப்பு நூலேயன்றி எந்த ஓர் அயற்கொள்கையையும் உடன்பட்டுக் கூறும் நூலன்று. தமிழர் வாழ்வு என்னும் அவ்வளவு இன்றியமையாச் சிறப்பினையுடைய நூல் திருக்குறள். செயலே உலகவாழ்வின் உட்பொருள். உட்பெருளின் வழி, உண்மை வழி. அதுதான் அறவழி. செயல், செயல், செயல். செயலுக்கு வருமாறு சொல்லவேண்டும். சொல்வது செயலுக்கு வரவேண்டும். இது உயிரிரக்கக் கோட்பாட்டின் சட்ட வரையறை நூல். இதை நெஞ்சில் நிறுத்தி குறள் செய்தவர் திருவள்ளுவர். எனவே செயல் தான் வள்ளுவம். எதைக் கொண்டு வந்தாய். எதைக் கொண்டு போகப் போகிறாய்! என்று கூறி மாந்த வாழ்வை முடமாக்கும் அழிப்புக் கொள்கையது அல்லத் திருக்குறள். மக்கள் வாழ வழிவகுப்பது, பல நிலை அறம் தழுவியது, எந்நிலை மாந்தரையும் முன்னேற்றுவது, மறுமலர்ச்சிகளை வைப்பது. உலக ஒருங்கிணைப்பு நெறி காட்டுவது.

இன்று திருவள்ளுவரின் காலக்கணிப்புப் பற்றிச் சில முரண்பாடுகள் எழுப்பப்பட்டுள்ளன. இருந்தாலும் சரியான காலவரையறையை துறைசார் அறிஞர்கள் ஆய்ந்து வெளிப்படுத்தும் வரை தமிழர்கள் பொறுமை கடைப்பிடிக்க வேண்டும். தமிழர்களுக்கு ஒரு தொடராண்டு முறை இல்லாததினாலும் வடமொழியாளர்களின் தில்லுமுல்லுகளால் பண்டைத் தமிழ் கருவூலங்கள் அழிக்கப்பட்டும், அவர்களுடன் ஒட்டியுறவாடிய வயிற்றுப் பிழைப்புத் தமிழர்களால் அவர்களுக்கான வரிவடிவத்தையும் உருவாக்கி, பண்டைத் தமிழ்; இயல், இசை, நாடக, மருத்துவ, வானியல், அறிவியல் நுட்பங்களை எல்லாம் மொழி பெயர்த்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்தும், வரலாற்றை இழிவுத்தொன்ம (புராண)க் கதைகளாக்கி தொடர் ஆண்டு முறையை சிதைக்க 60 ஆண்டுச் சுழற்சியையும் உருவாக்கி விட்டதால், எங்கோ ஓரிடத்தில் தமிழருக்கென்று உரிமையோடு செயற்படுத்த ஓர் ஆண்டுத் தொடர்ச்சிமுறை தேவைப்பட்டது.

இன்று அறிவியல் வாயிலான ஆய்வுகளே அவற்றின் துல்லியத் தன்மையிலிருந்தும், செயற்பாடுகளிலும் மாறுபடும்போது, சரியான விளைவுகளைத் தராதபோது மொழியியல் வாயிலான ஆய்வுகள் மாறுபடுவதில் என்ன குறைபாடு ஏற்படுகின்றது. வெற்றியின் திறவுகோல் தோல்விதானே. (Failures are the Success of pillars) ஆய்வுத்திறன் மேலோங்கும் போது சரியான இலக்கை அடைய முடியும். எனவே சரியானதை கண்டுபிடியுங்கள். செயல் வடிவங்கொடுங்கள். பழைமைகள் மறைந்து போம் அதற்காக பழைமைகளைக் கொச்சைப் படுத்தாதீர்.

இன்றைய ஆய்வுகளின்படி திருக்குறளின் மெய்யியல் உள்ளீட்டை கருத்தில் எடுத்துக்கொண்டால் ஆரியர் வருகையின் 600 - 700 ஆண்டுகள் பிற்பட்ட காலத்திற்கு முற்பட்டதாய் அதாவது கி.மு 800 ஆம் ஆண்டிற்கு உரியதாய் ஆகலாம். முனைவர் (பேரா) க.நெடுஞ்செழியன் கருத்துப்படி இது கி.மு 500ஆம் ஆண்டுக்கு முற்பட்டதாயிருக்க வேண்டும் என்பார் ஆய்வறிஞர் குணா தமது **தொல்காப்பியத்தின் காலமெனும்** நூலில். திருக்குறள் இயற்றப்பட்ட காலத்தில் பாயிரம் எழுதும் வழக்காறு இல்லை. தொகை நூல்களுக்கு கி. பி 9ஆம் நூற்றாண்டிற் தான் கடவுள் வாழ்த்துப்பாடி முன்னால் வைக்கும் வழக்காறு வந்ததென்பதை சிலம்பு செல்வராசு தொல்காப்பியப்பாயிரம் - சமூகவியல் ஆய்வு என்னும் நூலில் சான்று காட்டுகிறார். திருக்குறள் சிலப்பதிகாரத்திற்கு முந்தைய நூல் என்பது அறிஞர் முடிவு. அத்தோடு கோவலன், கண்ணகி கதையின் தாக்கம் கிரேக்க, சின்னாசியா உள்ளிட்ட நடுத்தரைக்கடல் பண்பாடுகளின் மீதும் படர்ந்து நின்றது ஒரு பெரிய வரலாற்றுத் தடயமாகக் காணப்படுகிறது. எனவே திருக்குறள் கி.மு 500 முற்பட்டதாயிருக்க வேண்டுமெனக் கொள்ளப்படுகிறது.

திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்தோன்றிய பொதுவுடமை, சமத்துவப் புரட்சியாளன். அங்கே சாதியில்லை, சமயமில்லை, பால்வேறுபாடில்லை, ஆண்டான் அடிமை வேறுபாடில்லை, பொருளாதார ஏற்றத்தாழ்வில்லை, இடவேறுபாடில்லை. இப்படியான ஒரு குமுகாய உருவாக்கத்திற்கே வித்திட்டு, பரந்துபட்ட ஆலமரமாக்க குறள் யாத்தவர் திருவள்ளுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. திருக்குறளின் சில சொற்கருத்தியல்

திருக்குறளுக்கு உரை கண்ட பலர் தாம் சார்ந்த மதம், தாம் வாழுகின்ற சூழல், தமது பட்டம், பதவிகளைப் பாதுகாக்கும் நோக்கு, வயிற்றுப்பிழைப்பை மட்டுமே முன்னிலைப்படுத்தும் தற்குறித்தன்மை, கடிவாளம் கட்டிய குதிரை போல் 1329 குறள்களையும் தவிர்த்து தாம் எடுக்கும் குறளுக்கு மட்டும் தம் மனம் போல பொருள்காண்கின்றனர். திருக்குறள் அறம், பொருள், இன்பமாம் முப்பாலையும் ஒரு பாலாய் வெளிப்படுத்தும் ஒரு உண்மை நூல். எனவே ஒரு குறளுக்குப் பொருள்காண விளைபவர் ஏனைய 1329 குறள்களையும் தம் கருத்துள் உள்வாங்கிப் பொருள் காண வேண்டும். அதற்கு மேற்போந்த காரணிகளையும் தவிர்த்து நூல் யாக்கப்பெற்ற காலச்சூழல், அன்று பின்பற்றப்பட்ட மரபுகள் போன்றவற்றின் அடிப்படை தழுவி பொருள் காணும் பொழுது ஓரளவுக்கேனும் ஏற்புடையதான கருத்தியலை வழங்கமுடியும். அத்துடன் ஏரணவழிப்பட்டதாயும் இருக்கவேண்டும். ஏன்? எதற்கு? எப்படி? என்ற கேள்விகளுக்கு புத்தொளி தருவதாயும் விளங்கவேண்டும். அப்பொழுதுதான் பல்நூற்றாண்டு காலமாக மூடநம்பிக்கைகளிலும், மூடப்பழக்க வழக்கங்களிலும், தேவையற்ற கரணங்(சடங்கு)களிலும் மூளைச்சலவை செய்யப்பட்டவர்கள் தம் இயற்கை அறிவைப் பெற முயல்பவர்கள். இல்லையேல் இன்னும் மூடத்தில் மூழ்கடிக்கப்படுவர்.

திருக்குறள் நூலை உற்று நோக்குவார்க்கு "பயனில சொல்லாமை" என்னும் கூற்றை வலியுறுத்தி பயனிலாதன கூறும் மகனையே மகனென ஏற்க ஒப்பாது அதற்கென்றே ஒரு தனி அதிகாரம் வைத்தார். அதாவது திருக்குறள் பயன்பாடு கருதியே யாக்கப்பெற்றதென்பதும் வள்ளுவன் கருத்து பயன்மிக்கதென்பதும் தெளிவானதாகும்.

ஆதன், ஆதி :-

"ஆதனும், பூதனும் கூறிய இயல்பொடு" (தொல்.எழு.புள்ளி மயங்கியல் 53) ஆதன் என்பது பண்டைத் தமிழ்ச் சொல். அத்தன், ஆத்தன், ஆதன் என்றும் பின் "ஆதாம்" என்றும் ஆனது. ஆதனின் பெண்பால் ஆதி, (ஆத்தாள், ஆத்தா, ஆத்தி, ஆதி) அத்தோடு ஆதன்; தந்தை, பெரியோன், தலைவன் என்றும் பொருள்படும். எனவே உலகத்தலைவனாகிய பகவனே (உயிர் உடலில் இருக்க உணவைப் பகிர்ந்தளிப்பவன்) ஆதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாள் :-

திருக்குறள் முதலதிகாரமாகிய இறைவணக்கக்குறள்கள் 10இல் ஏழுகுறள்களில் "நற்றாள், மாணடி, இலானடி, தாள்சேர்ந்தார் (2), தாளை, அடி என்றும், ஆள்வினையுடைமை (முயற்சி) என்னும் அதிகாரத்தில் 613, 614, 617, 618 என்னும் குறள்களில் "தாளாண்மை (2), தாளுளாள், தாள் வினை" என்றும், ஒப்புரவறிதல் (பொதுநலம்) என்னும், அதிகாரத்தில் 212ஆம் குறளில் "தாளாற்றி", (544) செங்கோண்மையில் "அடிதழீஇ" என்றும், மன்னனை, உழைப்பவனை அதாவது உலகை உயிர்வாழ வைப்பவர்களின் காலடிகளைப் போற்றும் வகையில் அவர்கள் வழியில் நடக்கப், பின்பற்ற குறள்கள் யாக்கப்பெற்றிருக்கின்றன.

உடலில் ஒவ்வொரு உறுப்புமே முதன்மையானது. இவ்வுறுப்புக்களின் தொடர்பில்லாமல் (தலை, மூளை, கண், கை, விரல் போன்ற பல) உலகை வாழ்விக்க முடியாது. கால்மட்டும் (அடி) போதுமா? அப்படியாயின் வள்ளுவர் எந்த நோக்கில் இக்குறள்களை யாத்திருக்க முடியும்? காலடிக்கு இவ்வளவு உயர்ச்சியை, புகழை ஏன் கொடுக்க விரும்பினார். தமிழனின் வாழ்வியல் தொழில் வேளாண்மையே. இதற்குக் காலடி தேவைதான். போற்றப்பட வேண்டியதுதான். ஆனால் இதற்கு மற்றைய உறுப்புக்களில் செயற்பாடுகளும் எந்த விதத்திலும் குறைந்தவையல்ல. ஆம் சாதிய வருணாச்சிரமப் பகுப்பிலே பிராமணன் கடவுளின் (பிரமா) முகத்தால் பிறந்தவனென்றும் (உயர்சாதிக்காரர்), வைசீகன் (வாணிபன்) வயிற்றால் பிறந்தானென்றும், இவர்களுக்கெல்லாம் எந்த முனுமுனுப்புமின்றிப் பணிவிடை செய்பவன் கடைசிச் சாதிக்காரனாகிய சூத்திரன் (தமிழன் - இழிந்தசாதி) காலடியால் பிறந்தவனென்றும் மநுத்தீ) நெறி கூறுகிறதாம். எனவே தான் 3500 ஆண்டுகளுக்கு முன் இந்தியாவுள் புகுந்த நாடோடிகளான ஆரியரின் இப்பகுப்பை முறியடிக்க இழி சாதியினன் பிறந்த காலடியை உயர்த்தி ஒரு மறைமுகமான, புரட்சியின் வெளிப்பாடாகவே இக்குறள்களை யாத்தார் எனலாம்.

எண் குணம் :-

எண்குணம் என்பதற்குப் பல உரையாசிரியர்கள் பலவாறாக உரைகண்டுள்ளனர். கடவுளின் எட்டுக் குணங்களென்றும், பல குணங்களென்றும் அவற்றை விரித்தும் விளக்கியும் கூறுவர். எண் என்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏரணம், தர்க்கம், வாதம், அளவையியல் எனப் பலவாறாகப் பொருள்படும். எனவே எண்குணமென்றது அளவையியல் முறையிலே சிந்தித்து ஆய்ந்து செயல்படுவதாகும். அதுவே மெய்ப்பொருள், நுண்ணறிவு, உண்மை அறிவாகும்.

தொழுதல் / வணங்குதல் :-

கண்மூடி முழந்தாளில் இருப்பதையோ, தலையில் குட்டிக் காதைப் பிடித்திழுத்து தோப்புக்கரணம் போடுவதையோ அல்லது முகம் குப்புர விழுந்து கை கால் நீட்டுவதையோ திருக்குறள் தொழுதல் / வணங்குதல் எனக்குறிப்பிடவில்லை. உலக உயிரோட்டத்திற்கு அச்சாணியாயிருக்கும் வாழ்வாங்கு வாழும் சான்றோர்களைப் பின்பற்றி, அவர்வழியில் ஈடுபடுவதையும், அவர்களை போற்றிப்புகழ்ந்து வாழ்த்துவதையுமே சுட்டுவதைக் காணலாம். திருக்குறளின் 2, 9, 260, 268, 970, 1033 போன்ற குறள்கள் இவ்வுண்மையை வெளிப்படுத்தி நிற்கின்றன. தொழுதல் / வணங்குதல் என்பது போற்றுதல் வாழ்த்துதல், புகழுதல் என்றே திருக்குறள் கருத்துரைக்கும்.

தெய்வம் :-

திருக்குறளின் முதல் அதிகாரத்திலேயே திருவள்ளுவர் உலகம் உய்ய, உயிர்ப்படைய வேண்டுமானால் அது பகிர்ந்துண்டு வாழ்பவனால் (பகவன்), கல்வி கேள்விகளில் சிறந்த குருவால் (வாலறிவன்) பக்குவப்பட்டு, எவ்வுயிர்க்கும் தீங்கிழைக்கா (மலர் போன்ற மென்மையான மனத்தை) தவர்கள் (சமணர்கள் போல் வழியில் நடக்கும் போதும் சிறு எறும்பும் கூட காலில் மிதிபடக்கூடாதென்பதற்காக மயில்பீலி கொண்டு நிலம் தடவி நடப்பவர்கள் போன்றவர்கள், மலர் மிசை ஏகினான்) அதாவது நடக்கும் போது ஒருபுல் கூடச் சிலும்பாமல் நடப்பவர்களையும், பற்றறுத்தவர்களையும் (வேண்டுதல் வேண்டாமை இலார்), மக்களை நீதி தவறாது முறைமை செய்து காப்பாற்றி வழிநடத்தும் நல்லியல்புகள் ஒருங்கே அமையப்பெற்ற தலைவன் (இறைவன்), ஐம்பொறிகளால் ஏற்படும் இச்சை உணர்வுகளை கட்டுப்படுத்தி, அடக்கி வாழ்பவனை (ஐந்தவித்தான்), வாழ்வாங்கு வாழ்பவனை (தனக்குவமை இல்லாதவன்), அறவர்களை (அறவழி அந்தணர்), அளவையியல் (ஏரண) முறையில் எண்ணுகின்ற எண்ணற்ற நற்குணகளையுடையவனை (எண்குணத்தான்)ப் போன்ற உயிருள்ள மாந்தரையே தெய்வம் எனச் சுட்டுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தோடு அவர் தெய்வமெனக் குறிப்பிட்டுச் சுட்டுவது இந்த வாழ்வாங்கு வாழ்பவனையும், இல்லற இணையரையும், முயற்சியாளனையும், குமுகாயத் தொண்டனையும், ஐயப்படாதவனையும் (தெளிந்த சிந்தனையாளன்) ஆகும். இதை தமது குறள்கள் 43, 50, 55, 619, 702, 1023 மூலம் உறுதிப்படுத்துவார். சங்க நூல்களில் முனிவர்கள் கடவுளெனவும், தெய்வமெனவும் சுட்டப்படுவதைக் காணலாம். நாம் வாழ்வில் சில சான்றோர்களைப் பண்பாளர்களைச் சந்திக்கும் போது "கடவுளை (தெய்வத்தை) கண்டது போலுள்ளது" என்றும், "உங்கள் வாக்கு தெய்வவாக்கு" என்று கூறுவதும் இன்றும் கண்கூடாகக் கண்டு, காதூடாகக் கேட்பவை. கடவுள் என்னும் சொல் திருக்குறளில் எங்கும் குறிப்பிடப்படவில்லை. அப்படிக் குறிப்பிடப்படாத சொல்லை திருக்குறளின் பாயிரமெனக் கொள்ளப்படும் முதலதிகாரப் பெயராக இடுவது எவ்வகையிலும் பொருத்தப்பாடாகத் தெரியவில்லை. இது ஒரு இடைச்செருகலாகவும் இருக்கலாம். வள்ளுவர் காலத்தில் வழங்கப்படாத சொல்லாய் இருந்திருக்க வேண்டும் அல்லது சமயவாணர்கள் கூறும் கடவுள் உருவை ஏற்றுக் கொள்ளாதவராகவும் திருவள்ளுவர் இருந்திருக்கலாம்.

இறைமை :-

திருக்குறள் முதல் அதிகாரத்தில் இரு குறள்களில் இறைவன் எனும் சொல் பயன்படுத்தப்படுகிறது. அதாவது ஐந்தாம், பத்தாம், குறள்களில் சுட்டப்படுகிறது. அத்தோடு இறைமாட்சி என்னும் அதிகாரத்தின் எட்டாம் குறள் "முறைசெய்து காப்பாற்றும் மன்னன் மக்கட்க் கிறையென்று வைக்கப்படும்" (388) என்றவாறாக விளிக்கும். பேரா இயற்கையாகிய இறைநிலை (இறைமை) கனிமங்களிற் தூங்கி, மரம் செடிகொடிகளில் (அசைந்து) ஆடி, விலங்கு, புள் (பறவை) போன்றவற்றில் நடந்து, பறந்து, மனிதனில் சிந்திக்கின்றது. இச்சிந்தனையானது உண்மையறிவையும் (373) நுண்ணறிவையும் (424) மெய்யறிவை(423, 355)யும் பெறுகிறது. இங்கு இறையென்பது இறைவனை அதாவது மன்னனைக் குறிக்கிறது. இறைவன் முறைசெய்து; அறம், மறம் என்பவற்றைப் பிரித்துக்காட்டி, பகிர்ந்தளித்தும், பாதுகாத்தும் நடுநிலையோடு காப்பாற்றுவதே அவன் கடமையென கூறப்படுகிறது. (குறள் 541 இலும் "ஓர்ந்துகண்ணோடாது) இறைபுரிந்து...) எனவே திருக்குறளின் முதலதிகாரம் கூறுகின்ற பத்துக்குறள்களுக்கும் எடுகோளாய் இருக்கும் ஓர் உயிருள்ள உலகில் வாழுகின்ற மக்கள் தலைவனையே துல்லியமாகச் சுட்டுகின்றது. மதநெறியாளர்கள் கூறுகின்ற, நம்புகின்ற இயற்கையிலிருந்து மாறுபட்ட கற்பனை உருவை எந்தவகையிலும் குறிக்காது. திருக்குறளுக்கு உரைகண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிமேலழகர், மாந்த அறிவு செயற்கையென்பார். பானை, சட்டி, சிலை, மாயை, (கற்பனை) என்பவை செயற்கையா? அல்லது இயற்கை செயற்கையா? தானாக உருவாவது இயற்கை, இயற்கையான மாந்தர் அறிவால் உருவ...வது செயற்கை.

இருள்சேர் இருவினை (செயல்)

இவ்வடிக்குப் பொருள் கண்ட பலர், ஒன்றை இன்னொன்றாக கருதி மயக்க நிலையில் உண்டாகும் நல்வினை, தீவினைகளின் திரிபுணர்ச்சி என்றும், நன்மையென மயக்கவுணர்வால் தீவினை செய்வதும் தீமையென மயக்கவுணர்வால் நல்வினை செய்தலைத் தவிர்த்தலென்றும் பலவாறாகப் பொருட்கள் கண்டனர். இங்கு இருள் என்றது மயக்கநிலை எனப்படுகிறது. ஆனால் இருள் அச்சத்தை (பயத்தை), மன இடரை (இன்னல்), துயர், கவலையைத் தருவதாகவே பொருள் கொள்ள வேண்டும். ஏனெனில் வாழ்வில் மகிழ்ச்சியைத் தருவது ஒளி. இதன் எதிர்ச்சொல் இருள். "பொருள்கருவி காலம் வினையுடனோடைந்தும் இருள் தீர எண்ணிச் செயல்" (கு 675) என்பார் செந்நாப் போதர். அதாவது மேற்குறித்த ஐந்தினையும் செயற்படுத்தும் பொழுது அதன் விளைவாக ஏற்படும் தீவினை, பயத்தை, மன இடரை, கவலை தரக்கூடிய விளைவுகள் உண்டாகாமல் சிந்தித்துச் செயற்படுங்கள் என்கிறார். இங்கு தீவினையே இருளாகும். இத்தீவினையையே இரு வினைகள் என்கிறார் வள்ளுவனார். ஒன்று தவறென்று தெரிந்து கொண்டும் செய்யும் தவறு "பொய்மையும் வாய்மை இடத்த புரை தீர்ந்த, நன்மை பயக்கும் எனின்" (க.292), அதாவது தன்னிடம் அடைக்கலமான ஒருவரை (நல்லவரோ, கெட்டவரோ என்றறியாது) பாதுகாத்தற் பொருட்டு செய்யும் செயல். ஆனால் இது தெரிந்து செய்யும் தவறு. ஒருவர் ஈருருளியில் (பைசிக்கிள்) சென்று கொண்டிருக்கிறார், எதிர்பாராத நேரத்தில் அகவை முதிர்ந்த ஒருவர் குறுக்கே வந்ததால் இருவரும் மோதுண்டு வீதியில் விழுந்து விடுகின்றனர். முதியவர் இறந்து விடுகிறார். இது தெரியாமல் செய்த தவறே. இவ்விரு (இதுபோன்ற) தவறுகளையுமே இருள்சேர் இருவினையென்றார் வள்ளுவனார். அதாவது இவையும் இருளாகிய அச்சத்தை (பயம்), மன இடரை (இன்னல்), கவலையைத் தருகின்ற செயல்களே.

எழுமையும் ஏமுபிறப்பும் :-

'எழுமையும் ஏமுபிறப்பும்" என்னும் அடிக்கு உரைகண்ட பரிமேலழகர், மாந்தர்பிறப்பு ஏமுபிறப்பெடுக்குமென்றும், மாந்தப்பிறப்பில் செய்யப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயல்களின் (வினை) பயன் அந்த ஏழு பிறப்பிலும் தொடருமென்றும், அவ்வேழ் பிறப்பு கல் (கனிமங்கள்), புதர் (மரம், புல், பூண்டு), ஊர்வன (புழு, பாம்பு) பறப்பன, நடப்பன, பேசுவன (மாந்தர்), தேவர் என்றும், எழுமையென்பது வினைப்பயன் தொடரும் ஏழுபிறப்பினையும் என்றவாறாக (முதவாணர்) கூறுவார். முனைவர் மு.வரதராசனவர்கள் பல்வேறு வகையான பிறவிகள் என்பார். செந்தமிழ் அந்தணர் முதுமுனைவர்.இரா.இளங்குமரனார் ஒருவரைத் தொடர்ந்து பின்வருவார் வழிமுறைக் காலமும் என்பார். மானிடப்பிறவியை எடுத்துக்கொண்டால் நினைவு என்பது தொடர்நிலையில் பேணப்பட முடியாததொன்றாயிருக்கிறது. எமது குழந்தை, பிள்ளைப்பருவக்கால நினைவுகள் பொதுவாக மறக்கப்படப்பட்டு விடுகின்றன. எமது அகவை முதிர்வுநிலையிலும் பொதுவாக மறதியென்பது வந்து விடுகிறது.

எனவே இறந்து வினை(செயல்)ப் பயனால் ஏற்படுகின்ற மற்றைய பிறப்புக்களில் முற்பிறப்பின் செயல்கள் பற்றி அறிந்துகொள்ள முடியுமா? நினைவைத்தான் வைத்திருக்க முடியுமா? உண்மை அறிவோடும், நுண்ணிய, மெய்பொருளறிவோடும் யாக்கப்பெற்ற திருக்குறளில் மேற்குறித்த அறிவுகளுக்கெல்லாம் இடம்கொடாத ஏழுபிறப்பைப் பற்றி வள்ளுவனார் கூறியிருக்க முடியுமா? என்பது மனதில் எழும் கேள்வி.

மாந்தப் பிறப்பிலேயே அவன் பலநிலைகளை அடைகின்றான். **குழந்தையாய்** இருந்தவன் **பாலனாகிறான்.** பாலன் பின் **காளை** (வாலிபன்) ஆகின்றான். காளை பின் **இல்லறத்தானாகின்றான்.** அதன்பின் **முதுமை (முதிர்வு),** தொடர்ந்து **தடி, பொல்லூன்றிய பருவமாகிப்** பின் பாடைப் **பருவமெய்துகின்றான்.** ஒவ்வொரு பருவத்திலும் அவனது உடல்நிலையும், மனநிலையும் (அறிவு) மாற்றமடைகிறது. இந்நிலை ஒருபருவம் இறந்து மறுபருவம் ஏற்படுகிறதென்பதை சுட்டும் ஒவ்வொரு நிலைகளிலும் மறுபிறப்பினைப் பெறுகின்றான். எனவே இவ்வேழு நிலைகளையும் எழுமையென்றார் வள்ளுவரெனாலாம். இதைக்குண்டலகேசி எனும் காப்பியம் **"பாளையாம் தன்மை செத்தும், பாலனாம் தன்மை செத்தும், காளையாம் தன்மை செத்தும், காமுறும் இளமை செத்தும், மீளுவிவ்வியல்பும் இன்னே, மேல்வரு மூப்புமாகி நாளும் நாம் சாகின்றோமானால் நமக்கு நாம் அழாததென்னே"** என்றும், ஒரு பிறப்பிலேயே இவ்வேழு பிறப்பு (பருவம்) உண்டென்னும் வள்ளலார் வாக்கும் கருதத்தக்கதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காமஞ்சான்ற கடை கோட்காலை ஏமஞ்சான்ற மக்களொடு துவன்றி, அறம்புரி சுற்றமொடு கிழவனும், கிழத்தியும் சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே" (தொல்.கற் 51). இறந்தது - இதுகாறும் வாழந்த வாழ்வின் பயன்.

இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே (வள்ளுவர் காலம் அடங்கலாக) பெண்ணானவள் பருவம் எய்திவிட்டால் உடன் இல்லற வாழ்வுதான் (ஆண் பெண் சேர்க்கை), எனவே குத்துமதிப்பாக 11 - 13 அகவையில் பெண் பருவமெய்துகிறாள் என்றால் இவளுக்குப்பின் வரும் ஆறு தலைமுறைகளுக்கு இவள் உயிருடன் இருக்கும் வாய்ப்புக்கள் கூடுதலாக உண்டு. பொதுவாக வள்ளுவர்கால மாந்தரின் அகவை எல்லையானது 80- 90 ஆண்டுகளைத் தாண்டியதாகவே இருந்திருக்கும். சிலமுதன்மையான செய்திகள் தாய், தந்தை வாய்வழிச், செவிவழிச் செய்தியாக குறைந்தது ஏழுதலைமுறை சென்றது எனலாம். எனவே ஏழுபிறப்பென்றது ஏழு தலைமுறைகளைக் குறித்த ஒன்றாகும். இன்றை வரலாறுகள் எல்லாம் வாய்வழி, செவிவழிச் செய்தியாக இருந்தவற்றையும் அகழ்வாய்வுகள்போன்றவற்றையும் அடிப்படையாகக் கொண்டு பல நூறு ஆண்டுகளுக்குப்பின் எழுதப்பட்டவை. எடுத்துக்காட்டாக இந்திய வட நாட்டிலிருந்து கி.மு 500 களில் இலங்கையில் கரையொதுங்கிய விசயனின் வரலாறு ஆயிரமாண்டுகளுக்குப் பின் கி.பி 500 இல் சிங்கள மொழியென்றொன்று இல்லாத காலத்தில் பாலி மொழியில் மகாநாம தேரரால் எழுதப்பட்ட நூல் தான் மாமரபு (மகாவம்சம்) என்பதைக் குறிப்பிடலாம். எனவே எழுமை ஏழுபிறப்பென்றது. பிறந்ததிலிருந்து உடலில் ஏற்பட்ட மாற்றத்தையும், ஏழுதலைமுறையையும் (வாழையடி வாழை) எனக் கொள்வதே ஏற்புடையதாகும்.

ஐயர், அந்தணர், பார்ப்பார் :-

தொல்பழங்கலத்திலிருந்தே ஐயர், அந்தணர், பார்ப்பார் என்போர் தமிழ்குமுகாயத்திலிருந்த துறைசார் அறிஞர்கள் ஆவர். இவர்கள் குமுகாயத்தின் மேம்பாட்டிற்காக தங்களை ஈடுபடுத்தியவர்கள். **"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர் ஐயர் யாத்தனர் கரணமென்ப"** (தொ.கற் 4) என்றும், **அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுக லான்"** (கு.30) **என்றும், மதுரைத் தீயானது "பார்ப்பாரறவோர் பசுபத்தினிப் பெண்டிர்... (சிலம்பு21:53")** போன்றோரைத் தவிர்த்து என்றும் உரைகின்றன. இவர்கள் யாவரும் வள்ளுவக் கணியரென்றும், ஐந்திரென்று கூறப்பட்டவர்களும் இவர்களே. இவர்கள் துறைசார் வல்லுநர்களாகவும் செயற்பட்டனர் (வானியல், மருத்துவம், சிற்பம், கட்டிடக்கலை, இயல், இசை நாடகம் போன்ற பல்துறைகள்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று அவர்கள் தம் உயர்ச்சியை வெளிப்படுத்த பூ நூலை, மருதாணி (பெறுமதிமிக்கது - உருத்திராட்சம்) மாலையை அணிந்தனர். இன்றும் சில பொன்வேலை, சிற்பவேலை, மரவேலையில் வல்லோர் பூநூல் அணிந்திருக்கின்றனர். இவர்களுக்கும் இன்று கோவில் பூசகராக இருக்கும் மநுநெறி வழிப்பட்ட வடமொழி (சமற்கிருதம்)யாளர்க்கும் எந்தத் தொடர்புமில்லை. அவர்கள் (ஐயர், அந்தணர், பார்ப்பர் என்போர்) இருபிறப்பாளராயும் விளங்கினர். ஒரு பிறப்பு தாயின் வயிற்றிலிருந்து பிறப்பது (உண்மையறிவுடன்) மற்றையது கல்விகேள்வி செயல்களால் (மெய்யறிவு, நுண்ணறிவு) அறிவு பெற்றவர்கள் (துறைசார் அறிவு) தாயின் வயிற்றில் இருக்கும் போது பிள்ளைக் கொடியானது தாயின் கருவறையிலிருந்து சேயின் வலது தோள்வழி தொப்பிளை அடைகிறது. இது முதற்பிறப்பின் அடையாளமாகவும், சான்றோனாகிய பின் (துறைசார்) அதை நினைவுபடுத்தி பூநூலை வலது தோளிலிட்டு அவரது தகமை உயர்த்தப்படுகிறது. இது இரண்டாம் பிறப்பாகவும் பண்டைய நாட்களில் கொள்ளப்பட்டது எனலாம். இங்கு இருபிறப்பென்றது உடற்பிறப்பு, அறிவுப்பிறப்பு என்பவையே.

துறவறம், நோன்பு, தவம்:-

இவை மேலோட்டப் போக்கில் ஒரே கருத்தைச் சுட்டுவன போல் தோன்றினாலும், அவை நுண்ணிய நோக்கில் வேறுபட்டு நிற்பதைக் காணலாம். மனைவி, மக்கள், இல்விட்டு அகல்தலும், காடு செல்வதும் கடும் நோன்பு கைக்கொள்வதும் வள்ளுவம் சொல்லாதது. **"இல்லறமல்லது நல்லறம் அன்று" என்று ஔவைப்பாட்டியும் "அறனெப்பட்டதே இல்வாழ்க்கையென்றும், "அறத்தால் வருவதே இன்பமென்று திருக்குறளும்** இயலும். எனவே அகவை முதிர்ந்த தலைவன், தலைவி தம் மக்களுடன் இணைந்து குமுகாயத்திற்கு ஆற்றுகின்ற மனிதநேயத் தொண்டே துறவு ஆகும். அதுவும் அறம் சார்ந்து நிற்பதால் துறவறம் எனப்பட்டது. துறவு என்பது அறம் எனக் கொள்ளப்பட முடியாதது.

நோன்பு என்பது உள்ளத்தில் உறுதிப்பாட்டைத் தருவது, இவ்வுறுதிப்பாடானது தமது துயரைப் பொறுத்து, மற்றவருக்கும் துயரை ஏற்படுத்தாமல் இருப்பதையே குறிக்கிறது. அதுமாத்திரமன்றி தமது அன்றைய செயல்களை எவ்வித தயக்கமுமின்றி செயற்படுத்துபவர்களுக்கு இதுவே தவமுமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊழ்:-

திருக்குறளின் முதற்பாலாம் அறத்துப்பாலின் 38ஆம் அதிகாரமானது உலக இயற்கைச் செயற்பாட்டைத் தெளிவு படுத்துவதாகும். உலகத்து இயற்கையையே "ஊழ்" என்று குறிப்பிடுவார் வள்ளுவனார். இவ்வதிகாரம் ஆகூழ், போகூழ், இழவூழ், ஆகலூழ் என்று ஊழைப் பலவாறாகக் கூறும். இங்கு ஆக்கத்தை உருவாக்குவது இயற்கையென்னும் (முயற்சி) ஆகூழும், ஆகலூழுமாகும். அதேவேளை அழிவை, இடரை, இன்னலை ஏற்படுத்தும் இயற்கைச் (செயற்கை) செயலை போகூழ், இழவூழ் என வரையறை செய்வார் பெருநாவலர் திருவள்ளுவர். இயற்கையென்றது வாழும் சூழலை இயல்பால் மாற்றமடையச் செய்கின்ற காலநிலையேயாகும். இது ஐம்பூத (நிலம், நீர், வான், காற்று, தீ) செயற்பாட்டாலும் சூறாவளி, ஆழிப்பேரலை, நில அதிர்வு, எரிமலைச் சீற்றம், கடற்கொந்தளிப்பு, வெள்ளப்பெருக்கு, மணற்காற்றுப் போன்றன). இயற்கை முரணிய செயற்பாடுகளினாலும் (சோம்பல், மக்களுக்கெதிரான அழிப்புச் செயற்பாடுகள்) நிலைபெறலாம். இவற்றையே எந்த கருத்துவேறுபாடுமின்றி தெளிவோடு ஊழ்" என்றார்.

உலகில் ஆக்கத்தையும், அழிவையும் தருகின்ற இயல்பையே **"உலகத்தின் இருவேறு இயற்கை"** (கு 374) என்றார் எனலாம். சொல்வன்மை என்னும் அதிகாரத்தில் **"இணரூழ்த்தும் நாறா மலரனையர், கற்றது உணரவிரித்துரையாதார்" (கு 650)** என்றது "இயற்கையில் கொத்தாகப் பூக்கின்ற" மலரைக் குறிக்கின்றது. அத்தோடு இயற்கையையும், இயற்கை முரணியவற்றையும் (ஊழை) எதிர்நின்று வெற்றி பெறவே வள்ளுவனார் **வினைத்திட்பம், ஊக்கமுடைமை, அறிவுடைமை, ஆள்வினையுடைமை, தெரிந்து செயல்** போன்ற அதிகாரங்களை திருக்குறளுள் உள்ளடக்கியுள்ளார். **"ஊழிற் (இயற்கையிற்) பெருவலியாவுள" (380)** என்றவர் **"ஊழையும் உப்பக்கம் காண்பார்" (620)** என்பார் எதிரிடையாக. எனவே ஊழ் என்பது சமய வல்லுநர் கூறுவதுபோல் நல்வினை, தீவினை பற்றிய ஊழ் என்னும் கருத்திற்கு இது முரணானதாகும்.

மறுமை (வீடு பேறு) :-

வள்ளுவர் காட்டும் மறுமையென்பது மதவாணர்கள் சுட்டுகின்ற கற்பனையான மாய உலகமா? அதைக் கண்டு களித்தவர் யார்? அங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைப்பதாகக் கூறப்படும் பல்வகை இன்பங்களில் பங்கு கொண்டவர்கள் யார்? மாந்தனை மனிதநேயனாக்க, பகுத்தறிவாளனாக்க, கல்வி கேள்விகளில் சிறந்த வல்லோன் (வாலறிவன்) ஆக்க, மனதிலெழும் எண்ணற்ற சிந்தனைகளினூடே "ஏரண" (அளவையியல்) முறையில் ஆராய்ந்து, பகுத்துப்பார்ப்பவனாக்க (எண் குணத்தான்), அவனை வாழ்வாங்கு வாழவைக்கும் வாழ்வியல் வழியையே மறுமையென்றார் வள்ளுவனார். வாழ்க்கையென்னும் ஓடத்தில் ஏற்படுகின்ற சீரிய மனமாற்றமே மறுமை. இதை மனதில் வைத்தே "எழுமை, ஏழுபிறப்பு", "புத்தேளீர் வாழும் உலகு", தாமரைக்கண்ணன் உலகு" "தாளுளாள் தாமரையினாள்", "அகல் விசும்புகளார் கோமான்" என்றவாறாக விண்ணை மண்ணில் காட்டிய முனைவன். மறுமை,வீடுபேறு, இன்பம், மகிழ்ச்சி விண்ணில் அல்ல மண்ணில்தான் என வரையறை செய்தார். "ஆன்மீகம்" எனப்பலர் பிதற்றுகிறார்களே. அதன் பொருள் என்ன? தவமா? துறவா? நோன்பா, மாந்த அன்பின் வெளிப்பாடா? அல்லது உயிரிரக்கச் செயற்பாடா (சீவகாருண்யம் – வடமொழிச் சொல்)? அல்லது வள்ளுவர் கூறுவதுபோல் "தொழுகையுள்ளும் படையொடுங்கும்.... (கு. 828) அல்லது தேவரனையர் கயவர்..... (கு. 1037) போன்ற வேடதாரிக் கயவர்களையா?

ஆன்மீகம்" என்பது பொதுமையை, சமன்மையை, உயிரிரக்கத்தை, மாந்த அன்பின் வெளிப்பாட்டை துலக்குவதாகவே செயல்பட வேண்டும். இது பொதுவுடமையாளருக்கே பொருத்தமுடையது. ஆனால் "ஆன்மீகம்" மதவாதிகளின் கைக்குள் அடங்குவதால் மேற்குறித்த பொதுமை அற்றுப் போய் விடுகிறது. ஒருவர் தமது வாழ்நாளிலும், அவர் இவ்வுலக வாழ்வை முடித்துக் கொண்ட பின்னும் அவர் புகழ் வெளிப்பட்டு நிற்கிறது. இதையே புகழென்னும் 24 அதிகாரத்தில் தெளிவுபடுத்துகின்றார். விண்ணுலக வாழ்வு அல்லது மறுமை அல்லது வீடுபேறு என்றதும் இப்புகழ் வாழ்வினால் அவர் தலைமுறையினர் பெறுகின்ற மகிழ்ச்சி, இன்பத்தையே ஆகும்.

இந்திரன் :-

"இயமநியமமே எண்ணிலா ஆதனம்.....", "அயமுறு அட்டாங்கமாவது மாமே" என்னும் திருமூலர் வாக்கின் "அட்டாங்கம்" (வடமொழி) எனச் சொல்லப்படும் 8ஆம் படி நிலையே ஒருவரின் மெய்மறந்த உயர்நினைவு நிலையாகும். இந்நிலையடைந்தவரை **வாலறிவு மக்கள், அறிதுயில் மக்கள், உள்விழி மக்கள், விஞ்ஞையர், ஐந்திர மக்கள் என்று ஐவகையாக**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருங்கலைச்செம்பு என்னும் நூல் பிரிக்கும். **ஐம்புலன்களை அடக்கி காமத்தை வென்றவர்களையே ஐந்திரென்றதாகவும் காலப்போக்கில் இது திரிந்து "இந்திரர்" ஆனதாகவும் அயோத்திதாச** பண்டிதர் கூறுவார்.

சீவகசிந்தாமணியில், வானத்தின் உடுக்களாகச் சுட்டப்பட்ட மேற்குறித்த ஐவகைப் பேரறிஞரான அந்தணரையே இந்திரரெனச் சுட்டுகின்றார். இக்கருத்தை நடுவகமாகக் கொண்டே வள்ளுவரும் **"ஐந்தவித்தான்....'** (கு. 25)" என்னும் குறளை யாத்தாரெனலாம். இன்று சில அறிஞர்கள் மேற்குறித்த குறளின் ஈற்றடி **"ஐந்திரனேசாலும் கரி"** என்பதே சரியானதென்கின்றனர். பரிமேலழகர் தமது உரையில் **கௌதமமுனிவரின்** மனைவி அகலிகையுடன் தேவர்களின் தலைவனாம் **இந்திரன்** என்பான் கூடியிருந்ததைக் கண்ட முனிவர் அகலிகையை கல்லாக்கியும், இந்திரன் உடல் முழுவதும் பெண். உறுப்பை இட்டுச் சாபமிட்டதான தொன்ம (புராண) இழிவுக்கதையை நினைவுபடுத்தி முனிவரின் வல்லமையை விளக்குவார். இன்னோர் **இந்திரன் இருக்கு வேதத்தில் கூறப்படுபவன்.** இவன் மது அருந்தி (சோமபானம்) வெறியாடி **அக்கினி (தீக்கடவுள்)** என்பவனின் உதவியோடு சிந்துவெளித் தொல் தமிழர்கள் (கி.மு 1600) **வீடுகளைத் தீக்கிரை ஆக்கி அவர்களை அத்தீயிலிட்டும், சிந்து ஆற்றின் அணைகளை உடைத்து, மக்கள், அவர்கள் சொத்துக்களும் நீரில் மூழ்க வழி சமைத்தவனுமாவான்.** தமிழர் (இந்து) திருமணத்தில் இழிவுப்பிறவியராகிய (முறுநெறி) பெண்ணையும், சூத்திரராகிய தமிழரையும் இழிவுபடுத்த அம்மி மிதித்தலும், தீ (அக்கினி) வளர்த்தலும் நிகழ்த்தப்படுகிறதென்பதைக் காணலாம்.

வானோர் :-

உயர்நினைவு நிலையடைந்த இறவாப்புகழ் பெற்ற (பலராலும் போற்றப்பட்ட) பல்துறைசார் வல்லுநர்கள் அன்று வானில் தோன்றும் உடுக்களாக விண்மீன்கள் (நட்சத்திரம்) ஐந்திரென, வள்ளுவக்கணியரெனப் போற்றப்பட்டனர். இவ்வுடுக்களுக்கு அவர்களின் பெயர்கள் இடப்பட்டு வானோரெனவும் நினைவுகூரப்பட்டனர். உடலிருந்து (மெய்யியல்) பிரிகின்ற உயிர்காற்றாக அண்டவெளியில் கலந்து விடுகிறது. இந்த அண்டவெளியே விண்ணென்றும் வானென்றும் குறிக்கப்படுகிறது. ஒருவரின் உயிர் வானில் கலக்கும் பொழுது அவர் வானோர் (விண்ணகத்தார்) ஆகிவிடுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல் :-

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்..... (322). இந்நிலையானது தலைவன் தனித்து நின்றோ! தலைவி தனித்து நின்றோ செயற்படுத்த முடியாதது. இல்லறம் என்பது இல் வாழ்வு இணையர்களாலேயே செயலாகும். திருமணமான தலைவியை இல்லவள் (இல் + அவள்) இல்லாள் (இல் + ஆள்), மனையாள் (மனை+ஆள்), மனைவி, இல்லிலார் (இல் +இல்லார்) எனப்பலவாறாக திருக்குறள் கூறுகின்றது. "இல்", இங்கு இல்லாளை, இல்லவளை, மனையாளையே குறிப்பதைக் காணலாம். எனவே இல்வாழ்வான் என்னும் பொழுது மனையாளுடன் இணைந்த தலைவனையே அது குறிக்கும். "இல்வாழ்க்கை" என்றதும் இல்லாளுடன் தலைவனின் இணைந்த வாழ்க்கையையே சுட்டுகின்றது. தமிழர்கள் தாய்வழிச் சமுகமாக வந்தவர்கள். வீடு அல்லது இல்லென்பது பெண்ணுக்கே உரித்துடையதாகிறது. எனவே இல்வாழ்வான் என்றது "தலைவி தலைவனை" ஒரு சேரக்குறிக்கும் சொல்லாகும். சில சொற்கள் ஆண்பால் போல் வெளிப்படையில் காட்சி தந்தாலும், அவை நூண்பொருளில் ஆண், பெண்பாலாகிய இருபாலரையும் சேர்த்துச் சுட்டுவதாகவுள்ளது.

நா, இனம் :-

எழுத்து, சொல் உச்சரிப்பிற்கு அதாவது பேசுவதற்கு உறுதுணையாய் இருப்பது "நா" ஆகும். எனவே "நா" என்பது ஒரு மொழியை அல்லது பலமொழிகளைப் பேசுவதற்கான கருவி. இக்கருவி இல்லையாயின் மொழியென்ற ஒரு சொல்லோ அல்லது உலகின் பல மொழிகளோ தோன்றியிருக்க முடியாது. ஆகவே "நா" என்பது மொழிக்கான திறவுகோலும் அம்மொழியை பாதுகாப்பதற்கான அரணுமாகும். ஒருவரின் நா அசைவு (மொழி), அக்குடும்பத்தின் மொழியாகிப் பின் அக்குமுகாயத்தின் மொழியாக, அவ்வூரின் மொழியாக, அது ஒரு மொழி இனமாக மாறுகின்றது. எனவே தான் வள்ளுவனார் "யாகாவராயினும் நாகாக்க..." (கு127) என்றும் "மனநலம் மன்னுயிர்க்காக்கம் இனநலம் ...." (கு457) என்றார். எனவே நாவை பாதுகாப்பவன் மொழியைக் காப்பாற்றுகிறான். தன் இனத்தைக் காப்பாற்றி வாழ வைக்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர்மிசை :-

சிலவேளைகளில் சிலரைப் பற்றிச் சிலர் குறிப்பிடும் பொழுது, அவனா? அவளா? அவர்கள் நடக்கும் போது ஒரு புல் கூடச் சிலும்பாதே" என்று கூறுவதைக் கேட்கலாம். இது ஒருவரின் அமைதியான, எவற்றிற்கும் எத்தீங்கும் நினையாத, செய்யாதவர்களை குறிப்பதான ஒரு சொல்வழக்கு. தொல்பழம் காலத்தில் சமணத் துறவியர் தாம் செல்லும் வழிகளை மிகவும் மென்மையான மயிலின் இறகு (பீலி)கொண்டு மண்ணை இருபக்கமாகவும் கூட்டி ஒதுக்கிப் பின் அவ்வழியில் செல்வார்களாம். இது ஏனெனில் அவ்வழியில் ஊரும் ஒரு எறும்பு தன்னும் தம் காலில் மிதிபட்டுவிடக்கூடாது என்பதனாலேயாகும். இப்படியான மென்மையான மனத்தையுடையவர்க (பூப்போன்ற)ளையே இச்சொல் கூட்டும்.

நற்குடி :-

மேலோர்குடி, சிறப்புக்குடி தமிழினம் கைக்கொள்ளும் சாதிய இழிவு நடைமுறையை கருதும் சொற்கூறல்ல இது. இது ஒருகுடியின் பண்பை, ஒழுக்கத்தை, நாகரிகத்தை அடிப்படையாகக் கொண்டது. திருவள்ளுவர் கூறுவது "என்பும் உரியர் பிறர்க்கு" என்பாரையும்", "என்றும் பணியுமாம் பெருமை" என்பாரையும், "ஒன்றன் உயிர்ச்செகுத்து உண்ணாதாரையும்", "பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புவோரையும்", "உயிர் நீப்பர் மானம் வரின்" என்பாரையும், "ஒருமை மகளிர்" போன்றோரையும் "நற்குடி, உயர்குடி, ஆன்ற குடி, மேலோர் என்று பலவாறாகப் போற்றுவார்.

மடல் ஏறல் :-

பண்டைய காலத்தில் ஆண் பெண் இருபாலரிக்கிடையே ஆன காதலை பொதுவாக ஆண்களே பலபேரறிய வெளிப்படுத்துவார்களாம். ஆனால் பெண்ணானவள் வெளிப்படுத்துவதானது மிக அரிதாகவே காணப்பட்டது. ஒருபெண் யாரையாவது காதலிக்கிறாளா என்பதை அறிய அவளை பிறைதொழ தோழியர் அழைப்பது வழக்கம். ஆனால் அவள் பிறைதொழச் செல்ல மறுத்தால் அவள் யாரையோ காதலிக்கிறாள் என்பதாக எடுத்துக் கொள்ளப்படுமாம். ஆனால் ஆண்கள் மடல் எனக்கூறப்படும் கருக்குகள் உள்ள வடலி (பனை) மட்டையால் செய்யப்பட்ட மாடொன்றின் மேல் ஏறி ஊர்வலம் வருவார்களாம். இவர்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலில் கருக்குகள் வெட்டிய காயங்களிலிருந்து அரத்தம் வழிந்தோடுமாம். இதைக்கண்டு ஊரார் அவன் காதலிக்கும் பெண்ணின் தந்தையிடம் போய் அவளை அவனுக்கு மணம் முடித்து வைக்குமாறு வேண்டுவாராம். இந்த ஆண் மகனின் செயற்பாடே மடலேற்றமெனப்படுகிறது.

ஒரே சொற்கள் வேறுவேறு அதிகாரங்களில் அவ்வதிகாரங்களின் தலைப்புக்கேற்றவாறு கருத்துக்கள் கூறப்படுகின்றன. தமிழில் ஒருசொல் பலகருத்துக்களை வெளிப்படுத்துவதாகவும், பல சொற்கள் ஒரு சொல்லை வெளிப்படுத்துவதாகவும் உள்ளது யாவரும் அறிந்த ஒன்றே. பொருள் ஒன்றாயினும் அது பல சொற்களால் குறிக்கப்படும்.

02. திருக்குறட் மொழிப்புரை

இறைவணக்கம் (இறவாப்புகழாளர் போற்றி)

1. அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

(கு - 01)

அகரமாகிய உயிரை மொழி இலக்கணத்திற்கு (எழுத்து) முதலாய்க் கொண்டது போல், பகிர்ந்தளிப்பவனாகிய ஆதி பகவனை (ஆதன்) முதலாகக் கொண்டது உலகு.

2. கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்

(கு - 02)

உயர்நினைவு நிலையை அடைந்த தூய அறிவினராகிய (சுடறக்கற்றோர்) வாலறிவனைப் போற்றி அவன் வழி (அடிச்சுவட்டை) நடக்காதார்க்கு அவர்தம் கல்வியால் எப்பயனுமில்லை.

3. இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

(கு - 05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சத்தை, மன இடரை (துன்பம்)த் தருகின்ற இரு தீவினைகளாகிய தெரிந்து செய்யும் தவறு (பொய்மையும்.....), தெரியாமல் நடந்துவிடும் தவறு (நேர்ச்சி) நடுநிலை நின்று பாதுகாக்கும் தலைமைப் பண்புடையவனை பின்பற்றி அவன் வழி நடப்போரைச் சேராது (அணுகாது)

4. *பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்நீர் ஒழுக்க*
நெறிநின்றார் நீடுவாழ் வார்.

(கு - 06)

ஐம்பொறிகளாகிய கண், காது, மூக்கு , வாய், தோல் வழியாய் ஏற்படும் ஐம்புல இச்சைகளை (ஆசை) அடக்கி வாழ்பவர் வழியில் நிற்பவர் நீடியகாலம் வாழ்வார்.

5. *கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்*
தாளை வணங்காத் தலை.

(கு - 09)

நிலா, நாள்மீன்கள் போன்ற கோள்களில் (கேட்டுத்திரிப்பது), மனித ஆக்கங்களான பொறிகளில் காணப்படாத குணங்கள் உடைய சிந்தனையாளனாகிய (எண்ணற்ற வகையாகச் சிந்திப்பது - அளவையியல் முறை) முனைவனைப் போற்றி அவன்வழி செல்லாதவனும் பயனற்றவனே.

வான் சிறப்பு (மழையின் சிறப்பு)

6. *துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்*
துப்பாய தூஉம் மழை.

(கு - 12)

உயிர்களுக்கான உணவுப்பொருட்களை உற்பத்தி செய்வதற்கும், குடிநீராகப் பருகுவதற்கும் காரணியாய் இருப்பது மழையேயாகும்.

7. *கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே*
எதுப்பதூஉம் எல்லாம் மழை.

(கு - 15)

மழை பொய்த்தும் (வறட்சி) , வெள்ளப்பெருக்கெடுத்தும் வாழ்வை சிதைக்க (கெடுக்க) வல்லதும் அப்படித் துன்பப்பட்டார்க்கு துணை நின்று வளம் தருவதும் மழையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. தானம் தவமிரண்டும் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின்.

(கு - 19)

மழை பொழியாமல் விட்டுவிட்டால் இப்பரந்த உலகின் உயிரிரக்கச் செயற்பாடுகள் (கொடை- தானம், ஒறுப்பு- தவம்) செயலிழந்துவிடும்.

9. நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு.

(கு - 20)

நீர் இல்லாமல் இவ்வுலகு (மக்கள்) இயங்கமுடியாதாயின் மழையின்றேல் ஒழுக்கமாகிய பண்பும் நிலைபெறாமல் போகும்.

நீத்தார் பெருமை (நீத்தார் -துறவோர், பற்றற்றவர்)

10. ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலும் கரி.

(கு - 25)

ஐம்புலனாகிய பார்த்தல், கேட்டல், முகர்தல், சுவைத்தல், உணர்தல் போன்றவற்றை அடக்கி உயர்நினைவு நிலையில் இறவாப் புகழ்பெற்று வானத்து உடுவான ஐந்திரனே (இந்திரனே) இதற்குச் சிறந்த சான்றாவான்.

11. சுவையொளி ஊறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு.

(கு - 27)

பார்த்தல் (ஒளி), கேட்டல் (ஓசை), சுவைத்தல், முகர்தல் (மணம்) ஊறு (தொடுவுணர்வு) ஆகியவற்றின் விரிவறிந்த வல்லோர்களின் அறிவித்தல்தான் இவ்வுலகுள்ளது.

அறன் வலியுறுத்தல் (கொடை வலியுறுத்தல்)

12. அழுக்கா றவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்ற தறம்.

(கு - 35)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறாமை, ஆசை (பற்று), சீற்றம், சுடுசொல் ஆகிய நான்கு தீய குணங்களிலுமிருந்து நீங்கிச் செயற்படுவதே அறமெனப்படும்.

13. அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தான் இடை.

(கு - 37)

சிவிகையைச் சுமப்பவனுக்கும், சிவிகையில் இருப்பவனுக்கும் உள்ள இடைவெளி (தொழில் வேறுபாடு) அவர்களின் அறத்தின் விளைவால் ஏற்பட்டன எனக் கொள்ள வேண்டாம்.

14. செயற்பால தோரும் அறனே ஒருவற்
குயற்பால தோரும் பழி.

(கு - 40)

முயற்சி மேற்கொண்டு அதனூடாய்ச் செய்யத்தக்கது அறனே. அத்தோடு செய்யாமற் தவிர்க்கத் தக்கது பழிச்செயல்களே.

இல்வாழ்க்கை

15. பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்.

(கு - 44)

பழிக்கு ஆளாகாமல் பொருள்தேடி அவற்றைப் பிரித்து மற்றவர்க்கும் உண்ணக் கொடுத்து வாழும் இல்லறத்தார்க்கு எந்தக் காலத்திலும் அவர்வழியில் குறைவேற்படமாட்டாது.

16. ஆற்றின் ஒழுக்கி அறனீழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து.

(கு - 48)

பிறர்க்கும் அறவழி காட்டி ஒழுகச் செய்து தாமும் அவ்வழி நின்று ஒழுகுவோரின் இல்லறம் (இல்வாழ்க்கை) பற்றறுத்து தம்மை ஒறுத்து தவம் செய்வாரை விட வலிமையும் மேன்மையும் உடையதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை.

(கு - 55)

கண்ணால் காணாத தெய்வத்தைப் போற்றாதவளாக (தொழாத) தன் கணவனை போற்றி எழுபவள் அல்லது கணவன் போற்றி புகழ்ந்து (உறக்கத்திற்கு முன்/ பின்) எழுபவளாக இருக்கும் மனைவி பெய்யென்ற அளவில் பெய்யும் மழைக்கு ஒப்பானவள்.

18. புகழ்புரிந்த இல்லிலோர்க் கில்லை இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை.

(கு - 59)

மேன்மைமிக்க புகழ்தரக்கூடிய நற்பண்புகள் அமையப்பெற்ற இல்லாளை அடையாத கணவனுக்கு அவர்களைத் தூற்றுவார் முன் காளை போல் நடக்கும் பெருமிதநடை இல்லை.

மக்கட் பேறு

19. எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்.

(கு - 62)

குற்றமற்ற நேர்மையாளரான பண்புடை மக்களை ஒருவர் பெறுவாராயின் அவரின் ஏழுதலை முறைகளுக்கும் அவர் பழிச்சொல்லுக்கு ஆளாகமாட்டார்.

20. மகன்தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்எனும் சொல்.

(கு - 70)

மகனானவன் தந்தைக்குச் செய்கின்ற பல்வகைச் சிறப்புக்களையும் கண்டு, இவனை மகனாகப் பெற இவனது தந்தை என்ன நற்செயல் இவனுக்குச் செய்தானோ என்று புகழ்ந்து சொல்லும் சொல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடமை (அன்பே உருவானர்)

21. அன்பிலார் எல்லாம் தமக்குரியவர். அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.

(கு - 72)

அன்பில்லாதவர் (கல்நெஞ்சர்) எல்லாப் பொருட்களையுமே தமதென்று கூறுவர். அன்புள்ளவர்கள் (உயிரிரக்கம்) உடலையும் உறுப்புக்களையும் கூட பிறர்க்கு உரியதாக கொள்வர் (கொடையாக வழங்குவர்)

22. புறத்துறப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை
அகத்துறுப் பன்பி லவர்க்கு?

(கு - 79)

உடலின் அகத்துறுப்பாகிய மனதில் அன்பில்லாவிட்டால் அவர்களின் அழகான புற உறுப்புக்களால் என்ன பயன்?

விருந்தோம்பல் (நினையாவேளை வருபவர்)

23. விருந்து புறத்தாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று.

(கு - 82)

விருந்தினராய் வந்தவர் வீட்டின் வெளியே இருக்க இறவா நிலையைத் தரும் மருந்தை (அமிழ்தம்) தன்னும் உண்பது ஏற்புடையதன்று.

24. உடமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
மடமை மடவார்கண் உண்டு.

(கு - 89)

செல்வம் இருக்கும் போது வறுமையென்பது விருந்தினரைப் பேணாது தவிர்க்கும் அறியாமை ஆகும். இது அறிவில்லாதவர் இடத்தில் உண்டு.

25. மோப்பக் குழையும் அனிச்சம் முகம்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.

(கு - 90)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகர்ந்தவுடனேயே மென்மையான [illegible]னிச்சம் பூ வாடிவிடும். அதைப்போல் முகச்சுளிப்பை கண்டவளவிலேயே தன்மானமுள்ள விருந்தினர் வாடிப்போவார்.

இனியவை கூறல்

*26. பணிவுடையன் இன்சொல னாதல் ஒருவற்
கணிஅல்ல மற்றுப் பிற.*

(கு - 95)

மனதிற்கு மகிழ்வைத் தருகின்ற பெருமையாளனின் (பணிவாளன்) இனிய சொற்களே அவனுக்கு அணிகலமாகும். ஏனையவை அணிகலங்களல்ல.

*27. சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையும் இன்பம் தரும்.*

(கு - 98)

பிறர்க்குத் துன்பத்தைத் தருகின்ற பண்பிலா (சிறுமை)ச் சொற்களைத் தவிர்த்து கூறும் இனிய சொற்கள் ஒருவர்க்கும் வாழும் காலத்தில் (இம்மை) மட்டுமல்லாது இறவாப்புகழுடை (மறுமை) க் காலத்திலும் இன்பம் தரும்.

*28. பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலின் பெரிது.*

(கு - 103)

பயனை எதிர்பாராது ஒருவர் செய்கின்ற உதவி சீர்தூக்கி ஆராய்ந்தால் அந்த நன்மை மாவாரியை (பெருங்கடல்) விடபெரிதாகும்.

*29. எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கள்
விழுமம் துடைத்தவர் நட்பு.*

(கு -107)

ஒருவர் வாழ்வுக் காலமாகிய ஏழு பருவத்திலும் , ஏழு தலைமுறைகளிலும் தமக்கு ஏற்பட்ட துன்பத்தைப் போக்கியவரை நினைவு கூர்ந்து போற்றுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலைமை (பக்கச்சார்பின்மை)

30. நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல்.

(கு -113)

ஒரு ஆக்கமானது தொடக்கத்தில் நன்மை பயப்பதுபோல் வெளிப்பட்டாலும் நடுநிலை நீங்கி வருமாயின் அந்நலங்களை உடனேயே விட்டுவிடவேண்டும்.

31. சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி.

(கு -118)

சுமையைச் சமம் செய்து காட்டுகின்ற துலாக்கோல் போல் பக்கச்சார்பு இல்லாமல் நடுநிலையைப் பேணலே சான்றோரின் பண்பாகும் (அணிகலன்).

அடக்கமுடைமை

32. காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்
அதனினூங் கில்லை உயிர்க்கு

(கு -122)

அடக்கத்தை உறுதிப்பண்பாகக் கொண்டு காக்க வேண்டும். இதைவிட மேம்பட்ட ஆக்கம் வேறொன்றுமில்லை.

33. யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

(கு -127)

நாவென்பது மொழிக்குரியது. எனவே எதைப் பாதுகாக்கத் தவறினாலும் மொழியைப் பாதுகாக்க வேண்டும். இல்லையேல் பின்வரும் தலைமுறை அவர்களை குற்றம் கூறித் தூற்றுவார்கள்.

ஒழுக்கமுடைமை

34. ஒழுக்க முடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்.

(கு -133)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லொழுக்கமே உயர்குடிப்பிறப்பின் தன்மையாகும். ஒழுக்கம், தவறுதல் இழிந்த குடிப்பிறப்பின் தன்மையாகிவிடும்.

பிறனில் விழையாமை (அடுத்தவர் மனைவியை விரும்பாமை)

35. பகைபாவம் அச்சம் பழியென நான்கும்
இகவாவாம் இல்லிறப்பான் கண்.

(கு -146)

பகை, பாவம், அச்சம், பழி ஆகிய நான்கு தீய குணங்களும் பிறன் மனைவியை விரும்பிச் செல்பவனிடம் நீங்காமல் நிலைபெறும்.

36. நலக்குரியார் யாரெனின் நாமநீர் வைப்பில்
பிறற்குரியாள் தோள்தோயா தார்.

(கு -149)

நன்மைகளுக்கெல்லாம் உரிமைகொண்டவர் யாரென்றால் இக்கடல் சூழ்ந்த உலகில் பிறனுடைய மனைவியின் தோளைப் பொருந்தாதவரே.

பொறையுடைமை (பொறுமை பேணுபவர்)

37. இன்மையுள் இன்மை விருந்தொரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை.

(கு -153)

வறுமையிலும் வறுமை விருந்தினரை ஓம்பாமல் தவிர்த்தலாகும் வல்லமையுள் வல்லமை அறிவற்றார் செய்யும் தீச்செயலைப் பொறுத்தலாகும்.

38. உண்ணாது நோற்பார் பெரியார் பிறர்சொல்லும்
இன்னாச்சொல் நோற்பாரின் பின்.

(கு -160)

உண்ணாது ஒறுத்தல் செய்யும் பெரியோரைக் காட்டிலும் பிறர் தீச்சொல், பொறுப்பார் மேன்மையானவர்களே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுக்காறாமை (பொறாமை இன்மை)

39. அழக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுளி உய்த்து விடும்.

(கு -168)

பொறாமையென்னும் குணம். அக்குணமுடையானின் வளத்தை (செல்வம்) அழிப்பதுடன் ஏனைய தீச்செயல்களிலும் தள்ளிவிடும்.

40. அழுக்கற் றகன்றாரும் இல்லை.அஃதில்லார்
பெருக்கத்தில் தீர்ந்தாரும் இல.

(கு -170)

பொறாமைக் குணத்தால் வளம் பெருகப் பெற்றவர்களுமில்லை. நற்பண்பாளரின் வளம் குறைந்து ஏழ்மைப்பட்டாரும் இல்லை.

வெஃகாமை (பேராசை கொள்ளாமை)

41. அஃகி யகன்ற அறிவென்னாம் யார்மட்டும்
வெஃகி வெறிய செயின்.

(கு -175)

எவரிடத்திலும் பொருள் பறிக்க (கவர) விரும்பி ஒருவர் செயற்படுவாராயின் அவர் ஆய்ந்தறிந்த மெய்யறிவால் என்ன பயன்?

42. அஃகாமை செல்வத்திற் கியாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள்.

(கு -178)

ஒருவருடைய வளம் (செல்வம்) குறையாதிருப்பதற்கு வழி எதுவென்றால் அது அவன் பிறர்பொருள் விரும்பாதிருத்தலேயாகும்.

புறங் கூறாமை (இல்லாத இடத்தில் ஒருவர் குறைகூறாமை)

43. பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி
நட்பாடல் தேற்றா தவர்.

(கு -187)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறரொடு மகிழ்வுடன் உரையாடி நட்புக்கொள்ளும் திறன் அற்றவரே, புறங்கூறி பிரிவை உண்டாக்கி இனிய உறவினரையும் பிரித்து விடுவர்.

44. அறனோக்கி ஆற்றுக்கொல் வையம். புறனோக்கிப்
புன்சொல் உரைப்பான் பொறை.

(கு -189)

அக்கம் பக்கம் பார்த்து ஒருவரை பற்றிப் புறங்கூறுபவனையும் தாங்குவது அறச்செயல் என நினைத்துத்தான் இவ்வையம் செயற்படுகின்றதோ!

பயனில சொல்லாமை (பயன் இல்லாதென கூறாமை)

45. சீர்மை சிறப்பொடு நீங்கும் பயனில
நீர்மை யுடையார் சொலின்.

(கு -195)

பயனற்ற சொற்களை சிறந்த பண்புடையார் சொல்லுவார்களேயானால் அவருடைய மேன்மையும் புகழும் அவரிடமிருந்து நீங்கிவிடும்.

46. சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லறக்
சொல்லிற் பயனிலாச் சொல்.

(கு -200)

ஒன்றை சொல்லுமிடத்து பயனற்றவற்றைத் தவிர்த்து பயனுடைய சொற்களைச் சொல்ல வேண்டும்.

தீவினையச்சம் (தீச்செயல் செய்ய அஞ்சுதல்)

47. அறிவினுள் எல்லாம் தலையென்ப, தீய
செறுவார்க்கும் செய்யா விடல்.

(கு -203)

அறிவில் தலைபோல் முதன்மையானது தமக்குச் தீச்செயல்களைச் செய்தவர்களுக்கு அதைத் திருப்பிச் செய்யாது விடலாகும் என்பர் ஆய்ந்தோர்.

48. தீயவை செய்தார் கெடுதல், நிழல்தன்னை
வீயா தடிஉறைந் தற்று.

(கு -208)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்தவருக்குத் தீங்கு செய்தவர் கேட்டை அடைதலென்பது அவனது நிழலானது அவனைவிட்டு நீங்காது, அவன் காலடியில் தங்கியிருப்பது போன்றதாகும்.

ஒப்புரவறிதல் (பொதுநலம் அறிதல்)

49. கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ உலகு.

(கு -211)

உலகம் உயிர்வாழ உதவும் மழைக்கு இவ்வுலகம் என்ன கைமாறு செய்கிறது. அதுபோல் உலக நலன் கருதும் ஒப்புரவாளர் செய்யும் உதவிகளும் கைமாறு எதிர்பாராதவையே.

50. ஒப்புரவி னால்வரும் கேடெனின், அஃதொருவன்
விற்றுக்கோள் தக்க துடைத்து.

(கு -220)

பொதுநலம் செய்வதால் (ஒப்புரவால்) கேடுவருமாயின் அக்கேடு ஒருவன் தன்னை விற்றுக்கூட வாங்கிக் கொள்ளும் தகுதி உடையது.

ஈகை (கொடை)

51. ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல், அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்.

(கு -225)

பசித்துன்பத்தைப் போக்குவது மற்றெல்லாக் கொடைகளையும் விடச்சிறந்தது. ஆனால் அப்பசித்துயர் வராமல் தடுத்து நிறுத்த முயலவைப்பது அதைவிட மேன்மையானது.

52. ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல், தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்.

(கு -228)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பொருளை வறியவர்க்கு கொடாது சேர்த்துப் பிறரிடம் இழக்கும் கல்நெஞ்சர் (கொடியவர்) கொடுத்து மகிழும் இன்பத்தை அறியாதவர்களே.

புகழ் (பெருமை)

53. நத்தம்போல் கேடும் உளதாகும் சாக்காடும்
வித்தகர்க் கல்லால் அரிது.

(கு -235)

புகழ்மேம்பட மேம்பட வாழ்வில் வறுமையும் (சங்கைச் சுடச்சுட வெண்மையாவது போல்) புகழ்நிலைபெற நிற்பதாகிய சாவும்; மெய்யறிவும், நுண்ணறிவும், உண்மையறிவும் மிக்காருக்கேயன்றி ஏனையோர்க்கில்லை.

அருளுடைமை (எல்லாவுயிர்களிடமும் அன்புடைமை)

54. பொருளற்றார் பூப்பார் ஒருகால், அருளற்றார்
அற்றார் மற்றாதல் அரிது.

(கு -248)

பொருளற்றவர் ஒரு காலத்தில் வளம் பெறமுடியும். ஆனால் அருளற்றவர் எக்காலத்திலும் சிறந்து விளங்காத பயன் அற்றவரேயாவார்.

புலால் மறுத்தல் (ஊன்தவிர்த்தல்)

55. கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்.

(கு -260)

உயிரைக் கொல்லாது, புலால் உண்ணாது வாழ்கின்றவனை உலக மாந்தர் போற்றிப் புகழ்ந்து மதிப்பளிப்பர்.

தவம் (துன்பம் செய்யாமையும், பொறுத்தலும்)

56. உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு.

(கு -261)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்கு வரும் துன்பத்தைப் பொறுத்தலும், மற்ற உயிர்களுக்கு துன்பத்தை விளைவிக்காமல் இருப்பதுமே தவத்தின் வடிவமாகும்.

கூடா ஒழுக்கம்

57. வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும்.

(கு -271)

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் கபட மனத்தான் தன் இழிவுப் பண்புகளை வெளிக்கு மறைப்பினும் அவனுள் உள்ள ஐம்பூதங்களும் (நீர், நிலம், தீ, வான், காற்று) எள்ளி நகைக்கும்.

58. கணைகொடிது யாழ்கோடு, செவ்விதாங் கன்ன
வினைபடு பாலால் கொளல்.

(கு -279)

நேராக அமைந்த அம்பு கொடுமையானது. வளைவாக அமைந்த யாழும் இனிமை செய்யும். அவற்றைப்போல் ஒவ்வொருவரையும் அவர் செயலால் அறிந்து கொள்ள வேண்டும்.

கள்ளாமை (திருட நினையாமை)

59. எள்ளாமை வேண்டுவான் என்பான் எனைத்தொன்றும்
கள்ளாமை காக்கதன் நெஞ்சு.

(கு -281)

பிறரால் இகழப்படாமல் வாழ விரும்புபவன் எத்தன்மையான பொருளையும் பிறரிடமிருந்து பறித்துக்கொள்ள விரும்பாது இருந்து தன் நெஞ்சைக் காக்கவேண்டும்.

வாய்மை (உண்மை)

60. பொய்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்.

(கு -292)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவருக்கும் எள்ளளவு தீமையையும் விளைவிக்காத செயலுக்காக பொய்யுரைத்தலும் கூட அது வாய்மையின் இடத்தில் வைக்கக்கூடியதாகும்.

61. *பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற*
செய்யாமை செய்யாமை நன்று.

(கு -297)

வாழ்வில் வாய்மையையே நெறியாகக் கொண்டால் அது அறமாகும். செய்யக்கூடாதவற்றைச் செய்யாமல் இருத்தல் சிறப்பாகும்.

வெகுளாமை (கோபப்படாதிருத்தல்)

62. *சினமென்னும் சேர்தாரைக் கொல்லி இனமென்னும்*
ஏமப் புணையைச் சுடும்.

(கு -306)

சினம் உள்ளவர் அதனாலேயே அழிக்கப்படுவதுமில்லாமல் அவருக்குப் பாதுகாப்பாயிருக்கும் மிதவை போன்ற சுற்றத்தாரையும் அழிக்கும்.

63. *சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு*
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று.

(கு -307)

சினம் கொள்ளுதலைத் தன் வலிமையாகக் கொண்டவன் கெடுவது, நிலத்தில் ஓங்கி அடித்தவன் கை நொறுங்குவது போன்றது.

இன்னா செய்யாமை (துன்பம் செய்யாமை)

64. *எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்*
மாணாசெய் யாமை தலை.

(கு -317)

எவ்வளவு சிறியதாயினும், எப்பொழுதாயினும், எவர்காயினும் மனத்தோடு பொருந்தாத சிறுமைச் செயலை செய்யாது விடுதல் மேன்மையானதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

65. தன்னுயிர்க் கின்னாமை தானறிவான் என்கொலோ
மன்னுயிர்க் கின்னா செயல்.

(கு -318)

தனக்குத் துன்பம் தருவது இதுவென அறிந்த ஒருவன். அத்தீங்கை ஏனைய உயிர்களுக்கு செய்வது அறிவுடமையாகுமா? அது அறிவு ஆகாது.

கொல்லாமை (கொலை எண்ணாமை)

66. நல்லா றெனப்படுவ தியாதெனின், யாதொன்றும்
கொல்லாமை சூழும் நெறி.

(கு -324)

நன்னெறியென அருளாளரால் கூறப்படுவது எவ்வுயிரையும் கொலை செய்யாது தவிர்த்தலேயாகும்.

67. கொலைவினைய ராகிய மாக்கள் புலைவினையர்
புன்மை தெரிவார் அகத்து.

(கு -329)

கொலைத் தொழிலின் இழிவைத் தெரிந்தவர்க்குக் கொலைத் தொழில் செய்பவராகிய எவரும் புலைத் தொழில் செய்பவரே ஆவார்.

நிலையாமை (நிலைத்து நிற்காதது)

68. அற்கா இயல்பிற்றுச் செல்வம், அதுபெற்றால்
அற்குப ஆங்கே செயல்.

(கு -333)

செல்வம் ஒருவரிடத்தில் நிலைத்து நிற்காதது. எனவே அச்செல்வம் கிடைத்த போது அது நிலையான அற வழிகளில் பயன்படுத்த வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறவு (பற்று அறுத்தல்)

69. அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை, விடல்வேண்டும்
வேண்டிய எல்லாம் ஒருங்கு.

(கு -343)

ஐம்புலச் செயற்பாடுகளையெல்லாம் (பார்த்தல், கேட்டல், முகர்தல், சுவைத்தல், உணர்தல்) ஒருசேரவிடுத்து ஐம்பொறிகளாகிய கண், காது, மூக்கு, நா, தோல் புலப்படுத்தும் புலன்களின் ஆசைகளை அடக்கி வெல்லுதல் வேண்டும்.

70. பற்றி விடாஅ இடும்பைகள், பற்றினைப்
பற்றி விடாஅ தவர்க்கு.

(கு -347)

நான், எனது எனும் பற்றுக்களை கைக்கொண்டு, அவற்றை விடாதவரை துன்பங்களும் விடாமல் பற்றிக்கொள்ளும்.

மெய்யுணர்தல் (உண்மை அறிதல்)

71. எப்பொருள் எத்தன்மைத் தாயினும், அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

(கு -353)

எப்பொருள் எவ்வியல்பினதாய் தோன்றினாலும் அதை அப்படியே கொள்ளாமல் அப்பொருளினூடாக காணப்படும் உண்மைப் பொருளைக் கண்டுகொள்வதே தெளிந்த அறிவாகும்.

72. காமம், வெகுளி, மயக்கம் இவைமூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய்.

(கு -360)

விருப்பு, கோபம், அறியாமை ஆகிய மூன்றின் பயமும் ஒருவர்க்கு அற்றுப்போகுமானால் அவர்க்கு எந்த இன்னலும் இல்லாமல் அவை அழிந்துபோகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவா அறுத்தல் (ஆசையை விடுதல்)

73. அவாஎன்ப எல்லா உயிர்க்குமெஞ் ஞான்றும்
தவாஅப் பிறப்பீனும் வித்து.

(கு -361)

எல்லா உயிர்களுக்கும் எக்காலத்திலும் நீங்கா அறியாமைத் துயரைத் தருவதை பேராசை என்று கூறுவர்.

74. அவா இல்லார்க் கில்லாகும் துன்பம் அஃதுண்டேல்
தவாஅது மேன்மேல் வரும்.

(கு -368)

ஆசை அற்றவர்க்கு எந்நாளும் துன்பமில்லை. ஆனால் ஆசையோ தொடர்ந்து துன்பத்தைத் தரும்.

ஊழ் (இயற்கை ஒழுங்கு)

75. ஆகூழால் தோன்றும் அசைவின்மை கைப்பொருள்
போகூழால் தோன்றும் மடி.

(கு -371)

பொருட்பெருக்கமும், இயற்கையும் ஒன்று சேரும்போது (ஆகூழ்) சோர்வின்மையை தோற்றுகிறது. இயற்கையும் கைப்பொருள் இழப்பும் சேரும்போது (போகூழ்) சோம்பல் (சோர்வு = மடி) தோன்றும்.

76. நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை அறிவே மிகும்.

(கு -373)

நுண்ணிய பொருளமைந்த நூல்களை ஒருவன் கற்றிருந்தாலும் அவனது மரபுவழி (தலைமுறைவழி) உள்ளார்ந்த தன்மையில் அமைந்த உண்மை அறிவே மிகுந்து நிற்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

77. பரியினும் ஆகாவாம் பால்அல்ல உய்த்துச்
சொரியினும் போகா தம.

(கு -376)

இயற்கை ஒழுங்கில் தமக்கு உரியவையல்லாத பொருளை வருந்திக் காப்பாற்றினாலும் அது கிட்டாது. தமக்குரியதை விரும்பாது எவ்வளவு விலக்கித்தள்ளினாலும் அவை தமதே ஆகிவிடும்.

78. ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்.

(கு -380)

இயற்கையை (ஊழை) விட வலிமைமிக்கவை வேறெவை, இதை விலக்கும் பொருட்டு ஆக்கவழியொன்றை ஆராய்ந்து செயற்படுத்தும் பொழுதும் அதுவே முன்வந்து நிற்கும்.

இறைமாட்சி (ஆட்சிச்சிறப்பு)

79. படை குடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு.

(கு -381)

படை, குடி, உணவு, அமைச்சு, நட்பு, பாதுகாப்பு ஆகிய ஆறு உறுப்புக்களைக் கொண்டு ஆட்சி செய்பவனே அரசருள் ஆண்சிங்கம் போன்றவன்.

80. முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப்படும்.

(கு -388)

நீதிநெறிமுறை, நிடுவுநிலை கொண்டு நாட்டைக் காத்துவரும் ஆட்சியாளன் நாட்டு மக்களால் இறைவன் எனும் புகழ்நிலையில் வைத்துப் போற்றப்படுவான்.

கல்வி (கற்றல்)

81. எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு.

(கு -388)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவையிலும் (எண் = ஏரணம்) இலக்கணமும் (எழுத்து) உலக மக்கள் உண்மையறிவு, மெய்யறிவு; நுண்ணறிவைப் பெறுவதற்கு அவர்களுக்கு இரு கண்கள் போன்று செயற்படுவன என்பர் கற்றார்.

82. *யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்*
சாந்துணையும் கல்லாத வாறு.

(கு -397)

கற்றாருக்கு எந்நாடும் தம்நாடு, எந்த ஊரும் தம் ஊர், அப்படியிருக்கும் போது ஒருவன் தான் இறக்கும் வரை கற்றுக்கொண்டிராமை ஏன்?

கல்லாமை (கற்காதிருத்தல்)

83. *நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்*
மண்மாண் புனைபாவை யற்று.

(கு -407)

நுண்ணிய ஆழ்ந்த அகன்ற அறிவற்றவன் கொண்டுள்ள தோற்றமும், பொலிவும், மண்ணில் வனையப்பட்ட பொருளுக்கு நிறம் தீட்டியதற்கு (பொம்பைக்கு) ஒப்பானதாகும்.

கேள்வி (கேட்டல்)

84. *கற்றில னாயினும் கேட்க, அஃதொருவற்*
கொற்கத்தின் ஊற்றாம் துணை.

(கு -414)

கல்லாதவனாயினும் கேட்பானாக இருந்தால், அக்கேள்வி, நீர் அற்ற வறட்சிப்பொழுதில் ஆற்றில் ஊறும் நீர்போல உதவியானது.

85. *பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லார் இழைத்துணர்ந்*
தீண்டிய கேள்வி யவர்.

(கு -417)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுட்பமாக உணரும் கேள்வியறிவையுடையவர் சிலவேளை பொருளைத் தவறாக உணர்ந்தாலும் எச்செய்தியையும் அறியாத்தனமாகச் சொல்லார்.

86. செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் ஏன்.

(கு -420)

செவியால் உணரப்படும் சுவையை உணராமல் வாய்ச்சுவை உணர்வே உணர்வெனக் கொண்ட அறிவிலார் இருந்தென்ன? அவர் இறந்தென்ன?

அறிவுடைமை

87. அறிவற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா அரண்.

(கு -421)

அறிவு அழிவு வராமல் பாதுகாக்கும் பயனுள்ள கருவி. அத்தோடு பகைவர்கள் உட்புகுந்து அழிக்கமுடியாத பாதுகாப்பு அரணுமாகும்.

88. எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு.

(கு -424)

சொல்பவற்றை அளவையில் (எண் = ஏரணம்) முறையில், கேட்பவர் மனதில் பதியுமாறு சொல்லி, மற்றவர் சொல்பவற்றையும் நுட்பமான முறையில் அறிந்து கொள்வதே அறிவாகும்.

குற்றங்கடிதல் (குறை தவிர்த்தல்)

89. இவறலும் மாண்பிறந்த மானமும் மாணா
உவகையும் ஏதம் இறைக்கு.

(கு -432)

கருமித்தனமும் (கஞ்சத்தனம்), பெருமையில்லா மானமும், பண்பற்ற வழிவரும் மகிழ்ச்சியும் ஆளுபவனுக்கு குற்றங்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியாரைத் துணைக்கோடல் (சான்றோரை சார்தல்)

90. பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்.

(கு -450)

அறிவுடைச் சான்றோரின் தொடர்பைக் கைவிடுதல் பலருடைய பகையைத் தேடிக்கொள்வதை விடப் பலமடங்கு தீமையானதாகும்.

சிற்றினம் சேராமை. (இழிக்குணத்தாருடன் சேராமை)

91. மனநலம் மன்னுயிர்க் காக்கம் இனநலம்
எல்லாப் புகழும் தரும்.

(கு -457)

மனத்தின் நல்லாற்றலே மக்கள் உயிருக்குப் பெருவளத்தை நல்குவது இனத்தின் நலத்திற்காய் வினைசெய்வார்க்கு எல்லாப்புகழையும் அது தரும்.

தெரிந்து செயல்வகை (ஆராய்ந்து செயலாற்றல்)

92. தெரிந்த இனத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்
கரும்பொருள் யாதொன்றும் இல்.

(கு -462)

ஒரு செயலைச் செயற்படுத்து முன் அது பற்றித் தெரிந்த தம் இனத்தோடும், தாமும் ஆராய்ந்து செய்யும் போது அவர்க்கு அரிதென ஒன்றுமில்லை.

93. நன்றாற்ற லுள்ளும் தவறுண் டவரவர்
பண்பறிந் தாற்றாக் கடை.

(கு -469)

ஒவ்வொருவருடைய இயல்புகளையும் அறிந்து அவரவர்க்கு ஏற்றதுபோல் செய்யாவிட்டால், நல்லவை செய்தாலும் தவறுண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலியறிதல் (வலிமை அறிதல்)

94. பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்

(கு -475)

மயிலிறகு (பீலி) ஏற்றிய வண்டியானாலும் அப்பண்டத்தை அளவிற்கு மிகுதியாய் ஏற்றினால் கட்டாயம் வண்டியின் அச்சுமுறியும்.

காலம் அறிதல் (பருவம் அறிதல்)

95. கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து.

(கு -490)

செயலில் வெற்றிபெற வேண்டுமானால் நீர்க்குளத்தில் பொறுமையுடன் கொக்குப்போல காத்திருந்து நேரம் வந்தபோது மீனைக்கொத்தியெடுப்பது போல் தனது செயலை விரைந்து முடித்துவிடவேண்டும்.

இடனறிதல் (தகுந்த இடம் அறிதல்)

96. காலாழ் களரில் நரியிடும் கண்ணஞ்சா
வேலாழ் முகத்த களிறு.

(கு -500)

பாகரின் சினத்திற்கு அஞ்சாததும், பகைவரின் வேல் ஆழப் பதிந்த (குழும்பு) முகத்தையும் உடைய யானையின் கால் சேற்று (களரி) நிலத்தில் புகுமானால் சிறுநரியும் வென்றுவிடும்.

தெரிந்து தெளிதல் (தகுதியானவரைத் தெரிதல்)

97. அறம்பொருள் இன்பம் உயிரச்சம் நான்கின்
திறம்தெரிந்து தேறப்படும்.

(கு -501)

அறவழியில் நிலைத்து, பொருள்வழியில் நேர்மையுடனும், இன்ப வழியில் பண்புடனும் தன்னுயிர்க்காக அஞ்சாதவருமான இந்நான்கு தன்மைகளையும் பெற்ற ஒருவனே ஒரு தொழிலுக்குத் தகுதியுடையவனாகத் தெளியப்படுவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

98. தேரான் தெளிவும், தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும்.

(கு -510)

ஒரு தொழிலுக்கு ஒருவரை ஆராயாது தெரிவு செய்வதும், ஆராய்ந்து தெரிவு செய்த பின் (தகைமையர்) அவர்மீது ஐயுறவு கொள்வதும் தொடர்ந்த துயரைத் தரும்.

தெரிந்து வினையாடல் (செயற்திறன் அறிந்து ஆளுதல்)

99. வாரி பெருக்கி வளம்படுத் துற்றவை
ஆராய்வான் செய்க வினை.

(கு -512)

வருவாய் வரும் வழிகளைப் பெருக்கி, அதனால் செழிப்பை (வளம்) உண்டு பண்ணி, வரும் இடர்களை ஆராய்ந்து களைய வல்லவரே செயல்வீரன் ஆவான்.

சுற்றம் தழுவல் (உறவைப் பேணுதல்)

100. விருப்பறாச் சுற்றம் இயையின் அருப்பறா
ஆக்கம் பலவும் தரும்.

(கு -522)

அன்பு (பற்று) நீங்காத உறவுகள் (சுற்றம்) ஒருவனுக்கு இருக்குமானால் அது அவனுக்குப் பலவகை உயர்ச்சி நலன்களைத் தரும்.

பொச்சாவாமை (மறதி இல்லாமை)

101. புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டும் செய்யா
திகழ்ந்தார்க் கெழுமையும் இல்.

(கு -538)

சான்றோர் புகழ்ந்து சொல்லிய செயல்களைப் போற்றிச் செய்ய வேண்டும். அப்படிச் செய்யாது மறந்தவர்க்கு தாம் வாழும் ஏழு பருவங்களில் கூட புகழ் கிட்டாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்கோன்மை (நடுநிலை ஆட்சி)

102. இயல்புளிக் கோலோச்சம் மன்னவன் நாட்ட
பெயலும் விளையுளும் தொக்கு.

(கு -545)

நாட்டின் இயற்கையை (காடு, நிலம், நீர்நிலை போன்றன) பாதுகாத்து (இயற்கைச் சமநிலை பேணி) ஆளுபவனின் நாட்டில் பருவமழையும், குறையாத விளைவும் நிரம்பியிருக்கும்.

103. வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉம் கோடா தெனின்.

(கு -546)

நாட்டின் தலைவன் நீதிதவறாத நடுநிலையாளனாய் (செங்கோன்மை) ஆட்சி செய்தால், அவன் படை (வேல்) அவனுக்கு வெற்றிதர வேண்டுவதில்லை. அவன் செங்கோன்மையே அவன் வெற்றியாகும்.

கொடுங்கோன்மை (இழிகுணன் ஆட்சி)

104. கொலை மேற்கொண்டாரின் கொடிதே அலைமேற்கொண்
டல்லவை செய்தொழுகும் வேந்து.

(கு -551)

குடிகளை வருத்தும் முறையில்லாத செயல்களை தொழிலாகச் செய்யும் ஒரு ஆட்சியாளன் ஒரு கொலைத் தொழிலைக் கைக்கொண்டவனைவிடக் கொடியவன்.

105. வேலொடு நின்றான் "இடு"என் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு.

(கு -552)

ஆட்சித்தலைவன் என்ற இறுமாப்பில் குடிகளைத் துன்புறுத்திப் பொருள் பறிப்பவன் (சேர்ப்பவன்) கொலை ஈட்டியுடன் நிற்கும் ஒரு வழிப்பறிக் கொள்ளைக்காரனுக்கு ஒப்பானவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

106. அல்லற்பட் டாற்றா தழுதகண் ணீர்அன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை.

(கு -555)

ஆட்சியாளனால் துன்புறுத்தப்பட்டு, தொல்லைப்படும்போது அங்கு மக்கள் விடும் கண்ணீர் அரசுக்கெதிரான புரட்சிக்கு வித்திட்டு அவ்வாட்சியாளனின் செல்வத்தை அழித்துச் சூறையாடுகிறது.

வெருவந்த செய்யாமை (பயமுறுத்தாமை)

107. வெருவந்த செய்தொழுகும் வெங்கோல னாயின்
ஒருவந்தம் ஒல்லைக் கெடும்.

(கு -563)

குடிகளை துன்புறுத்துகிற கொடிய கொடுங்கோலாக ஆட்சியாளன் இருந்தால் அவன் அரசு விரைவில் கெட்டழியும்.

108. அருஞ்செவ்வி இன்னா முகத்தான் பெருஞ்செல்வம்
பேஎய்கண் டன்ன துடைத்து.

(கு -565)

காணுதற்கு அரிதாகவும், காணும்போது விரும்பத்தகாத முகத்தானாகவும் இருப்பவனுடைய செல்வம் வெறிகொண்ட பேய் (அச்சம்) பெற்ற செல்வத்திற்கு ஒப்பானது.

109. கடும்மொழியும் கையிகந்த தண்டமும் வேந்தன்
அடுமுரண் தேய்க்கும் அரம்.

(கு -567)

வஞ்சினச்சொற்களும் குற்றங்களுக்கான கொடூரத் தண்டனையும் ஆட்சியாளரின் வலிமையைத் தேய்க்கும் அரம் போன்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணோட்டம் (பழமை பாராட்டுதல்)

110. பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பலர்.

(கு -580)

பலரும் பாராட்டத்தக்க கண்ணோட்டத்தை விரும்புபவர்கள், தொடர்புடையவர் தம்முன் நஞ்சை ஊற்றிக் கொடுத்தாலும் அதை உண்டு தம்நிலை மாறுபடாது இருப்பர்.

ஒற்றாடல் (உளவு செய்தல்)

111. வினைசெய்வார் தம்சுற்றம் வேண்டாதார் என்றாங்
கனைவரையும் ஆராய்வ தொற்று.

(கு -584)

அரசு அலுவலர், சுற்றத்தார், பகைவர் (முறைமுகமான எதிரிகள்) ஆகியோரை ஆராய்ந்து அவர் தன்மை அறிவதே ஒற்றாடல் (உளவுமுறை) ஆகும்.

112. கடாஅ உருவொடு கண்ணஞ்சா தியாண்டும்
உகாஅமை வல்லதே ஒற்று.

(கு -585)

பிறர் ஐயுறமுடியாத உருவத்தோடும், பார்ப்பவர் கண்ணுக்கு அஞ்சாமலும், மனத்திலுள்ளதை எவ்விடத்திலும் வெளிப்படுத்தாமல், ஆராயும் திறனுடையவனே ஒற்றனாவான்.

ஊக்கமுடைமை (முயற்சியாளராய் இருத்தல்)

113. வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு.

(கு -260)

வெள்ளப்பெருக்கின் உயரத்திற்குத் தக்கவாறு நீர்ப்பூவின் தண்டின் நீளம் அமையும். அதுபோல் ஒருவரின் முயற்சிக்குத் தக்கவாறு அவர் உயர்வும் நீளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

114. சிதைவிடத் தொல்கார் உரவோர் புதையம்பிற்
பட்டுப்பா நின்றும் களிறு.

(கு -597)

யானையின் உடலிலே அம்பு ஆழமாகத் தைத்திருந்தாலும் அது தன் செயலில் சோர்ந்து போகாமல் உரமாய் நிற்பது போல முயற்சியுடையாரும் தமக்கு இடர் வருமிடத்தும் தம் செயலில் சோர்வடையமாட்டார்கள்.

மடியின்மை (சோம்பல் இன்மை)

115. நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன்.

(கு -605)

காலம் கடத்துதல், மறதி, சோம்பல், நீண்ட உறக்கம் ஆகிய நான்கும் வாழ்வில் கெட்டழிபவர் விரும்பும் அணிகலமாகும்.

ஆள்வினையுடைமை (முயற்சியுடைமை)

116. பொறியின்மை யார்க்கும் பழியன் றறிவறிந்
தாள்வினை இன்மை பழி.

(கு -618)

உடலுறுப்பின் குறைபாடு ஒருவர்க்கு ஒரு குறைபாடு அல்ல. (பழியல்ல) ஆனால் அறியவேண்டியவற்றை அறிய முயற்சி கொள்ளாதிருப்பதே இழுக்கு (பழி).

117. ஊழையும் உப்பக்கம் காண்பர், உலைவின்றித்
தாழா துஞற்று பவர்.

(கு -620)

சோர்வின்றி கருமமே (செயலே) கண்ணாய் இருந்து செயற்படுபவர் இயற்கையென்னும் ஊழையும் தோல்வியுறச் செய்வார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடுக்கண் அழியாமை (துயர்கண்டு சோர்வடையாமை)

118. இடும்பைக் கிடும்பை படுப்பர். இடும்பைக்
கிடும்பை படாஅ தவர்.

(கு -623)

துயருற்றபோது அதுகண்டு கலங்காதவர் அத்துன்பத்துக்கே துன்பம் உண்டாக்கி அதை இல்லாமல் செய்துவிடுவார்.

அமைச்சு (மந்திரியின் செயல்)

119. செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்
தியற்கை அறிந்து செயல்.

(கு -637)

நூலறிவால் ஒரு செயலை செய்யும் வழிவகைகளை அறிந்திருந்தபோதும் உலகின் இயற்கைச் சூழலையும் மனதில் கொண்டு அதனோடு பொருந்தச் செய்ய வேண்டும்.

சொல்வன்மை (பிறர் மனதில் பதியுமாறு கூறல்)

120. சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது.

(கு -647)

சொல்வன்மையுடையவனும், சொற்சோர்வு அற்றவனும் அவைக்கு அஞ்சாதவனுமாகியவனை சொற்போரில் வெல்லுதல் எவர்க்கும் அரிது.

121. இணருழ்த்தும் நாறா மலரனையர் கற்ற
துணர விரித்துரையா தார்.

(கு -650)

தாம் கற்றதை தெளிவாகப் பிறர் உணருமாறு விரித்துக் கூற முடியாதவர்கள் இயற்கையில் கொத்தாக மலரும் நறுமணமற்ற மலருக்கு ஒப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினைத்தூய்மை (குறைகாணாச்செயல்)

122. துணைநலம் ஆக்கம் தரூஉம், வினைநலம்
வேண்டிய எல்லாம் தரும்.

(கு -651)

ஒருவர்க்கு வாய்க்கப் பெறுகின்ற துணையாளரின் தன்மை நிறைவான ஆக்கத்தை (வளம் செல்வம்) தரும், செய்கின்ற தூய செயலினூடாக வேண்டியவற்றை எல்லாம் பெறலாம்.

வினைத்திட்பம் (செயல் உறுதி)

123. உருவுகண் டெள்ளாமை வேண்டும். உருள்பெருந்தேர்க்
கச்சாணி அன்னார் உடைத்து.

(கு -667)

வடிவத்தை (சிறிது) கண்டு ஒருபோதும் இகழக்கூடாது. ஏனெனில் உருளும் பெரிய சில்லுடைய தேருக்கும் இடும் சிறிய அச்சாணி போன்ற வினைத்திட்டம் உடையோரும் உலகில் உளர்.

வினை செயல்வகை (செயல்முறை)

124. பொருள்கருவி காலம் வினையிடனோ டைந்தும்
இருள்தீர எண்ணிச் செயல்.

(கு -675)

ஒரு செயலை செயற்படுத்தும்போது பொருள், கருவி, காலம், செயல், இடம் ஆகிய ஐந்தையும் மறந்துவிடாது (மயக்கமில்லாது) எண்ணிச் செயற்படுத்த வேண்டும்.

தூது (தூதர் இயல்பு)

125. இறுதி பயப்பினும் எஞ்சா திறைவற்
குறுதி பயப்பதாம் தூது.

(கு -690)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்கு அழிவே உண்டாவதாயிருந்தாலும், அதற்கஞ்சாது தன் இறை (அரசன்)க்கு நன்மை, உறுதியானவற்றைச் சொல்பவனே தூதன்.

மன்னரைச் சேர்ந்தொழுகல் (அரசனொடு பழகும் முறை)

126. எப்பொருளும் ஓரார் தொடரார்மற் றப்பொருளை
விட்டக்கால் கேட்க மறை.

(கு -695)

அரசன் மறைபொருளாகப் பேசுவதை உற்றுக் கேளாமலும், தொடர்ந்து வினவாமலும் இருந்து அரசன் அப்பொருள் பற்றிக் கூறும்போது கேட்டறிய வேண்டும்.

குறிப்பறிதல் (ஒருவரைப் பார்த்த மாத்திரத்தில் அவர் மனதறிதல்)

127. ஐயப் படாஅ தகத்த துணர்வானைத்
தெய்வத்தோ டொப்பக் கொளல்.

(கு -702)

ஐயமிலாது ஒருவரின் உள்ளக்கிடக்கையை உணர வல்லானை தவத்தாருடன் ஒப்பக் கொள்ள வேண்டும்.

அவை அறிதல் (சூழ இருப்பவர் தகைமையறிந்து பேசுதல்)

128. அவையறிந் தாராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர்.

(கு -711)

சொல்லின் விரிவை அறிந்த தூய (மெய்யறிவு, நுண்ணறிவு, உண்மையறிவு) அறிவினர் தாம் நிற்கும் அவையின் தகுதியறிந்து அதற்கேற்ற விதமாய் ஆராய்ந்து சொல்ல வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவையஞ்சாமை (சூழ இருப்பவர் கண்டு பயம் கொள்ளாமை)

129. ஆற்றின் அளவறிந்து கற்க அவையஞ்சா
மாற்றம் கொடுத்தற் பொருட்டு.

(கு -725)

சான்றோர் (கற்றோர்) அவையில் அஞ்சாமல் சொற்போர் நடத்தி ஒரு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமாயின் ஒருவர் அளவையியல் (தர்க்கம்) முறையில் கற்க வேண்டும்.

நாடு (நாட்டின் சிறப்பியல்பு)

130. பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து.

(கு -738)

நோயில்லாமையும், செல்வச் செழிப்பும், பெருவிளைவும், அறவழி இன்பமும் வலிமைமிக்க அரனும் (பாதுகாப்பு) ஆகிய ஐந்தும் ஒரு நாட்டின் அணிகலன் போன்றன.

அரண் (பாதுகாப்புத் தடுப்பு)

131. ஆற்றுபவர்க்கும் அரண்பொருள் அஞ்சித்தற்
போற்று பவர்க்கும் பொருள்.

(கு -741)

வலிமையைக் காட்ட விரும்புவர்க்கு அரண் பயனுடையதாகும். அதேபோல் உயிர்க்கு அஞ்சிப் பதுங்குபவர்க்கும் அது பயனுடையதே.

பொருள் செயல்வகை (பொருள் ஆக்கும் முறை)

132. அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்.

(கு -755)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறன் அறிந்து அறவழியிலே கிடைக்கின்ற செல்வமானது அறவழியிலே அறத்தைச் செய்யவும், அறவழியிலே இன்பத்தை நுகரவும் வழிவகுக்கும்.

படைமாட்சி (படைப்பெருமை)

133. அழிவின் றறைபோகா தாகி வழிவந்த
வன்க ணதுவே படை.

(கு -764)

மனச்சோர்வின்றியும், காட்டிக்கொடுக்கும் தற்குறிகளின் வஞ்சனைக்கு உட்படாததுமான வல்லாண்மையுடைய மரபுப் படையே சிறந்த படையாகும்.

134. மறமானம் மாண்ட வழிச்செலவு தேற்றம்
எனநான்கே ஏமம் படைக்கு.

(கு -766)

வீரம், மானம், பொதுமக்களுக்கு இடர்தராத படைநகர்வு , போர்த்தெளிவு ஆகிய நான்கும் படைக்குப் பாதுகாப்பாகும்.

படைச்செருக்கு (படைப்பெருமிதம்)

135. கைவேல் களிற்றோடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்.

(கு -774)

ஒரு வீரன் தான் யானையின் மேல் எய்த அம்பைப் போக விட்டு தன் மார்பிலே தைத்த அம்பை தனக்கு வாய்த்த படைக்கலனாக எடுத்து மகிழ்வான்.

136. புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்கா
டிரந்துகோள் தக்க துடைத்து.

(கு -760)

தம்மைக் காத்தவரின் (தலைவன்) கண்களில் இருந்து நீர் வருமாறு ஒருவர்க்கு சாவுகிட்டுமானால் அதை இரந்து பெற்றுக்கொள்ளத்தக்க பெருமையது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நட்பு (நட்புச் சிறப்பு)

137. அழிவி னவைநீக்கி ஆறுய்த் தழிவின்கண்
அல்லல் உழப்பதாம் நட்பு.

(கு -787)

நண்பனுக்கு உண்டாகும் இடர்களைக் களைந்து, அவனை நல்வழியில் நடப்பித்து அவன் துயரிலும் பங்குகொள்வதே நட்பாகும்.

நட்பாராய்தல் (நட்புக்குத் தகுதியானவரை தேர்தல்)

138. கேட்டினும் உண்டோர் உறுதி கிளைஞரை
நீட்டி அளப்பதோர் கோல்.

(கு -796)

வறுமைத் துயர் வருவதிலும் ஒரு நன்மையுண்டு. ஏனெனில் நட்பின் பெருவிளைவை அளப்பதற்கான அளவு கோலாய் அது செயற்படும்.

139. மருவுக மாசற்றார் கேண்மை ஒன்றீத்தும்
ஒருவுக ஒப்பிலார் நட்பு.

(கு -800)

தெளிந்த (மாசற்ற) பண்பினரை நட்பாகக் கொள்ள வேண்டும். எம்முடன் ஒத்த பண்பற்றாரை ஏதாவதைக் கொடுத்தாவது கைவிட வேண்டும்.

பழைமை (பழம் தொடர்பு)

140. பேதைமை ஒன்றோ பெருங்கிழமை என்றுணர்க
நோதக்க நட்டார் செயின்.

(கு -805)

வருந்தத்தக்கதொன்றை நண்பர் ஒருகால் செய்த போதும் அது அவர்தம் அறியாமையால் அல்லது உரிமையால் செய்தார் எனக் கொள்ளவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

141. எல்லைக்கண் நின்றார் துறவார் தொலைவிடத்தும்
தொல்லைக்கண் நின்றார் தொடர்பு.

(கு -806)

தொலைவிடத்தில் தான் துன்புற்று நின்றபோது உதவியவர் பழம் தொடர்பை நட்பின் மேன்மையில் உயர்ந்தவர் என்றும் மறவார்.

தீநட்பு (தீயாரோடு கொண்ட தோழமை)

142. எனைத்தும் குறுகுதல் ஒப்பல் மனைக்கெழீஇ
மன்றில் பழிப்பார் தொடர்பு.

(கு -820)

வீட்டில் இருந்த போது நெருங்கி (நண்பராய்) இருந்து, பலர் கூடிய அவையில் எள்ளி நகைப்பார் (பழிப்பார்) நட்பை நெருங்காது தவிர்த்து விடல் வேண்டும்.

கூடாநட்பு (பொருந்தாத் தோழமை)

143. தொழுதகை யுள்ளும் படையொடுங்கும், ஒன்னார்
அழுதகண் ணீரும் அனைத்து.

(கு -828)

நண்பர் போலக் காட்டி, (பகைவர்) போற்றுகின்றவர் கையினுள் கொலைக்கருவி இருப்பதுபோல் அவர் விடும் கண்ணீரும் அத்தன்மைத்தேயாகும்.

பேதைமை (அறியாமை)

144. நாணாமை நாடாமை நாரின்மை யாதென்றும்
பேணாமை பேதை தொழில்.

(கு -833)

இழுக்குடையவற்றிற்கு வெட்கப்படாமலும் தகுந்தவற்றைக் கைக்கொள்ளாமலும், அன்பு இல்லாமலும், நல்லவற்றை விரும்பாமலும் இருப்பதுவே ஒரு அறிவிலியின் செயலாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புல்லறிவாண்மை (அற்ப அறிவினர்)

145. காணாதாற் காட்டுவான் தான்காணான் காணாதான்
கண்டானாம் தான்கண்ட வாறு.

(கு -849)

அறியாதவன் தான் அறிந்தபடியே அறிந்தவனாய் இருப்பான். அறியாதவனுக்கு அறிவிக்க முயல்பவனும் அறிவில்லாதவனாய் நிற்பான்.

இகல் (மாறுபாட்டின் தன்மை)

146. இகலென்ப எல்லா உயிர்க்கும் பகலென்னும்
பண்பின்மை பாரிக்கும் நோய்.

(கு -851)

எல்லா உயிர்களுக்கும் மற்ற உயிர்களோடு பொருந்தாது வேறுபடும் (பிரிக்கும்) தீயபண்பை வளர்க்கும் நோய் இகல் (மாறுபாடு) என்பர்.

147. இகலென்னும் எவ்வநோய் நீக்கின், தகவில்லாத
தாவில் விளக்கம் தரும்.

(கு -853)

ஒருவன் இகல் எனும் கொடிய தொற்று நோயை நீக்கிவிட்டால் அது அவனுக்கு கெடுதல் இல்லாததும், நிலைத்ததுமான பெருமையைத் தரும்.

பகைமாட்சி (பகையின் சிறப்பு)

148. வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான்
பண்பிலன் பற்றார்க் கினிது.

(கு -865)

செயல் செய்யும் வழிபார்க்காமலும், வெற்றியைத் தரக்கூடியதான செயலைச் செய்யாமலும் உண்டாகும் பழி (இழிவு) பற்றி ஆராயாமலும், பண்பொழுக்கம் ஆகிய இல்லாதவன் பகை எதிரிக்கு இனிமையானதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகைத்திறன் தெரிதல் (பகைத்தன்மை ஆராய்தல்)

149. வில்லே ருழவர் பகைகொளினும், கொள்ளற்க
செல்லே ருழவர் பகை.

(கு -872)

படைக்கருவியை ஏராகக் கொண்டு உழுபவராகிய படை வீரரைப் பகையாகக் கொண்டாலும் சொல்லை ஏராகக் கொண்ட உழவராகிய அறிஞர் பெருமக்கள் தம்முன் பகைகொள்ளக் கூடாது.

150. இளைதாக முள்மரம் கொல்க. களையுநர்
கைகொல்லும் காழ்த்த விடத்து.

(கு -879)

சிறுசெடியாக இருக்கும்போதே முள்மரத்தை அழித்துவிட வேண்டும். இல்லையேல் வளர்ந்து முதிர்ந்து விட்டால் அதைக் களைய (அகற்ற) முயல்பவரின் கையை அது வருத்தும்.

உட்பகை (கூடியிருந்து குழிபறித்தல்)

151. எட்பக வன்ன சிறுமைத்தே யாயினும்
உட்பகை உள்ளதாம் கேடு.

(கு -889)

உட்பகையானது எள்ளின் பிளவைப் போன்று சிறியதாய் இருப்பினும் குடியை அழிக்கக்கூடிய கேடு உட்பகையால் உருவாகும்.

பெரியாரைப் பிழையாமை (பெரியாரை இகழாமை)

152. ஆற்றுவார் ஆற்றல் இகழாமை போற்றுவார்
போற்றலுள் எல்லாம் தலை.

(கு -891)

மேற்கொண்ட செயலைச் செய்து முடிக்க வல்லாரின் ஆற்றலை இகழாதிருத்தல் தம்மைக் காப்பவர் செய்து கொள்ளும் காவல் யாவற்றிலுமே மேன்மையுடையது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்வழிச்சேறல் (பெண்ணுக்கு அடிமையாதல்)

153. பேணாது பெண்விழைவான் ஆக்கம் பெரியதோர்
நாணாக நாணுத் தரும்.

(கு -902)

தன் செயலிலிருந்து வழுவி மனையாளை மகிழ்விப்பதற்காக அவள்பின் செல்பவர் செயல் பெரியதொரு வெட்கத்திற்கிடமான தலைகுனிவை ஏற்படுத்தும். (சிலப்பதிகாரம், யூலியசுசீசர்)

வரைவின் மகளிர் (நல்நெறி வழுவிய பெண்கள்)

154. இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு.

(கு -920)

இருவகைப்பட்ட மனமுடைய பொருட்பெண்டிரும், கள்ளும், சூதும் செல்வத்தின் நின்று நீக்கப்பட்டார் பெற்ற தொடர்பாகும்.

கள்ளுண்ணாமை (மது அருந்தாமை)

155. கள்ளுண்ணாப் போழ்தில் களித்தானைக் காணுங்கால்
உள்ளான்கொல் உண்டதன் சோர்வு.

(கு -830)

குடிவெறியன் தான் குடியாத போது குடித்த ஒருவனின் மயக்கச் செயற்பாட்டைக் கண்டாவது தானும் அப்படியாக இருந்திருக்க மாட்டேனோ என நினையானோ?

சூது (சூழ்ச்சியாகப் பொருள் பறித்தல்)

156. சிறுமை பலசெய்து சீரழிக்கும் சூதின்
வறுமை தருவதொன்றில்.

(கு -934)

இழிவுகள் பலவற்றைச் செய்து அவன் பெருமையை மங்கச் செய்யும் சூதினைப் போன்று வறுமை தருவது வேறொன்றுமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

157. மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று.

(கு -941)

மருத்துவ நூலார் எண்ணிய ஊதை (வளி), பித்தம், கோழை, (சளி) ஆகிய மூன்றும் கூடினாலும், குறைந்தாலும் உடலில் பல்நோய்களை உண்டாக்கும்.

158. அற்ற தறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து.

(கு -902)

செரிமானத்தைத் தெளிந்து, தனது உடலுக்கு மாறுபாடு இல்லாததைத் தெரிந்து, மிகப்பசித்த வேளை உண்ணவேண்டும்.

159. நோய்நாடி, நோய்முதல் நாடி, அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்.

(கு -902)

நோயை இதுவென ஆய்ந்தறிந்து, காரணம் அறிந்து, நோயைத் தீர்க்கும் வழிகளையும் ஆராய்ந்து அவ்வழியில் அதற்கு மருத்துவம் செய்தல் வேண்டும்.

160. உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்
றப்பால்நாற் கூற்றே மருந்து.

மருத்துவம் என்பது நோயுற்றவன், நோய்த்தீர்க்கும் மருத்துவன், நோய்தீர்க்கும் மருந்து, அருகிருந்து உதவுபவன் ஆகிய நான்கு பிரிவுகளை உடையது.

குடிமை (நற்குடி பிறந்தார்)

161. ஒழுக்கமும் வாய்மையும் நாணும்இம் மூன்றும்
இழுக்கார் குடிப்பிறந் தார்.

(கு -952)

பண்புடை நற்குடியில் பிறந்தவர் ஒழுக்கமும், நேர்மை (உண்மை)யும், பழிக்கு வெட்கப்படுகின்றதாகிய (நாணம்) மூன்று தன்மைகளிலிருந்து வழிதவறமாட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

162. நிலத்தில் கிடந்தமை கால்கட்டும் காட்டும்
குலத்தில் பிறந்தார்வாய்ச் சொல்.

(கு -959)

மண்ணின் இயல்பை அதில் முளைத்த செடியின் செழிப்புக் காட்டுவது போல் ஒரு நற்குடியின் இயல்பை அக்குடிப்பிறந்த ஒருவரின் வாய்ச்சொல்லில் இருந்து அறிந்து கொள்ளலாம்.

மானம் (தன்மதிப்பில் உயர்ந்து நிற்றல்)

163. புகழின்றால் புத்தேள்நாட் டுய்யாதால் என்மற்
றிகழ்வார்பின் சென்று நிலை.

(கு -966)

தன்னை மதியாமல் இகழ்வார்பின் சென்று பணிந்து நிற்கும் நிலையானது ஒருவர்க்கு புகழை வாழும் காலத்திலும், இறந்த பின் இறவாப் புகழையும் தரமாட்டாது. எனவே மானம் தாழ்ந்து நிற்பது ஏன்?

164. ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலின் அந்நிலையே
கெட்டான் எனப்படுதல் நன்று.

(கு -967)

மதியாதவரின் பின்சென்று மானம்கெட்டு உயிர்வாழ்தலை விட, அவ்வாறு செய்யாது அழிந்தான் என்று கூறப்படுவது மேன்மையுடைத்து.

165. மருந்தோமற் றூனோம்பும் வாழ்க்கை, பெருந்தகைமை
பீடழிய வந்த இடத்து.

(கு -968)

ஒருவன் தன் பெரும் தகுதிக்கு பெருமையற்ற மானக்கேடு வந்தபோது, அவன் உடலைமட்டும் பேணிக்காக்கும் வாழ்வுக்கு (இறக்காமை) அது மருந்தாகுமோ?

பெருமை (பெருமையின் சிறப்பு)

166. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.

(கு -972)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறப்பு எல்லா உயிர்களுக்கும் ஒரே தன்மையானது. அதுபோல் மாந்தராகியவர் ஆற்றும் செயல்களும் (தொழில்கள்) வேறு வேறாயினும், அவரவர் துறையிலே மேம்பட்டு நிற்பதால் அவையும் ஒரே தன்மையானவையே.

167. *ஒருமை மகளிரே போலப் பெருமையும்*
தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு.

(கு -974)

ஒருத்திக்கு ஒருவன் தான் எனும் தன்மை பொருந்தியவளாக ஒரு பெண் இருப்பதுபோல் தன்னை நிறையில் (கற்பில்) நெறிப்படுத்துவானாகில் அவனும் பெருமை பெறுவான்.

சான்றாண்மை (உயர் பண்பொழுக்கம் ஆளுமை)

168. *அன்புநாண் ஒப்பரவு கண்ணோட்டம் வாய்மையோ*
டைந்துசால் பூன்றிய தூண்.

(கு -983)

சால்பு எனும் ஒழுக்கப் பண்பை தாங்கி நிற்கும் கால்கள் (தூண்) அன்பு, இழிவுக்கு வெட்கப்படுதல், பொதுநலம், தலைமுறை பேணல், உண்மையாகிய ஐந்துமாகும்.

169. *ஊழி பெயரினும் தாம்பெயரார், சான்றாண்மைக்*
காழி எனப்படு வார்.

(கு -989)

கடல் போன்ற (மாவாரி) உயர்பண்புடை (சால்பு) பெருமக்கள் இயற்கையாழியாகிய ஊழ் மாறினாலும் தம் உறுதி நிலையில் இருந்து மாறமாட்டார்.

பண்புடைமை (நற்குணப் பண்பு)

170. *அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்*
மக்கட் பண் பில்லாதவர்.

(கு -997)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவில் அரத்தைப் போல கூர்மையுடையவர்களாய் இருந்தாலும் அவர்களிடம் மக்கட் பண்பொழுக்கம் இல்லாவிடின் அவர் மரத்திற்கு ஒப்பானவர்.

171. பண்பிலான் பெற்றபெருஞ் செல்வம், நன்பால்
கலந்தீமை யால்திரிந் தற்று.

(கு -1000)

பண்பொழுக்கம் இல்லாதவனுக்கு கிடைக்கும் பெரும் செல்வமானது கலத்தின் குற்றத்தால் அதிலிருந்த பால் கெட்டுப்போவதைப் போல் கெட்டுப் பயன்படாது போய்விடுவதைப் போன்றது.

நன்றியில் செல்வம் (நன்று + இல் + செல்வம்)

172. வைத்தான்வாய் சான்ற பெரும்பொருள் அஃதுண்ணான்
செத்தான் செயக்கிடந்த தில்.

(கு -1001)

ஒருவன் தான் வாழும் இடமெல்லாம் சேர்த்து வைத்த பெரும் செல்வத்தை பிறருக்கும் கொடாது, தானும் உண்ணாது இருப்பதானது அவன் இறந்த நிலையே. சேர்த்த பொருளாலும் எந்தப் பயனுமில்லை.

173. அன்பொரீஇத் தற்செற் றறம்நோக்கா தீட்டிய
ஒண்பொருள் கொள்வார் பிறர்.

(கு -1009)

பிறரிடம் அன்பற்று, தானும் வருந்தி, அறத்தையும் விடுத்து ஒருவர் தேடும் பெரும் செல்வமானது மாற்றாருக்கே பயன்படுவதாகும்.

நாணுடைமை (இழிசெயல்களுக்கு வெட்குதல்)

174. பிறர்பழியும் தம்பழியும் நாணுவார், நாணுக்
குறைபதி என்னும் உலகு.

(கு -1015)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடிப்பழியையும், தன் பழி (இழுக்கு)யையும் எண்ணி அஞ்சி வெட்கப்படுபவரை (நாணுகின்றவர்) உலகோர் நாணுடைமையின் உறைவிடம் எனப் பாராட்டுவர்.

175. நாணகத் தில்லார் இயக்கம் மரப்பாவை
நாணால் உயிர்மருட்டி யற்று.

(கு -1020)

தம் இழி செயல்களுக்கு வெட்கப்படாத ஒருவர் வாழுதல் மரப்பாவை (மின்கலன்) இயங்கி உயிருள்ளதாக காட்டும் செயலுக்கு ஒப்பாகும்.

குடிசெயல்வகை (பிறந்த தன்குடியை உயர்த்தல்)

176. கருமம் செயஒருவன் "கைதூவேன்" என்னும்
பெருமையின் பீடுடைய தில்.

(கு -1021)

குடிப்பெருமையை மேம்படுத்தி செயற்படுதலில் சோர்வடையேன் எனும் முயற்சியைப் போல் ஒருவனுக்கும் பெருமையுடையது வேறில்லை.

177. குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான் முந்துறும்.

(கு -1023)

எனது குடியை மேம்படுத்துவேன் என முயற்சியோடு முயலும் ஒருவருக்கு சோம்பல் தவிர்த்து ஏனையோரும் (எதிர்பாராத வேளை வந்து உதவுவார் - தெய்வம்) முன் வந்து செயற்படுவர்.

178. நல்லாண்மை என்ப தொருவற்குத் தான்பிறந்த
இல்லாண்மை ஆக்கிக் கொளல்.

(கு -1026)

ஒருவற்கு நல்ஆண்மை (பெருமை) என்பது அவன் பிறந்த குடியை மற்றைய குடிகளிலும் மேம்படச் செய்வதேயாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

179. குடிசெய்வார்க் கில்லை பருவம் மடிசெய்து
மானம் கருதக் கெடும்.

(கு -1028)

தன் குடியை மேம்படுத்துவேன் எனக்கொள்ளும் ஒருவர்க்கு வேளை என்று ஒன்றில்லை. சோம்பலுற்று, வெட்கப்பட்டு (மானம்) இருப்பின் அக்கடி கெடும்.

உழவு (வேளாண் தொழிற்சிறப்பு)

180. உழுவார் உலகத்தார்க் காணி யஃதாற்றா
தெழுவாரை எல்லாம் பொறுத்து.

(கு -1032)

உழுவோர் உலகின் பிறதொழில் செய்வோரையெல்லாம் உணவளித்துத் தாங்குவதால் அவரே உலகாகிய தேரின் அச்சாணி போன்றோராவர்.

181. செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்
தில்லாளின் ஊடி விடும்.

(கு -1039)

உழவன் நாள்தோறும் சென்று தன் பயிர்நிலம் பாரானாயின் அந்நிலம் கணவன் அரவணைப்பைப் பெறாத இல்லாள் போல் வெறுப்புற்று பயன்தராது போய்விடும்.

நல்குரவு (வறுமை)

182. நெருப்பினுள் துஞ்சலும் ஆகும். நிரப்பினுள்
யாதொன்றும் கண்பா டரிது.

(கு -1049)

சிலவேளை ஒருவனால் நெருப்பினில் உறங்கினாலும் உறங்கமுடியும். ஆனால் வறுமையெனும் நெருப்பினில் எவ்வகையாலும் கண்ணை மூடமுடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவு (இரத்தல்)

183. கரப்பிலார் வையகத் துண்மையால் கண்ணின்
நிரப்பவர் மேற்கொள் வது.

(கு -1055)

தம்மிடத்திலுள்ளதை மறைக்காமல் கொடுப்பவர் இவ்வுலகில் இருப்பதாலேயே நேரில் நின்று கேட்பவர் தம் இரத்தலை தொடர்ந்து மேற்கொள்கின்றார்.

இரவச்சம் (இரக்க நாணுதல்)

184. கரவா துவந்தீயும் கண்ணன்னார் கண்ணும்
இரவாமை கோடி யுறும்.

(கு -1061)

இருப்பதை ஒளிக்காது உள்ளம் மகிழ்ந்து கொடுக்கும் கண் போன்ற கொடையாளரிடத்திலும் சென்று (வெட்கக் கேடான) இரக்காமலிருப்பதே கோடி முறை நல்லதாகும்.

185. இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்.

(கு -1062)

உலகில் ஒருவன் இரந்துதான் உயிர் வாழவேண்டுமாயிருக்குமாயின் அதற்குக் காரணமான இறைவன் (ஆட்சியாளன்) அலைந்து கெட்டு அழிந்து போகட்டும். (புரட்சி வெடிக்கட்டும்)

186. இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும்.

(கு -1068)

இரப்பென்ற பாதுகாப்பற்ற மரக்கலம், வைத்துக்கொண்டே இல்லை என்று கூறும் கல்நெஞ்சர் (பாறையின்) தாக்கத்தால் மனம் (பிளந்து) உடைந்து விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கயமை (இழிந்த தன்மை)

187. தேவ ரனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுக லான்.

(கு -1073)

கயவர்களும் தேவரைப் போல் (புராணத் தேவர்) தாம் மனம் கொள்வனவற்றை யெல்லாம் செய்வதால் கயவரும் தேவரைப் போன்றவரே.

188. ஈர்ங்கை விதிரார் கயவர் கொடியுடைக்கும்
கூன்கைய ரல்லா தவர்க்கு.

(கு -1077)

கயவரின் (கஞ்சர்) கன்னத்தை அடித்துடைக்கும் மடங்கிய (வளையும்) கையே இல்லாதவர்க்குக் கூட கயவர் தாம் உண்ட ஈரக்கையைக் கூட உதறமாட்டார்.

189. எற்றிற் குரியர் கயவர் ஒன் றுற்றக்கால்
விற்றற் குரியர் விரைந்து.

(கு -1080)

தமக்குக் குறையுண்டான போது அதை நீக்க தம்மையும் விலை பேசுவர் கயவர். எனவே இவர்கள் எதற்கு ஏற்புடையவர்.

தகையணங்குறுத்தல் (தலைவியின் அழகு தலைவனை வருத்துதல்)

190. அணங்குகொல்! ஆய்மயில் கொல்லோ! கணங்குழை
மாதர்கொல்! மாலும்என் நெஞ்சு.

(கு -1081)

இவள் தெய்வப்பெண்ணோ! என்னை ஆய்வு செய்யும் மயிலோ! திரண்ட கூந்தலை உடைய பெண்ணோ! என் நெஞ்சம் அறியாமல் மயங்குகின்றதே!

191. ஒண்ணுதற் கோஒ உடைந்ததே ஞாட்பினுள்
நண்ணாரும் உட்குமென் பீடு.

(கு -1088)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்க்களத்தில் பகைவரும் அஞ்சுவதற்குக் காரணமான என் வலிமை இவளின் ஒளிபொருந்திய நெற்றிக்குத் தோற்றுவிட்டது.

குறிப்பறிதல் (கண்ணி, காளை இசைவுறும் தன்மை அறிதல்)

192. இருநோக் கிவளுண்கண் உள்ளதொரு நோக்கு
நோய்நோக் கொன்றந்நோய் மருந்து.

(கு -1091)

இவளுடைய கண்களின் பார்வையில் இரண்டு நோக்கங்கள்; ஒன்று நோய் தரும் பார்வை. மற்றொன்று நோய் தீர்க்கும் மருந்து போன்ற பார்வை.

193. செறாஅச் சிறுசொல்லும் செற்றார்போல் நோக்கும்
உறாஅர்போன் றுற்றார் குறிப்பு.

(கு -1097)

சினந்தரா கடுஞ்சொல்லும், வெறுத்தவர் போல் பார்க்கும் பார்வையும், தொடர்பில்லார் போன்று தொடர்புள்ளவர் செய்யும் அடையாளச் செயல்களாகும்.

புணர்ச்சி மகிழ்தல் (கூடலை மகிழ்ந்து கூறல்)

194. அறிதோ றறியாமை கண்டற்றால், காமம்
செறிதோறும் சேயிழை மாட்டு.

(கு -1110)

நூல்களை ஆராயும் தோறும் அறியாமை புலப்பட்டு புதுப்புது சிந்தனைகள் தோன்றி இன்பம் தருவது போல் அழகிய அணிகலன்களை அணிந்த என்னவளை கூடும்போதெல்லாம் புதுப்புது இன்பம் தோன்றும்.

நலன்புனைந்துரைத்தல் (தலைவியின் அழகை தலைவன் வியந்து பாராட்டுதல்)

195. முறிமேனி முத்தம் முறுவல் வெளிநாற்றம்
வேல்உண்கண் வேய்த்தோ ளவட்கு.

(கு -1113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னவளுக்குத் தளிர்போன்ற உடல், முத்துப் போன்ற பற்கள், இயற்கையான மணம், ஒளியடைவேல் போன்ற கண்கள், மூங்கில் போலும் தோள் ஆகும்.

196. அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம்.

(கு -1120)

அனிச்சத்தின் மென்மையான பூவும், அன்னப்பறவையின் பஞ்சு போன்ற இறகும் என்னவளின் மென்மையான காலடிக்கு நெருஞ்சிமுள் போல்வன.

காதற் சிறப்புரைத்தல்

197. கருமணியிற் பாவாய்நீ போதாய் யாம்வீழும்
திருநுதற் கில்லை இடம்.

(கு -1123)

என் கண்ணின் கருமணியிலுள்ள பாவையே (நிழல்) நீ நீங்கிவிடு அழகிய நெற்றியுடைய என்னவளுக்கு இருக்க வேறிடமில்லை.

198. நெஞ்சத்தார் காதல வராக வெய்துண்டல்
அஞ்சுதும் வேபாக் கறிந்து.

(கு -1128)

காதலர் என் நெஞ்சினுள்ளே வாழ்பவர் ஆதலால் அவருக்குச் சுட்டுவிடும் என்று நினைத்து சூடானவற்றை உண்ண அஞ்சுகின்றேன்.

நாணுத்துறவு உரைத்தல் (நாணம் நீங்கியமை)

199. காமம் உழந்து வருந்தினார்க் கேமம்
மடல்அல்ல தில்லை வலி.

(கு -1131)

காமத்தால் துன்புறுகின்றவர் அதை நாணமின்றி வெளிப்படுத்தலே (மடலூர்தல்) அல்லாமல் வேறு வலிமையான துணை எதுவும் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

200. யாம்கண்ணிற் காண நுகுப அறிவில்லார்
யாம்பட்ட தாம்படா வாறு.

(கு -1140)

நாம் பட்ட காதல் துன்பத்தை அவர் பட்டறியாததால் அறிவற்ற ஊரார் எம் எதிரில் நின்று நாம் கண்ணால் காணுமாறு எம்மை நகைக்கின்றனர்.

அலர் அறிவுறுத்தல் (காதலைப் பலவாறு பேசுதல்)

201. கண்டது மன்னும் ஒருநாள் அலர்மன்னும்
திங்களைப் பாம்புகொண் டற்று.

(கு -1146)

நாம் ஒருவரையொருவர் கண்டது ஒருநாள் ஆனால், அதனால் உண்டான அலரோ மதி(திங்களை)யை படர்நிழல் (பாம்பு) பற்றுவது போல் எங்கும் பரவிவிட்டது.

பிரிவாற்றாமை (தலைவன் பிரிவை தலைவி தாங்காது வருந்தல்)

202. அரிதாற்றி அல்லல்நோய் நீக்கிப் பிரிவாற்றிப்
பின்னிருந்து வாழ்வார் பலர்.

(கு -1160)

பிரிவைப் பொறுத்து, பிரியுங்கால் ஏற்படும் துயரைப்போக்கி, பிரிந்தவரைத் தாங்கி, உயிரோடு இருப்பவர் பலராயிருக்கலாம். ஆனால் என்னால் முடியாது.

படர்மெலிந்து இரங்கல் (பிரிவுத்துன்பத்தால் மெலிந்து தலைவி வருந்துதல்)

203. மன்னுயிர் எல்லாம் துயற்றி அளித்திரா
என்னல்ல தில்லை துணை.

(கு -1168)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் உறங்காது இவ்வுலகை உறங்கச் செய்யும் இவ்விரவின் தனிமை நிலை இரங்கத்தக்கது. என்னைத் தவிர வேறு துணை இல்லாமல் (அது) இருந்தது.

கண் விதுப்பழிதல் (தலைவனைக் காண தலைவியின் கண்கள் வருந்துதல்)

204. கண்தாம் கலுழ்வ தெவன்கொலோ தண்டாநோய்
தாம்காட்ட யாம்கண் டது.

(கு -1171)

இந்நோய் தலைவனை என் கண்கள் காட்டியதால் வந்த தீராதநோய், இன்று அவரைக் காட்டிய கண்கள் அழுவது எதற்காக?

205. மறைபெறல் ஊரார்க் கரிதன்றால் எம்போல்
அறைபறை கண்ணார கத்து.

(கு -1181)

எம்துயரை வெளிப்படுத்தும் பேரிகையாகிய (அடி) பறையொத்த கண்களையுடைய எமதுள்ளத்திலிருக்கும் மறைபொருளாகிய செய்தியை அறிதல் ஊரார்க்கு எளிது.

பசப்புறு பருவரல் [பசலை(வெளிறல்)யால் உண்டான துயரைக் கூறல்]

206. நயந்தவர்க்கு நல்காமை நேர்ந்தேன் பசந்தஎன்
பண்பியார்க் குரைக்கோ பிற.

(கு -1181)

என் அன்புக் காதலருக்குக் கொடுக்கக் கூடாத பிரிவுக்கான ஒப்புதலைக் கொடுத்ததினால் என் உடலில் பசலை நோய்க்குக் காரணமான என் அறியாமையை யாரிடம் போய்க் கூறுவேன்.

207. பசக்கமன் பட்டாங்கென் மேனி, நயப்பித்தார்
நன்னிலையர் ஆவர் எனின்.

(கு -1189)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம் பிரிவை ஏற்குமாறு செய்த என் அன்புக் காதலர், அதனால் உயர்நிலை அடைவாராயின் என் உடல் இப்படியே பசப்பாக இருக்கட்டும்.

தனிப்படர் மிகுதி (தலைவி தனிமையில் பெறும் துன்பம்)

208. தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்றாரே
காமத்துக் காழில் கனி.

(கு -1191)

ஒருவரை ஒருவர் விரும்புகின்ற காதலர், காதல் வாழ்வின் இன்ப நுகர்ச்சியாகிய விதையில்லாத கனியை (பழம்) பெற்றவராவார்.

209. ஒருதலையான் இன்னாது காமம்காப் போல
இருதலை யானும் இனிது.

(கு -1196)

ஒரு பக்க காதல் துன்பத்தைத்தருவது. ஆனால் காவுதடிபோல் (காவடி) இருபக்கமும் காதல் சமவளவினதாயின், அதுவே மகிழ்ச்சியாகும்.

நினைந்தவர் புலம்பல் (தலைவி தனிமையில் வருந்துதல்)

210. விடாஅது சென்றாரைக் கண்ணினால் காணப்
படாஅது வாழி மதி.

(கு -1210)

நிலாவே நீ வாழ்க! என் உளம் விட்டு நீங்காராய் விலகிச் சென்ற என் கணவரை கண்ணால் காணும் வரை மறையாமல் ஒளிதர வேண்டும்.

பொழுதுகண்டு இரங்கல் (மாலைகண்டு தலைவி வருந்துதல்)

211. காலை அரும்பிப் பகல்எல்லாம் போதாகி
மாலை மலரும்இந் நோய்.

(கு -1227)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காதல் நோய் காலையில் அரும்பி பகற்பொழுதில் மொக்குப் போல் திரண்டு மாலைப்பொழுதில் துயர்தரும் மலராக மலர்ந்து விடுகிறது.

உறுப்பு நலன் அழிதல் (உடல், உள்ளம் மெலிதல்)

212. தொடியொடு தோள்நெகிழ நோவல், அவரைக்
கொடியர் எனக்கூறல் நொந்து.

(கு -1236)

வளையல் கழல்வதையும், தோள் மெலிவதையும் கண்டு என் கணவர் கொடியவரெனக் கூற வேண்டாம். ஏனெனில் அது என்னை வருத்தும்.

நெஞ்சொடு கிளத்தல் (தலைவி மனத்தோடு நோதல்)

213. உள்ளதார் காத லவராக உள்ளீநீ
யாருழைச் சேறிஎன் நெஞ்சு.

(கு -1249)

மனமே! நீ காதலித்தவர் உன் உள்ளத்தில் இருக்கும் பொழுது நீ அவரை நினைத்து யாரிடம் தேடிச் செல்கின்றாய்.

நிறையழிதல் (தலைவி வெளியில் கூறமுடியாததைக் கூறல்)

214. பன்மாயக் கள்வன் பணிமொழி யன்றோநம்
பெண்மை உடைக்கும் படை.

(கு -1258)

மகிழ்ச்சியை ஏற்படுத்தும் பல மாயச்செயல்களை செய்யும் துணைவரின் உள்ளம் கவர்ந்த கள்வன் பணிவுமிக்க சொற்கள் நம் பெண்மையை உடைக்கும் படைக் கருவியாயிற்று.

அவர்வயின் விதும்பல் (தலைவன் வரவை எதிர்பார்த்து தலைவி மனம் விரைதல்)

215. உரன்நசைஇ உள்ளம் துணையாகச் சென்றார்
வரல்நசைஇ இன்னும் உளேன்.

(கு -1263)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது வலிமையைக் காட்டுதலை விரும்பி முயற்சியை துணையாகக் கொண்டு பிரிந்த என் தலைவர் திரும்பி வருதலைக் காண விரும்பியே உயிரோடு இருக்கின்றேன்.

216. வினைகலந்து வென்றீக வேந்தன் மனைகலந்து
மாலை அயர்கம் விருந்து.

(கு -1268)

அரசிற்காக என் துணைவர் போரில் வெற்றியடையட்டும். யாம் எம் இல்லத்தில் துணைவரோடு கலந்து மாலைப் பொழுதில் இனிய விருந்துண்போம்.

குறிப்பறிவுறுத்தல் (தலைவன் தலைவி ஒருவர்க்கொருவர் குறிப்பு உணர்தல்)

217. பெரிதாற்றிப் பெட்பக் கலத்தல் அரிதாற்றி
அன்பின்மை சூழ்வ துடைத்து.

(கு -1276)

பெரியதாக அன்புகாட்டி, இன்பக் களிப்புடன் கூடுதலானது தாங்கொணாத அரிய அன்பில்லாத பிரிவு வரஇருப்பதைக் காட்டுவதாயிருக்கிறது.

புணர்ச்சி விதும்பல் (தலைவன், தலைவி கூட விரைதல்)

218. எழுதுங்கால் கோல்காணாக் கண்ணேபோல் கொண்கண்
பழிகாணேன் கண்ட இடத்து.

(கு -1285)

என் விழிகளுக்கு மையிடும்போது, மையிடும் கோல் தெரியாமல் இருப்பது போல என் காதலரை நேரில் சந்திக்கும் போது அவர் தவறு தெரிவதில்லை.

219. மலரினும் மெல்லிது காமம் சிலர்அதன்
செவ்வி தலைப்படு வார்.

(கு -1289)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலானது மலரின் மென்மையை விடவும் மென்மையானது. எனவே அதன் பக்குவம் (தன்மை) அறிந்து நன்மை பெறுபவர் மிகச் சிலராவார்.

நெஞ்சொடு புலத்தல் (தலைவன், தலைவி தம் மனத்தோடு ஊடலுறல்)

220. தஞ்சம் தமரல்லர் ஏதிலார் தாமுடைய
நெஞ்சம் தமரல் வழி.

(கு -1300)

தலைவியின் தன் நெஞ்சேதன் உறவாக இல்லாது தலைவரிடம் செல்லும் போது அயலவர் உறவில்லாதவர்களாக இருப்பது மிக இலகுவானதாகும்.

புலவி (பொய்ச்சினம் கொள்ளுதல்)

221. உப்பமைந் தற்றால் புலவி அதுசிறிது
மிக்கற்றால் நீள விடல்.

(கு -1302)

புலவி என்பது உணவுக்கு இடும் உப்பு போன்றது. (புலவி எனும் பொய்ச்சினமும் அளவோடு இருக்கவேண்டும்) அதை மிகுதிப்படுத்தினால் அதன் சுவையும் கெட்டுப்போகும். (பொய்ச்சினம் சிலவேளை உண்மையாக மாறிவிடும்)

புலவி நுணுக்கம் (புலவி நுணுக்கத்தின் நுண்ணிய தன்மை)

222. பெண்ணியலார் எல்லாரும் கண்ணின் பொதுவுண்பர்
நண்ணேன் பரத்தநின் மார்பு.

(கு -1311)

பரத்தனே! பெண்ணியல்பு அற்ற பெண்கள் தங்கள் கண்களால் உன்னைப் பொது ஊணாகக் கொண்டு உண்பர். ஆகையால் உன் மார்பை நான் நெருங்கேன்.

223. இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனாக்
கண்ணிறை நீர்கொண் டனள்.

(கு -1315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது உள்ள பருவத்தில் (பிறப்பு) பிரியமாட்டோம் என்று கூறியவுடன் இனிவரும் பருவங்களில் பிரிவோமோவென கண்ணிறைய நீர் கொண்டாள்.

224. வழுத்தினாள் தும்மினே னாக அழித்தழுதாள்
யாருள்ளித் தும்மினீர் என்று.

(கு -1317)

நான் தும்மியதும் "நீடுவாழ்க" என்று வாழ்த்திப்பின் பொய்ச்சினம் கொண்டு வழிந்த கண்ணீரைத் துடைத்து "யாரை நினைத்துத் தும்மினீர்" என அழுதாள்.

225. நினைத்திருந்து நோக்கினும் காயும்அனைத்து நீர்
யாருள்ளி நோக்கினீர் என்று.

(கு -1320)

துணைவியின் அழகை உற்றுநோக்கிப் பார்த்தாலும் "என்னை எவர் அழகோடு ஒப்பிட்டு நினைத்துக் கொண்டீர் என ஊடுவாள் தலைவி.

ஊடலுவகை (பொய்ச்சினத்தால் வரும் இன்பத்தை நினைத்து களிப்புறல்)

226. புலத்தலின் புத்தேள்நா டுண்டோ நிலத்தொடு
நீரியைந் தன்னா ரகத்து.

(கு -1323)

நிலத்தொடு நீர் பொருந்தி இரண்டறக் கலப்பது போன்று பொருந்திய துணைவருடன் ஊடல் கொள்வதைவிட இன்பம் தருகின்ற புகழ் இடம் வேறு உலகில் உண்டோ?

227. உணவினும் உண்ட தறல்இனிது காமம்
புணர்தலின் ஊடல் இனிது.

(கு -1326)

உண்பதைக் காட்டிலும் முதலுண்ட உணவு செரிப்பது இன்பமானது. கூடியிருத்தலிலும் ஊடியிருத்தல் மிகுந்த களிப்பைத் தருவதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் மெய்யியல் கோட்பாடு
பகுதி - உ
ஔவை நூல்கள்

03. ஔவையார்:

சங்ககால ஔவையார் (கி.மு.2ம் நூற்), நீதி நூல் ஔவையார் (பிற்காலச் சோழர் காலமாகிய கி.பி 10-12ம் நூற்), ஔவைக்குறள் அல்லது ஞானக் (அருள்) குறளென்று வழங்கும் 310 குறள்களையும், விநாயகரகவலையும் பாடியவராகக் கொள்ளப்படும் சித்தர் மரபினரான குண்டலினியோகி ஔவையார், இன்னும் காலத்திற்குக் காலம் இப்பெயருடன் வாழ்ந்த பலரையும் இப்பெயர் குறிக்கும். இவர்களில் **நீதிநூல் ஔவையார், சங்ககால ஔவையார்** இருவருமே மிகவும் போற்றிப் புகழப் பெறுபவர்கள். சங்ககாலத் தொகை நூல்களான **புறநானூறு, அகநானூறு, குறுந்தொகை, நற்றினை** போன்ற நூல்களில் பல பாடல்களைப் பாடிய ஔவையார் உலகப்புகழ் பெற்ற பெண்பாற் புலவர்களாகிய **கிரேக்கத்து சாபோ, பிரெளனிங், யோர்யிய றொசற்றி, எமிலிடிக்சன்** போன்ற பன்னாட்டு புலவர்களின் ஆக்கங்களுடன் ஒப்பிலக்கிய ஆய்வொன்றைச் செய்தால் ஔவையார் இவர்களுக்கெல்லாம் இமயமாய்க் காணப்பெறுவார் என்கிறார் வரலாற்றுப் **பேராசிரியர் ந. சுப்பிரமணியம்.**

நீதிநூல் ஔவையார் எளிமை, இனிமையானவராக பட்டி, தொட்டிகளெல்லாம் படித்தவர், பாமரர் என்றில்லாமல் எல்லோர் நெஞ்சங்களிலும் நீங்கா இடம்பிடித்த அற, அறிவியற்கன்னி. உலகவளவிலேயே போற்றப்படும் உயரிய தகைசார் பெண்பாற் புலவர். தமிழர் நடுவில் ஒருவனுக்குத்தன்னும் ஔவையைத் தெரியாததென்றால் அது தமிழினத்திற்கே இழுக்காகும். இதைக் கருப்பொருளாக வைத்தே மாணவ குமுகாயமும், தமிழ் குமுகாயமும் ஔவைப்பாடல்களில் பொதிந்துள்ள கருத்துக்கள், உண்மைகள், நுட்பங்கள் போன்றவற்றை நன்கு புரிந்து கொள்ளும் வகையில் யாக்கப் பெற்றிருக்கிறது இந்நூல்.

சிறந்த நன்நெறிக்கவிதை வித்துக்களை மக்களின் மனவயலில் விதைத்து, உயர்பண்புப் பயிரை வளர்க்கும் ஒப்பற்ற **"சொல் ஏர் உழவர்"** ஔவைப் பெருமாட்டியே என்றால் அது மிகையில்லை. நீதிநூல் ஔவையார் பாடியனவாக ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி. மூதுரை தவிர எண்ணற்ற பாடல்கள் தனிப்பாடற் திரட்டு, தனிச்செய்யுட் சிந்தாமணி போன்றவற்றில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடப்பெற்றுள்ளன. ஒரு தேச நாகரிகத்திற்கு அடையாளம் அத்தேசத்தின் இலக்கியமே என்பார் அறிஞர். சுருங்கச் சொல்லி விளங்கவைத்தல் கவிதை மரபில் மிக உயர்வுடையது. இதில் ஔவையார் ஒப்பற்றவர். கடுமையான, நுட்பமான தகவல்களை எவரும் புரிந்து கொள்ளும்படி எளியநடையிற் தருவதில் ஈடு இணையற்ற திறமைசாலி என்பதும் வெள்ளிடைமலை.

உலகிலுள்ள அனைத்து மொழிகளுள்ளும் நீதிநெறி, அறிவுரை, உயர்ந்த கொள்கைகள், கருத்துக்கள், மெய்யியல் (தத்துவம்) போன்ற பண்புகளை நிரம்பப் பெற்றுள்ள நூல்கள் தமிழ்மொழியில் மட்டும் தானுள்ளன. இது தமிழனின் உயர்பண்பாட்டு நாட்டத்தினை வலியுறுத்துவதாகும். பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் திருவள்ளுவமாலை (திருக்குறளல்ல), நாலடியார், இன்னாநாற்பது, இனியவை நாற்பது, திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழிநாநூறு, முதுமொழிக்காஞ்சி, ஏலாதி, நான்மணிக்கடிகை, சிறுபஞ்சமூலம் போன்ற நூல்கள் முழுக்க முழுக்க நீதிநெறிகளை உள்ளடக்கியவைகளே. இவற்றில் அடங்குவன, அடங்காதவனவாகிய நீதிநெறிகளும், அற, அறிவுரைகளில் சிறந்த பல ஔவையின் நூல்களிற் காணலாம்.

ஔவையார் ஆக்கிய நீதிநூல்கள் மாந்த உடல், மனவளர்ச்சிக்கேற்ப எளிய நடையில் சிக்கனச் சொற்களில் அமைந்த விதமே அதற்கான சான்றுகள். ஆத்திசூடியைப் **"பாலடைத் தமிழ்"** என்றும் அதாவது மழலைப் பருவத்தினருக்கு பாலும் மருந்தும் புகட்டவதற்கென்றே பயன்படுத்தும் **"பாலடை"** போன்றதாகும். கோப்பையில் குடிக்கத் தெரியாதவர் கொண்டியில் பாலை உறிஞ்சிக் குடிப்பது போன்று சிறார்க்கென்றே எளிய ஒரு வரியில் மூன்று, நான்கு சொற்களைக் கொண்டு ஆக்கப் பெற்ற கொன்றைவேந்தன் **"கொண்டித்தமிழ்"** என்றும், வளர்ந்தவர்க்கென்று வாழ்வியற் கருத்துக்களை நான்கு வரிகளாலான பாக்களின் வழி ஆக்கப் பெற்றவையே மூதுரை, நல்வழி, தனிப்பாடற்திரட்டு போன்ற நீதிநூல்களுமாகும்.

ஆத்திசூடி, கொன்றைவேந்தனை தமிழ் நெடுங்கணக்கு வரிசையிலே ஆக்கித் தந்துள்ளார். ஆத்திசூடி 108 தொடர்களாலானது. **"மாற்றானுக்கு இடங்கொடேல்"** என்றவர் எச்சூழலில் **"முனை முகத்து நில்லேல்"** என்பார். இதற்குப் போர்ப் பயிற்சியில்லாமல் போர் முனைக்குச் செல்லாதே என்பது தானே பொருள். அத்தோடு **"போர்த் தொழில் புரியேல்"** என்றும் கூறுகிறார். உயிர்க்கொலை, பொருட்சூறை, பாலியல் வன்முறை போன்ற பண்பாட்டுச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீரழிவுகளை உருவாக்கும் போரை கூலி பெற்றுச் செய்யும் ஒரு தொழிலாகக் கொள்ள கூடாதென்பதை அன்றைய தமிழரசரிடையே, தமிழ், அந்நிய அரசரிடையே ஏற்பட்ட போர் காரணமாய் தமிழினம் சீரழிந்ததை நோக்கித் துன்பமேலீட்டால் அது அறம், அறிவு அல்ல என்னும் நோக்கில் கூறியிருக்க வேண்டும். பல ஆத்திசூடிகள் ஒருவரின் **தன்னுறுதி தன்முயற்சியையும், ஆளுமையையும் ("பீடுபெறநில்"), விழிப்புணர்வையையும் ("தோற்பனதொடரேல்"), முன்னேற்றத்தையும் ("திருந்தச்செய்"), உழைப்பையும் (பூமி திருத்தி உண்)** போன்ற பல தொடர்களால் ஊக்குவிக்கிறார். **பழகும் பண்பாடுகள் பற்றி 16 சூடிகளில் கூறுவார்.** குறிப்பாக **"வல்லமை பேசேல்", "பழிப்பனபகரேல்", "மொழிவது அறமொழி", "பிழைபடப் பேசேல்", "சுழிக்கப் பேசேல்"** போன்ற பண்பாட்டு வழிகளை வளமாக்குகிறார்.

ஒருவரோடொருவர் பழகுவதற்கும் **"இணக்கமறிந்து இணங்கு"** என்றும், கல்வியில் பலகோணப்பார்வையைச் செலுத்தி **"நூல்பலகல்", "ஓதுவது ஒழியேல்"** போன்ற பல சீர்களை முன்வைக்கின்றார். "மனையாளுடன் கூடி வாழ்" என்றவர் **"மைவிழியாள் மனையகல்"** என்கிறார். அதாவது மனையாளிருக்க இன்னொருவள் வீடு செல்லாதே என்பது தானே பொருள். அத்தோடு **"தையல் சொற்கேளேல்"** என்றும் கூறுவார். இது அன்றைய நாட்களில் பலவேந்தர்கள் தம்துணைவியர் சொற்கேட்டு செயற்பட்டதால் அரசு, நாடு சீரழிந்தது போன்ற நிகழ்வுகளால் ஔவை அப்படிக் கூறினாரெனலாம். திருவள்ளுவரும் அரசியல் சார்ந்த நட்பியலிலேயே **"பெண்வழிச்சேரலை"** வைப்பதால் இது துல்லியமாய்த் துலங்கும். "ங்" என்னும் மெய்யொன்றே பயன்பட்டு உயிர்மெய்யில் "ஙகர" வரிசையை காப்பாற்றுகிறது. அந்த "ங" போல் நீயும் உன் சுற்றத்தைக் காக்க வேண்டும் என்பதற்காக **"ங போல்வளை"** என்றார்.

தமிழின அறிவியல் (விஞ்ஞான) அழிவுக்கு தமிழரே வித்தென்பதை ஔவையின் **"கைவினை கரவேல்"** என்னும் சீர் உறுதி செய்யும். அன்றிருந்த பல அறிவியல் நுட்பங்களை, மருத்துவமுள்ளிட்ட தொழில்களை, சித்து உள்ளிட்ட அரிய கலைகளை தம் வழித்தோன்றல்களுக்கே மறைத்து இருட்டடிப்புச் செய்ததால் அவை இன்று அழிந்து போய்விட்டன. அத்தோடு அந்நியராகிய வைதீக வேதவாரியர், வடமொழியாளர், அராபியர், ஐரோப்பியர் போன்றோர் வரவால் தமிழினம் நாட்டை, மொழியை, மெய்யியல், அறிவியல், வானியல், கட்டடக்கலை, இயல், இசை, நாடகம் போன்ற பலவும் சிதைக்கப்பட்டு, அழிக்கப்பட்டு, அறிவுக் களவாடப்பட்டுப் போனதால் இன்று தமிழன் தாழ்ந்து போனான். இது இவ்வந்நியர்களின் அடுத்துக் கெடுத்தலினால் ஏற்பட்டதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதையே **"வேண்டிவினைசெயேல்"** (சதி செய்யாதே) என்றார் ஔவை. இன்றும் அடுத்துக் கொடுப்போருக்கு பக்கபலமாக, முண்டு கொடுப்பவர்களாகவுமே உள்ளனர்.

கொன்றைவேந்தனே பெரும்பான்மையாக கற்றார், கல்லாதவர் நாவினில் களிநடனம் புரிவதைக் காணலாம். சில பழமொழிகள் போலவும் **"ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்"**, **"கற்பெனப்படுவது சொற்திறம்பாமை"** போன்றனவும், சில ஆத்திசூடியின் விரிவாகவும், **"நைபரெனினும் நொய்ய உரையேல்"**, **"மைவிழியார் தம்மனை அகன்றொழுகு"** போன்றனவும், இன்னும் சில திருக்குறட் சிந்தனையின் வழிப்பட்டனவாயும், **"எண் ணென்ப ஏனையெழுத்தென்ப கண் .... (கு.392)"**, பிறற்கு இன்னா முற்பகல் செய்யின் .... (கு. 210) என்னும் குறள்களை முறையே", **"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"** என்றும் **"முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்"** என்றும் கூடுகிறார். இப்படிப்பல குறள்களை நடுவகமாகக் கொண்டு பல கொன்றைச் சூடிகளை யாத்துள்ளார் ஔவைப்பாட்டி. **"கோட்செவிக்குக் குறளை காற்றுடன் நெருப்பு"** என்னும் கூற்று கவின் நயம்மிக்க ஒரு தொடராகும். அதாவது கோள்கேட்கும் செவி, பிறர் மீது கோள் சொல்லும் வாய் இரண்டும் சேர்வது நெருப்புடன் காற்றுச் சேர்வதற்கு ஒப்பானது (காட்டுத்தீயைப் போன்றது) என்று செப்புகின்றார்.

ஔவைக் கதைகளென்ற தலைப்பின் கீழ் மாணவர்க்கு அறிவையும், அறத்தையும் விளக்கும் வகையில் மூதுரை, நல்வழி, தனிப்பாடற்திரட்டு போன்ற நூல்களின் பாடல்களிலிருந்து சிலவற்றைத் தெரிவு செய்து இணைக்கப்பட்டுள்ளது. உழவையும் உழவனையும் முதன்மைப்படுத்தி அவனே உலகத்தின் அச்சாணி போன்று செயல்படுகின்றான் என்பதைத் தெளிவுபடுத்த,

"வரப்புயர நீருயரும், நீர் உயர நெல்லுயரும்..... என்னும் பாடலினூடாக வெளிப்படுத்துகின்றார் ஔவை.

இதையே திருவள்ளுவரும்

"சுழன்றும் ஏர்பின்னது உலகம் அதனால்
உழன்றும் உழவே தலை" என்பார்.

அடுத்து புல்லறிவாளராகிய நன்றியறிவில்லாத கீழோர்க்கு செய்யும் உதவி எவ்வளவு கொடிய தீங்கை விழைக்குமென்பதை, **"வேங்கை வரிப்புலி நோய் தீர்த்த விடதாரி ..."** என்னும் மூதுரைப் பாடலினால் உணர்த்துகிறார். இதையே திருவள்ளுவனாரும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நன்று ஆற்றலுள்ளும் தவறுண்டாம் அவரவர்,
பண்பறிந் தாற்றாக் கடை" (கு.469) என்பார்.

இதையே இன்னும் ஆழமாக நீதிவெண்பா 74 செப்பும்.

"நன்றறியாத் தீயோர்க்கு இடம் கொடுத்த நல்லோர்க்கும்
துன்றுகிளைக்கும் துயர்சேரும் – குன்றிடத்தில்
பின்னிரவில் வந்தகரும்பிள்ளைக்கு இடம் கொடுத்த
அன்ன முதல் பட்டது போல்"

அதாவது யாரும் ஏறமுடியாத செங்குத்தான மலையுச்சியில் அரச அன்னம் தன்னினத்துடன் வாழ்கிறது. ஒரு நாளிரவு மழையில் நனைந்தபடி ஒரு காகம் வந்து தங்கவிடம் கேட்கிறது. அரச அன்னம் உடன்படுகிறது. விடியற்காலை காகம் பறந்து போய் விடுகிறது. ஆனால் அது அன்றிரவு இட்ட எச்சத்திலிருந்து ஒரு ஆலமரம் வளர்கிறது. பரந்து படர்கிறது. விழுது விடுகிறது. பலவாண்டுகளானதால் அன்ன இனமும் பல்கிப் பெருகிறது. ஆலமர விழுதுகள் நிலத்தை தொடுகின்றன. இதைப் பற்றி ஒரு வேடன் மலையுச்சிக்கு ஏறி அன்னங்களை கண்ணி வைத்துப் பிடிக்கிறான். காலப்போக்கில் அன்ன இனமே அழிந்து போவதற்கு வழிசமைக்கிறான். பல நூற்றாண்டுகளுக்கு முன் அந்த அரச அன்னம் விட்ட தவறு அந்த இனமே அழிந்து போக காரணமாயிற்று. இதுவே தமிழரின் 4000 ஆண்டுகளுக்கு மேலான அழிவு நோக்கிய நிலையுமாகும்.

அடுத்து **"அன்பில்லாள் இட்ட அமுது"** என்னும் தலைப்பில் கற்பனையுடன் கூடிய நகைச்சுவைமிக்க கதையைக் காணலாம். முருகக் கடவுளுக்கு **"கொடியது"** பற்றிக் கூறும் போது அன்பில்லா மனைவியின் கையால் உணவுண்பது **"கொடிதினும் கொடிதென்று"** கூறுவார். அத்தோடு இல்லாள் நற்செயல், நற்காரியங்களில் கணவனுடன் இசைந்தொழுக வில்லையாயனால் அவள் உயிர்பறிக்கும் கூற்றவனுக்கு சமமென்பார் மூதுரையில். பழிக்கஞ்சாப் பெண்ணுடன் கூடிவாழ்வதை விட தனிமை சிறந்ததென்பார் நல்வழியில். இவையெல்லாவற்றிற்கும் மேலாக இல்லாளை இழந்த இல்லத்தலைவன் அனைத்தையும் இழந்தவனென்பதை உணர்த்த,

"தாயோடு அறுசுவையோம் .....
பொற்றாலியோடு எவையும்போம்"

என்பார் தனிவழிப்பாடல் வழி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாந்தனுக்கு ஆறு அறிவென்று கூறுகின்றார்களே. அது உண்மைதானா? தன்னலமே தலைவிரித்தாட, எனக்கு, உனக்கென்று பகைமையும், பொறாமையும் கொண்டு முட்டிமோதிக் கொள்கிறானே, அவனது கோபம், சினம் எவ்வளவு பொல்லாததாயிருக்கிறது. ஆனால் அது அவனுக்கு இயல்பாயிருக்கிறதே. உடன்பிறந்தே இருக்கிறதே. கோபத்தால், பழிவாங்கும் உணர்வால் அழிந்த, அழிகின்ற, குடும்பங்கள், அரசுகள், அரசர்கள், நாடுகள் எத்தனை? நெஞ்சம் நடுங்குகிறதே. கோபம் பாவங்களின் தாய் தந்தையாய் இருக்கிறதே அழிவுகளுக்கெல்லாம் மூலகாரணமாயுள்ளதே. சிந்திக்கும் அறிவைத் தானே ஆறாவது அறிவென்றனர். ஆனால் அவன் சிந்தனை கொடூரங்களில் மூலமாயுள்ளதே. மீட்சியில்லையா? இவர்களைத்தானே ஔவை **"மூவகைச் சினத்தாராய்"** பிரித்தார். என்னே அவரின் ஆழ்ந்த அறிவின் ஆளுமை.

முருகக் கடவுளின் வேண்டுகோட்கிணங்க ஔவை பெரியது, அரியது, இனியது பற்றிக் கூறும் போது 1. இறைவனோ தொண்டர் உள்ளத் தொடுக்கம், தொண்டர் பெருமையே உலகில் மிகப்பெரியது என்றும், 2. அரியவற்றுள் அரியது அறமும் (தானம்), துறவு அல்லது தொண்டு (தவம்) செய்தலென்றும், 3.இனியவற்றுள் இனியது அறிவுள்ளோரை கனவிலும், நனவிலும் காண்பதென்றும் சுட்டுகிறார். இத்தனிப்பாடல் வழி தொண்டனையும், கொடையாளனையும், பற்றறுத்தவனையும், அறிவாளனையும், ஔவையார் வெளிப்படுத்துகிறார். அதாவது அறம், அறிவு, அருள் நிறைந்த வாழும் மாந்தனையேயாகும். இதையே வள்ளுவன்,

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

என்றார்.

சங்க நூல்களில் சங்ககால ஔவையின் அற, அறிவுரைகளைப் பரக்கக்காணலாம். இவர் ஏழு கொடை வள்ளல்கள் **காரி, பாரி, ஓரி, பேகன், நள்ளி,** ஆய் போன்றோரில் ஒருவனாகிய குறுநில மன்னன் அதியமான் நெடுமான் அஞ்சியின் அவைப்புலவராக, உற்ற நண்பராக, தூதுவராகவும் இருந்து செயற்பட்டவராவார். இவரது சில பாடல்கள் அன்றைய வரலாற்றுச் செய்திகளை (நற்றினை 295) வெளிக்கொணர்பவையாகவும், காதல், போர், கொடை, புகழ் பற்றிக் கூறுவனவாகவுமுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று தமிழ் மூவேந்தர்களாகிய சேர, சோழ, பாண்டியர்களும், குறுநில மன்னர்களும் தம்வீரத்தை வெளிப்படுத்துவதற்காகப் போரை முதன்மைப்படுத்தி தம்முள் பொருதுற்றமையால் என்றும் மறவர் மடிவும், சொத்துச் சூறையும், பரத்தையர் பெருக்கமும் கண்டு அன்றைய சான்றோர் வெந்து வெதும்பிக் கொண்டிருந்த வேளை இம்மூவேந்தரும் தமிழ்நாட்டின் உறையூரில் இருப்பதறிந்து சென்று அவர்களைக் கண்டு மட்டிலா மகிழ்வுற்று என்றும் அவர்கள் ஒன்று சேர்ந்திருக்க வேண்டிய தேவையை விளித்து புறநானூறு 367ம் பாடல்வழி உணர்த்துகிறார். அத்தோடு அதிகமானுக்கும் தொண்டைமானுக்கும் இடையிலேற்பட்ட போர்முறுகலைத் தவிர்க்க தூதுவராகவும் செல்கிறார். என்னே அவரின் அறிவு, ஆளுமை.

எனவே தான் தனக்குக்கிடைத்த கிடைத்தற்கரிய நெல்லிக்கனியை, தமிழ்வாழ, தமிழினம் வாழ, கோலோச்சும் மன்னனைவிட நீடுவாழ வேண்டியவர் அறிவுடைச் சான்றோரே என்று கொண்டதால் அஞ்சி ஔவைக்கு ஈந்தான். அத்தோடு ஔவை அவனைவிட மூப்படைந்த முதிர்ந்தவராக இருந்திருக்க வேண்டும். இதை உண்டதால் ஔவை பல நூற்றாண்டுகள் வாழ்ந்திருக்கவும் கூடும். இச்செயலின் மூலம் அதிகமான் நெடுமான் அஞ்சியும் அவள் வாழும் நாள் வரை வாழ்வான். உலகியலை எடுத்துக்காட்டி நிலையான அறிவுரைகளைக் கூறுவதே பொருண்மொழிக் காஞ்சியாகும். இதில் ஒரு பாடலையே பாடியுள்ளார் ஔவையார்.அதுவும் ஆண் மேலாண்மை உலகைப்பார்த்தே அறைகூவல் விடுகின்றார்.

"நாடாகொன்றோ காடாகொன்றோ, ...
வாழிய நிலனே".
(புறநானூறு 187)

ஒரு நாடு நல்லதென்று கூறிடின் அது அங்கு வாழ்கின்ற ஆண்களிலே தான் தங்கியுள்ளதென்பதை துலக்குகின்றார். அன்று ஆண் மேலாண்மை கோலோச்சியதென்பதை இக்கூற்று தெளிவு செய்கிறது. நாடு நலம் பெற, நீதி, நேர்மை மேலோங்க, பெண்ணிய விடுதலையின் முதற்கூற்றாகச் சங்ககால ஔவை இதை வெளிப்படுத்துகின்றார்.

ஔவையாரைப் பலராகக் கொண்டாலும் சரி, ஒருவர் இருவராகக் கொண்டாலும் சரி ஔவையின் கூர்ந்த மதியினையும் ஆழ்ந்த புலைமையையும், ஆசுகவி (நினைத்தவுடன் கவிபாடல்) பாடும் ஆற்றலையும் யார் தான் வியக்கமாட்டார்கள். கவிநயத்தை, கற்பனைத்திறனை,கருத்தாழத்தை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாப்பமைதியினை, சொல்லடுக்கு நளினத்தை, இசையின்பத்தைச் செவிமடுக்க எத்தனை காதுகள் தான் தேவை. எனவே தான் ஔவை உலக கிரேக்க, இலத்தீன், ஆங்கில பெரும் புலவர்களோடு ஒப்பு நோக்கப்படுகிறார்.

ஔவையின் உலகப் புகழ்

அமெரிக்க நாட்டின் மெக்சிக்கோவில் பிரமாண்ட அரசுப் பொது உயர்நிலைப் பள்ளியில் வானியல் துறை ஒன்று உள்ளது. அத்துறை சார்ந்த உலகளாகிய கல்விக்கு கணினி வழி படிக்க இணையத்திலும் தக்க ஏற்பாடுகள் உள்ளன. அப்பள்ளியின் குறிக்கோள் வாசமாக ஔவையின்

"கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு" என்ற தொடர் தேர்ந்தெடுக்கப் பெற்று விளங்குகின்றது. இதன் ஆங்கில ஆக்கம் அங்கு இவ்வாறு உள்ளது.

'What we have learnt is like a handful of earth.
'What we have yet to be learnt is like the whole world' - Avvaiyar.

அறிவியல் கண்காட்சி தொடர்பான வேறு சில இடங்களிலும் ஔவையின் இவ்வசனம் அமெரிக்காவில் காணப்படுகின்றது.

4. சங்க கால ஔவை

புறநானூற்றில் பெரும்பாலும், குறுநில மன்னர்கள், வள்ளல்கள், மன்னர்கள் முதலியவர்களைப் பற்றியே பாடியுள்ளார். **அதியமான் நெடுமான் அஞ்சி அவன் மகன் பொகுட்டு எழினி, தொண்டைமான், நாஞ்சில் வள்ளுவன், மூவேந்தர்கள்** ஆகியவர்களின் வீரம், போர்த்திறம், கொடைத்திறம் முதலியவற்றையே சிறப்பாகக் குறிப்பிடுகிறார்.

நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு இம்மூன்று அகத்துறைப் பாடல்களில், **காதல் பற்றிய சில அரிய செய்திகளைக்** கூறியிருக்கிறார். காதல் பற்றிய செய்திகளைக் கூறும் பாடல்களில் **தலைவன், தலைவி, தோழி** முதலியோர் கூற்றை நயமாகக் கூறுவதோடு அவற்றில் இயற்கை வருணனைகளையும், சில வரலாற்றுச் செய்திகளையும் கூடக் கூறியுள்ளார். அவற்றைப் பின்னர் காண்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறநானூற்றில் காணும் முப்பத்து மூன்று பாடல்களில், **இருபத்திரண்டு** பாடல்கள், தம்மை ஆதரித்த **வள்ளல் மன்னனாகிய அதியமானைப்** பற்றிப் பாடியவையே என்பது குறிப்பிடத்தக்கது. அதியமான் நெடுமானஞ்சி கடையெழு வள்ளல்களில் ஒப்பற்ற வள்ளல் என்பதையும், நிகரற்ற போர் வீரன், மழவர் தலைவன் என்பதையும் அவன் தமக்கு நெல்லிக்கனி ஈந்தமையையும், காஞ்சி தொண்டைமானிடம் தாம் அரசியல் தூதுவராகச் சென்றதையும், அவன் சேரனுக்கு உறவானவன் என்பதையும் குறிப்பிடுகிறார்.

பனம்பூ மாலையையும், வெட்சி வேங்கைப் பூ மாலைகளையும் அணிபவன் என்றும், **ஏழு அரசர்களை எதிர்த்து வென்றவன்** என்றும், கோவலூரை வென்றவன் என்றும், பரணர் போன்றவர்களால் புகழ்ந்து பாடப்பட்டவன் என்றும் இத்தகைய வேறுபல செய்திகளையும் குறிப்பிடுகிறார்.

அதியமானின் ஊர் தகடூர். அவனது மலை குதிரைமலை. அவன் மகன் பொகுட்டெழினி. அவனுடைய முன்னோர் பூவுலகத்திற்குக் கரும்பினைக் கொணர்ந்தனர் என்றும், அவர்களுக்கு வரம் கொடுக்கத் தேவர்கள் தங்கிய சோலை உள்ளது என்றும், அஞ்சி, நெடுமானஞ்சி, அதியமான் நெடுமானஞ்சி, எழினி என்னும் பல பெயர்கள் இவனுக்கு உண்டு என்றும் – இவை போன்ற இன்னும் பல்வேறு செய்திகளையும் ஔவையார் குறிப்பிடுகிறார்.

4.1. அஞ்சியின் வீரம் :-

"அரசர்களே நீங்கள் எத்தகைய வலிமையுடையவராயினும் பின்னணிப் பலப்படையைக் கொண்டு, 'யாம் அதியனை வெல்லுவோம்' என்று மட்டும் அவனைப் பற்றி, அறிவதற்கு முன்னர் வேண்டுமானால் கூறலாம். ஆனால், அறிந்த பின்னர்அவன் பலத்தை நீங்களே உணர்ந்து அஞ்சுவீர்கள் என்பதில் ஐயமில்லை. அவன் மிக உயர்ந்த வலிமை படைத்தவன். வேல் ஏந்திய படை மழவர் தலைவன். அழகிய அகன்ற மார்பினை உடையவன்.

'யாவீர் ஆயினும்....
யாம் பொருதும் என்றல் ஓம்புமின் – ஓங்குதிறன்
ஒளிறுஇலங்கு நெடுவேல் மழவர் பெருமகன்
..... அம்பகட்டு மார்பின்
.....
..... என்னையைக் காணா ஊங்கே' (புறம் – 88)

என்று பாடுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுடைய வலிமையையும், திண்மையையும் பற்றிக் குறிப்பிடும்போது, "நாள்தோறும் எட்டுத் தேர்களைச் செய்யும் தச்சன். ஒரு மாதமெல்லாம் முயன்று ஒரு சக்கரத்தைச் செய்வது போன்று செயலில் விரைவும் வலிவும் கொண்டவன். அத்தகைய ஆற்றல் வாய்ந்த போர்வீரன் எங்களிடத்தே உள்ளான். அதனால் அவனை எதிர்த்துப் போர்க்களம் புகும் கருத்தை விட்டு விடுங்கள் என்னும் கருத்தையே,

'களம்புகல் ஓம்புமின் தெவ்வீர்
எம்முளும் உளன்ஒரு பொருநன் வைகல்
எண்தேர் செய்யும் தச்சன்
திங்கள் வலித்த கால்அன் னோனே"

(புறம் - 87)

என்று பாடியுள்ளார்.

புறம் 89 வது பாடலில் ஔவையாரை நோக்கி,

'விரலி நீ வாழும் பெரிய நாட்டிலே
என்னோடு போர் புரியும் வீரரும் உளரோ?"

எனக் கேட்ட வேந்தரை நோக்கி ஔவையார்.

பொருபடை வேந்தே!
எறிகோல் அஞ்சா அரவம் அன்ன
சிறுவல் மள்ளரும் உளரே அதாஅன்று
பொதுவில் தூங்கும் விசியுறு தண்ணுமை
வளிபொரு தெண்கண் கேட்பின்
அதுபோர் என்னும்என் ஐயனும் உளனே" (புற - 89)

அதாவது கோலைக் கண்டு சீறும் பாம்பை அடித்தால் அது மிகுந்த சினம் கொண்டு சீறி எழுவதுபோல், அவனைத் தூண்டினால், உடனே சீறி எழுந்து போர் செய்யப் புறப்படும் வீரர் பலர் அதியமானிடம் உள்ளனர். அது மட்டுமன்றிப் பொது மன்றத்தில் கட்டப்பட்டுத் தொங்கும் பறையில் காற்று மோதுவதனால் எழும் ஓசையைக் கேட்டால், அது போர் முரசு என்று எண்ணி உடனே வீரத்தோடு எழும் தலைவன் எங்கள் அதியமான்" என்று கூறுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4.2. தொண்டைமானிடம் தூது :-

வள்ளல் அதியமானை எதிர்த்துப் போரிடத் தொண்டைமான் ஆயத்தம் செய்கிறான் என்பதையறிந்த ஔவையார், தொண்டைமானிடம் தூது சென்று, அவனுடைய படைக்கலக் கொட்டிலில் போர்க்கருவிகள் எல்லாம் புதுமையும், வடிவமும் குலையாது நெய்பூசி மாலையணிவிக்கப்பட்டு அழகுடன் விளங்குகின்றனவென்றும், அதியமானுடைய போர்க் கருவிகளோ பகைவர்களை அடிக்கடி தாக்குவதால் கங்கும் நுனியும் முறிந்து கொல்லன் உலைக்களத்தில் கிடக்கின்றன என்றும் நயம்படக் கூறும் பின்வரும் வஞ்சப்புகழ்ச்சிப் பாடல் எண்ணியெண்ணி இன்புறத்தக்கது.

"இவ்வே, பீலி அணிந்து மாலை சூட்டிக்
கண்திரள் நோன்காழ் திருத்திநெய் அணிந்து
கடியுடை வியன்நகர் அவ்வேஅவ்வே
பகைவர் குத்திக் கோடுநுநி சிதைந்து
கொல்துறைக்கு உற்றில மாதோ – என்றும்
உண்டாயிள் பதம் கொடுத்து
இல்லாயிள் உடன் உண்ணும்
இல்லோர் ஒக்கல் தலைவன்
அண்ணல்எம் கோமான் வைந்துதி வேலே'

(புறம் - 95)

4.3. பகைவர்க்கு எச்சரிக்கை :-

மேலும், அதியமானின் வாள்கள் பகைவர் தசையின்கண்ணே குளித்து வடுபட்டுவிட்டன. வேல்கள் பூணோடு காம்பின் ஆணிகள் கழன்று நிலையழிந்தன. யானைகள் பகைவர் கோட்டைக் கதவுகளைத் தகர்த்து, தந்தங்களின் கிம்புரிகள் கழன்று விட்டன. குதிரைகள் பகைவர்களின் மார்பையும், உடல்களையும் மிதித்தக் குளம்புகள் அரத்தக் கறைபட்டுள்ளன. கேடயங்கள் பகைவர் அம்புகளால் துளைக்கப்பெற்றுள்ளன. அவ்வளவு ஒப்பற்ற போராற்றல் பெற்றவன் அதியன். ஆதலால் உங்கள் வளமான ஊர்கள் உங்களுக்கே உரிமையாய் இருக்க வேண்டுமென்றே நீங்கள் எண்ணினால், முறையாக அதியனுக்கு உரிய கப்பம் கட்டி விடுங்கள்' என்று அதியன்பால் போர் செய்ய எண்ணிய பகை மன்னர்களை நயமாக எச்சரிக்கிறார். அவ்வீரச் சுவையை விளக்கும் பாடல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்க்கு உரைஇப் புகன்று கழித்தவாள்
.....
ஊன்உற மூழ்கி, உருஇழந் தனவே,
வேலே, குறும்பு அடைந்த அரண்கடந்து
சுரை தழீஇய இருங்காழொடு
மடை கலங்கி நிலை திரிந்தனவே,
களிறே, எழுஉத் தாங்கிய கதவம் மலைத்து, அவர்
குழூஉக் களிற்றுக் குறும்பு உடைத்தலின்
பரூஉப் பிணிய தொடிகழிந் தனவே,
மாவே, பரந்து ஒருங்கு மலைந்த மறவர்
பொலம் பைந்தார் கெடப் பரிதலின்
களன்உழந்து அசைஇய மறுக்குளம் பினவே,
.....
பிணிக்கதிர் நெல்லின் செம்மல் மூதூர்
நுமக்குஉரித் தாகல் வேண்டின் சென்றுஅவற்கு
இறுக்கல் வேண்டும் திறையே....."

(புற - 97)

மற்றும் ஓர் பாடலில் ஔவையார் "சிறிய குளத்தில் பெரிய யானை குளிக்கும்போது அதன்மேல் சின்னஞ்சிறார்கள் அமர்ந்து கொண்டு அதன் வெள்ளைத் தந்தங்களைக் கழுவுவர். அப்பொழுது அது அமைதியாக இருக்கும். ஆனால் அதே யானை போர்க்களம் சென்றால் சீறி எழுந்து பகைவரை அழிக்கும். அதுபோல பெரும! நீ எம் போன்ற புலவர்களுக்கு இனிமையானவன். ஆனால், போர்க்களத்தில் மாற்றாருக்கு மதங்கொண்ட யானையைப் போன்றவனாய்" என்னும் கருத்தமையைப் பாடுகிறார்.

ஊர்க்குறு மாக்கள் வெண்கோடு கழாஅலின்
நீர்த்துறை படியும் பெருங்களிறு போல
இனியை பெரும! எமக்கே மற்றதன்
துன்னரும் கடாஅம் போல
இன்னாய் பெரும! நின் ஒன்னா தோர்க்கே!

(புறம் - 94)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4.4. தமிழ்வாழ ஈகை :-

ஒருமுறை, மலைப் பிளவின் கண்ணிருந்து தமக்குக் கொண்டுவந்து கொடுக்கப்பட்ட அருநெல்லிக்கனியை ஔவைக்கு அதியமான் கொடுத்தான். அக்கனியை உண்பவர் பன்னூறு ஆண்டுகள் வாழ்வர். அத்தகைய கனியைத் தான் உண்டு வாழ வேண்டும் என்று எண்ணாமல், ஔவைக்குக் கொடுத்தால், ஔவையார் நீண்டநாள் வாழ்ந்து மக்களுக்குத் தன்னைவிட அருந்தொண்டாற்றுவார் என்னும் எண்ணத்துடன் கொடுத்தான். அதன் அருமையைப் பின்னர் அறிந்து ஔவையார், அதியமானின் வியக்கத்தக்க ஈகை (தியாக) உணர்வை எண்ணி மகிழ்ந்து, 'போர்க்களத்தில் பகைவரை மாய்க்கின்ற பெரிய கையினையும், மாற்றாரை வெல்லும் வீரச் செல்வத்தினையும், பொன்னால் செய்யப்பட்ட மாலையையும் உடைய நீ, நான் சாதல் இன்றிப் பல்லாண்டுகள் வாழ வேண்டும் என்று அரிய நெல்லிக்கனியை அளித்தாய். நீ பால் போலும் பிறை நுதல் விளங்கும் திருமுடியினையும், நீலமணி போலும் கரிய கண்டத்தினையும் உடைய சிவபெருமானைப்போல் பல்லாண்டுகள் சிறப்புடன் வாழ்வாயாக" எனும் பொருள்படும் பின்வரும் பாடலைப் பாடி வாழ்த்துகிறார்.

போரடு திருவிற் பொலந்தா ரஞ்சி
பால்புரை பிறைநுதற் பொலிந்த சென்னி
நீல மணிமிடற் றொருவன் போல
மன்னுக பெரும நீயே, தொன்னிலைப்
பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி, குறியா (து)
ஆதல் நின் அகத்(து) அடக்கிச்
சாதல்நீங்க எமக்கீந் தனையே"

(புறம் - 91)

4.5 ஈகைச் சிறப்பு :-

அதியமான், பரிசிலர் ஒருநாள் சென்றாலும், இருநாள் சென்றாலும், பலநாள் பலரோடு சென்றாலும், சிறிதும் வெறுப்பும், சலிப்புமின்றி முதல்நாள் கொடை வழங்கியது (உபசரித்தது) போன்றே அன்போடும் ஆர்வத்தோடும் வரவேற்று நலன் செய்வான் (உபசரிப்பவன்), யானை தன் கொம்பினிடையே வைத்த கவளம் எவ்வாறு தவறாமல் அதன் வாய்க்குள் செல்லுமோ, அவ்வாறு அவனிடம் பரிசில் பெறச் செல்லும் இரவலர் சிறிது கால தாமதம் ஏற்பட்டாலும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டாயமாக (நிச்சயமாக) அவனிடமிருந்து பரிசில் பெற்றே திரும்புவர். அத்தகைய கொடைவள்ளல் அதியமான் என்று அவன் கொடை வளத்தைப் புகழ்கிறார்.

"ஒருநாள் செல்லலம், இருநாள் செல்லலம்
பலநாள் பயின்று பலரொடு செல்லினும்
தலைநாள் போன்ற விருப்பினன் மாதோ,
இழையணி யானை இயல்தேர் அஞ்சி
அதியமான், பரிசில் பெறூஉம் காலம்
நீட்டினும் நீட்டாகு) ஆயினும், களிறுதன்
கோட்டுஇடை வைத்த கவளம் போலக்
கையகத்தது, அது பொய்யா காதே.." (புறம் - 101)

மேலும், காலமும் இடமும் கருதாது, ஒழியாமல் எப்பொழுதும் மழை கொடுக்கும் மேகம் போன்று கைம்மாறு கருதாது வாரி வழங்கும் வள்ளல் தன்மை கொண்ட கையை உடையவன், தம்மை யாதரித்த அதியமான் என்கிறார்.

4.6 நல்ல நிலம் :-

மக்களின் வாழ்வும் தாழ்வும் அவர்கள் வாழும் இடத்தைப் பொறுத்தன அல்ல. அவ்வந் நிலத்து வாழும் ஆடவரைப் பொறுத்ததே. 'நாடானால் என்ன? காடானால் என்ன? மேடானால் என்ன? பள்ளமானால் என்ன? எவ்விடத்தில் ஆடவர் நல்லவராக விளங்குகின்றனரோ அவ்விடத்திலே நிலமே! நீயும் நன்றாக விளங்குவாய்' என்கிறார்.

'நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே' (புறம் 187)

என்பதே. இது ஆடவர்கள் கருதத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4.7 மூவேந்தருக்கு அறிவுரை :-

தமிழ் மூவேந்தர்கள் என்று பெருமையாகக் கூறிக் கொள்ளும் சேர சோழ பாண்டியர் தமக்குள் பிணக்குக் கொண்டே பெரும்பாலும் வாழ்ந்திருந்தனர். ஒருவரை எதிர்த்து ஒருவர் போர் புரிந்து, நாட்டின் அமைதியைக் குலைத்து வந்தனர். இம்முப்பெரு வேந்தரும் தத்தம் எல்லைகளுக்குட்பட்டு மாற்றரசனின் மண்ணை விரும்பாது வாழ்ந்திருந்தால் நம் தமிழ்நாட்டை வேற்று மொழியரசர் எவரும் நெருங்கி இருக்க மாட்டார். ஆனால் அவர்களிடம் அத்தகைய ஒன்றுபட்ட நிலைமையைக் காண்பது மிகமிக அரிதாயிருந்தது.

ஒருமுறை, **சோழ நாட்டில் உறையூரில் பெருநற்கிள்ளி** என்னும் சோழ மன்னன் அரசமேன்மை (இராஜசூய) வேள்வி நடத்தினான். அவ்வேள்வி மண்டபத்தில் **சேரமான் மாரி வேண்கோவும், பாண்டியன் உக்கிரப் பெருவழுதியும் வந்து அச்சோழனோடு** ஒருங்கமர்ந்திருந்தனர். அப்போது அங்குப் போந்த ஔவை பெருமாட்டியார் மூவேந்தரும் ஒருங்கிருந்த காட்சியைக் கண்டு பெருவியப்பும் மகிழ்ச்சியும் கொண்டார். அந்த மாட்சி மிகு அரிய காட்சியை ஔவையார் போற்றி அம்மூவேந்தரையும் உள்ளங்குளிர வாழ்த்தி அவர்க்கு அறிவுரை புகட்டுகிறார்.

தேவலோகத்தையொத்த நாடு தம்முடையதேயாயினும், அது எப்போதும் தமக்கே உரிமைப் பட்டிராது. ஒருவர் அந்நாட்டுக்கு உரியர் அல்லராயினும், நற்றவம் செய்தவராயின் அது அவர்க்கே உரியதாகும். ஆகையால் நீவீர் உம்மிடம் வந்து இரக்கும் பார்ப்பார் கைந்நிறையப் பூவையும், பொன்னையும் நீர்வார்த்து அளித்து, அவர்கட்குச் செல்வத்தைக் குறையாமல் வழங்கி, உங்களுக்கு அறுதியிட்ட வாழ்நாள் முழுவதும் நனி வாழ வேண்டும். பிறவிப் பெருங்கடலைக் கடப்பதற்கு நற்கருமம் அன்றி வேறு புகல் இல்லை. ஐம்புலன்களையும் அடக்கியிருக்கும் ஆற்றல் பெற்ற அந்தணர், வேள்வியில் வளர்க்கும் முத்தீயையும் போல ஒருங்கு சேர்த்து, அழகுமிக்க கொற்ற வெண்குடை நிழற்றும் கொடிதேர் வேந்தர்களே! இவ்வாறு நீங்கள் ஒன்றுசேர்ந்து உறைதலால் உண்டான பெருமையும், பயனும் உலக நன்மையும் யான் அறிந்துரைக்கும் அளவினையுடையன அல்ல!

உங்கள் வாழ்நாள் விண்மின்களினும், மழைத்துளிகளினும் மேம்பட்டுப் பல்கிப் பெருகுவதாக! அப்பாடல் புறம் - 367

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4.8 வரலாற்றுச் செய்தி:-

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழ் நாடு கடல் கடந்த வெளிநாடுகளுடன் வாணிகத் தொடர்பு கொண்டிருந்து வருகிறது என்பதே அந்தச் செய்தி.

தலைவியின் தந்தை கடற்கரைத் தலைவன். அவனது கடற்கரையில், வெளிநாடுகளிலிருந்து பண்டங்களை ஏற்றிக் கொண்டு, காற்றின் துணையால் பாய் விரித்து ஓடிவரும் மரக்கலங்கள் எண்ணற்றவை தங்கியுள்ளன. அம்மரக்கலங்கள் வியப்புடைய (அற்புதமான) சித்திர வேலைப்பாடுகளோடு அழகுற விளங்குவன. அத்தகைய எழில் மிகு மரக்கலம் ஒன்றில் வெளிநாட்டிலிருந்து மிகுந்த போதை தரும் மதுக்குடம் (கள் சாடி) கரையில் இறக்கி வைக்கப்பட்டிருக்கிறது. "அந்த மது நிறைந்த சாடியைப் போன்றவள் தலைவி. அதன் உள்ளிருக்கும் போதை தரும் மது போன்றது அவளிடம் உள்ள இன்பம்!' என்னும் உவமையைக் கூறும் ஔவையாரின் அற்புதமான கற்பனைக் கவித்திறனை அளவிட்டுக் கூற முடியுமோ?

"முரிந்த சிலம்பின் நெரிந்த வள்ளியின்
புறனழிந்து ஒலிவரும் தாழ்இருங் கூந்தல்
ஆயமும் அழுங்கின்று, யாயும் அஃது அறிந்தனள்,
அருங்கடி அயர்ந்தனள்காப்பே, எந்தை
வேறுபல் நாட்டுக் கால்தர வந்த
பலவினை நாவாய் தோன்றும் பெருந்துறைக்
கலிமடைக் கள்ளின் சாடி அன்னஎம்
இளநலம் இல்கடை ஒழியச்
சேறும் வாழியோ முதிர்கம் யாமே!" (நற்றினை - 295)

(முரிந்த சிலம்பு - பசுமையற்றுப் போன மலைப்பகுதி, எரிந்த வள்ளி - காய்ந்து கிடக்கும் வள்ளிக்கொடி, புறனழிந்து - வெளிப்பக்கத் தோற்றத்தின் அழகு கெட்டு, ஒலிவரும் தாழ்இருங் கூந்தல் - தழைத்துத் தாழ்ந்து தொங்கும் கருங்கூந்தல், ஆயம் தோழியர் கூட்டம், அழுங்கின்று - வருந்துகின்றனர். யாய் - தாய், அருங்கடி - எம் தந்தை, கால்தர வந்த - காற்றினால் பாய்விரித்துச் செலுத்தப்பட்டு வந்துள்ள, பலவினை - பலவகை சித்திர வேலைப்பாடுகள், நாவாய் - மரக்கலம், கலிமடை - போதை உண்டாக்கும் குடி, மது, இளநலம் - இளமையும் அழகும், இல்கடை ஒழிய - இல்லத்திலே சிறை வைக்கப்பட்டு காலம் கழிக்க, சேறும் - சென்றடைவோம். முதிர்கம் - கிழவியாய்ப் போவோம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4.9 கொடையின் தன்மை :-

ஔவையார் தம்மை ஆதரித்த வள்ளல் அதியனின் கொடைச் சிறப்பையும் நயமாகப் புகுத்திவிடுதல், நம்மை மகிழ்ச்சிப் பெருக்கில் திளைக்க வைக்கிறது.

அது கார் காலம். வானத்தில் மேகம் புடைசூழ மழை மிகையாகப் பெய்கிறது. இதனையும் உவமையாக வைத்துத் தம்மை ஆதரித்த வள்ளல் அதியமானின் கொடை வளத்தை நயமாக வருணிக்கிறார். நம் புலவர் பெருமாட்டி.

நிமிர்ந்து நடைபயிலும் யானைப் படையையும், விரைந்து ஓடும் குதிரைப் படையையும் உடையவன் அதியமான் நெடுமான் அஞ்சி. அவன் கொலுவீற்றிருக்கிறான். தன்னை நாடி வந்து சூழ்ந்துள்ள இரவலர்க்கெல்லாம். தன் புகழ் நீண்ட தூரம் சென்று விளங்குமாறு, தேர்களைப் பரிசிலாக வழங்குகிறான். வானத்தில் மேகக் கூட்டம் நிலைத்திருந்து பெருமழை பெய்வது போல உள்ளதாம் அதியமானின் கொடை வழங்கும் காட்சி இதோ!

இவ்வியப்புமிகு காட்சியை விளக்கும் பாடல்:-

'அருந்துயர் உழத்தலின் உண்மை சாம்எனப்
பெரும்பிறி தின்மையின் இலேனும் அல்லேன்,
கரைபொருது இழிதரும் கான்யாற்று இகுகரை
வேர்கிளர் மராஅத்து அம்தளிர் போல
நடுங்கல் ஆனா நெஞ்சமொடு இடும்பை
யாங்ஙனம் தாங்குவென் மற்றே! ஓங்குசெலல்
கடும்பகட்டு யானை நெடுமான் அஞ்சி
ஈர நெஞ்சமொடு இசைசேண் விளங்கத்
தேர்வீசு இருக்கை போல
மாரி இரீஇ மான்றன்றால் மழையே!

(நற்றிணை - 381)

(உழத்தல் - வருந்துதல், பெரும் பிறிது - மரணம், இலேனும் - (அன்பு) இல்லாமல் (போனவளும்), இகுகரை - இடிந்து கொண்டிருக்கும் கரை, கரைபொருது இழிதரும் - கரையைப் பெயர்த்து ஓடும், கான்யாறு - காட்டாறு, வேர்கிளர் - வேரைப் பெயர்த்து, மா அத்து - மாமரத்தின், அம்தளிர் - அழகிய இளந்தளிர், ஆனா - தாங்கிக் கொள்ள முடியாத, இடும்பை - துன்பம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓங்குசெலல் – நிமிர்ந்து நடக்கும், பகட்டு யானை – ஆண் யானைப்படை, நெடுமான் – விரைந்து செல்லும் குதிரைப்படை, இசை சேண் விளங்க – (தன்) புகழ் நெடுந்தொலைவு பரவ, தேர் வீசு இருக்கை – தேர்களைப் பரிசாக அளித்தற்கு அமர்த்திருக்கும் கொலுக் காட்சி, மாரி – மேகம், இரீஇ – நிலைத்திருந்து, மான்றன்று – பெய்தது).

4.10 எவர் சான்றோர் :-

தலைவன் பிரிந்து சென்று குறித்த நாளில் வாக்களித்தது போல் திரும்பவில்லை. அவன் பிரிவைத் தலைவி தாங்கிக் கொள்ளமாட்டாள் என்று அவளது தோழி கவலையடைகிறாள். அதனையுணர்ந்த தலைவி.

'தோழி! தலைவரை நினைத்தால் உள்ளம் வேகிறது. நினையாமல் இருந்தாலோ என் உள்ளத்தில் எழும் காமநோய் வானத்தைத் தொடுவது போன்று ஓங்கிப் பெருகுகிறது. இவ்வாறு என்னை வேதனைப் பட வைத்த கணவர் – என்னை மருவிய என் காதலர், உண்மையான சான்றோர் அல்லர்.

என்னைப் பிரிந்து இவ்வளவு நாட்களாகியும் திரும்பி வரவில்லையே. அதனால் என்பால் அன்பில்லாதவர் ஆவார். பிரிவால் உண்டாக்கிய உடல் வேறுபாடுகளையறிந்த ஊரார் தம்மைத் தூற்றுதலை எண்ணாமல் இன்னும் அங்கேயே உள்ளாரே, அதனால் நாணமில்லாதவர் ஆவார். இல்லறம் நடத்துபவர் உரிய காலத்தில் தலைவியுடன் இருந்து இன்பமடையும் உலகியலை அறியவில்லை. எனவே அவர் ஒப்புரவிலாதவர், மெலிந்து நலியும் என்துயர் நீக்க வாராமையால் அவர் கண்ணோட்டம் (தாட்சண்யம்) இல்லாதவராவர். தாம் வாக்களித்தபடி வாராமையால் அவர் வாய்மை இல்லாதவராவர், ஆதலால் அவர் சான்றோர் அல்லர்! சரிதானே?)" என்பதன் உட்பொருளை இது இனிது உணர்த்துகிறது. இதோ அந்நயமிகு பாடல்:

"உள்ளின் உள்ளம் வேமே, உள்ளாது
இருப்பின் எம் அளவைத்து அன்றே, வருத்தி
வான்தோய் அற்றே காமம்
சான்றோர் அல்லர் யாம் மரீஇயோரே'

(குறுந்தொகை – 102)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(உள்ளின் – நினைத்தால்: எம் அளவைத்து அன்று – தாங்கிக் கொள்ளும் என் (ஆற்றல்) அளவுக்கு உட்பட்டதன்று, வான்தோய்வு அற்று – வானத்தைத் தொடுவதைப் போன்று ஓங்கிப் பெருகுவது, யாம் மரீஇயர் – என்னால் மருவப் பட்டவர்)

வாழ்க தமிழ்! வளர்க பகுத்தறிவு! மறுமலர்ச்சி பெறுக தமிழர் பண்பாடு!

குறிப்பு :–

வடமொழிச் சொற்கள், கிரந்த எழுத்துக்கள் முடிந்தவரை தவிர்க்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. நீதி நூல் ஔவையார்

5.1 ஆத்தி சூடி

"ஆத்திசூடி அமர்ந்த தேவனை
ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே."

பொருள் : ஆத்திமாலை சூடிய இனிமை தவழ்பவனாக இருக்கும் இறைவனை (சிவபெருமானை) பல்கால் புகழ்ந்து நாம் வணங்குவோம்.

1). அ - அறஞ்செய விரும்பு
பிறருக்கு நன்மை செய்வதற்கு நீ எப்பொழுதும் விருப்பம் கொள்.

2). ஆ - ஆறுவது சினம்
சினம் கொள்ளாதே (கோபத்தை அடக்கு)

3). இ - இயல்வது கரவேல்
நம்மால் முடிந்ததை உதவி, கொடை, உழைப்பு, தொண்டு ஆகியவற்றை ஒளியாமல் செய்ய வேண்டும்.

4). ஈ - ஈவது விலக்கேல்
ஒருவர் ஒருவருக்குக் கொடுப்பதைத் தவிர்க்காதே, தடுக்காதே.

5). உ - உடையது விளம்பேல்
உனக்குள்ளவற்றைத் தற்பெருமையாகச் சொல்லாதே.

6). ஊ - ஊக்கமது கைவிடேல்
தொடர்ந்த முயற்சியை விட்டு விடாதே.

7). எ - எண் எழுத்து இகழேல்
அளவையியல் (தர்க்கம்), இலக்கணம் ஆகிய கல்வியை என்றும் தேவையற்றது என தள்ளாதே.
(எண் = தர்க்கம் = அளவையியல், எழுத்து = இலக்கணம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8). ஏ - ஏற்பது இகழ்ச்சி
பிறரிடம் ஒன்றை எதிர்பார்ப்பது பழியேயாகும்.

9). ஐ - ஐயம் இட்டுண்
பசிப்போர்க்கு உணவு தந்து நீயும் உண்ணுக.

10). ஒ - ஒப்புரவு ஒழுகு
தனக்கு ஒத்தது பிறருக்கும் ஒத்தாகும் என எண்ணி நட.

11). ஓ - ஓதுவது ஒழியேல்
கற்பதை விடாதே என்றும் கற்றுக் கொண்டிரு.
(ஒழியேல் நீங்காதே)

12). ஔ - ஔவியம் பேசேல்
பொறாமைப் பேச்சுப் பேசாதே.

13). ஃ - அஃகம் சுருக்கேல்
உணவுப் பொருளைக் குறைவாகப் பயிர் செய்யாதே.

14). க - கண்டு ஒன்று சொல்லேல்
கோள் சொல்லாதே.

15). ங - ஙப்போல் வளை
'ங' இன் உயிர்மெய் எழுத்துக்கள் 12 இற்காகவும் "ங' மட்டும்
பயன்படுவதுபோல் நீயும் உலகிற்குப் பயன்படு.

16). ச - சனி நீராடு
ஊற்று நீரில் குளி.
(சனித்தல் - தோன்றுதல் - ஊற்று)

17). ஞ - ஞயம்பட உரை
எதையும் கனிவாக, நயமிக்கதாகக் கூறு.

18). ட - இடம்பட வீடெடேல்
தேவைப்படும் அளவுக்கு மேல்வீட்டைப் பெரிதாகக் கட்டாதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19). ண - இணக்கமறிந்து இணங்கு

ஒருவர் பழகும் இயல்பை அறிந்து அவரிடம் நீ பழகு.

20). த - தந்தை, தாய் பேண்

தந்தையையும், தாயையும் காத்தல் பிறந்தவர் கடமை.

21). ந - நன்றி மறவேல்

பிறர் நலம் செய்யும் நல்லோரை மறவாமல் போற்றுக.

22). ப - பருவத்தே பயிர் செய்

எந்த ஒன்றையும் செய்ய வேண்டிய காலத்தில் செய்து விடுக.

23). ம - மன்று பறித்து உண்ணேல்

பொதுப்பொருளைக் கொள்ளையடித்து வாழாதே.

24). ய - இயல் பலாதன செயேல்

அவரவர் தகுதிக்குத் தக்க செயல்களையே செய்தல் வேண்டும். தகுதி அல்லாதவற்றைச் செய்யக் கூடாது.

25). ர - அரவம் ஆட்டேல்

பாம்பைப் பிடித்து விளையாட்டுக் காட்டாதே. பாம்புடன் விளையாடினால் கெடுதி ஏற்படும்.

26). ல - இலவம் பஞ்சில் துயில்

மெல்லிய படுக்கையில் படு.

27). வ - வஞ்சகம் பேசேல்

உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசாதே.

28). ழ - அழகு அலாதன செயேல்

துன்பம் வந்த காலத்தும் இழி செயல்களைச் செய்யக் கூடாது.

29). ள - இளமையில் கல்

நல்லவற்றையெல்லாம் இளமைப் பருவத்திலேயே கற்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30). ற - அறனை மறவேல்
நல்லனவற்றை நினைந்து செய்யும் செயலை மறந்து விடாதே. (மறவேல் - மறவாதே)

31). ன - அனந்தல் ஆடேல்
அலைமோதும் கடலில் விளையாடாதே.
(அனந்தல் - குறைவற்ற வளமுடைய கடல்)

32). க - கடிவது மற
சொல்லக் கூடாதென்று சான்றோர் கூறுவனவற்றை நினைவிலும் கொள்ளாதே. மறந்து விடு. (கடிவது - நீக்குவது)
(கோபம் உண்டாகும் சொற்களை மறக்க வேண்டும்.)

33). கா - காப்பது (நோன்பு) விரதம்
அவரவர் ஐம்பொறிகளையும் அடக்கிக் காப்பதே நோன்பு எனப்படும் விரதம் ஆகும்.

34). கி - கிழமைப்பட வாழ்
உன்னை உறவு உரிமை உடையவன் என்று பிறர் நினைக்க, உறவு உரிமை உடையவனாக வாழ்வாயாக.

35). கீ - கீழ்மை அகற்று
இழிவான செயல்களை நீக்க வேண்டும்.

36). கு - குணமது கைவிடேல்
நல்ல குணங்களை விட்டுவிடாதே.

37). கூ - கூடிப் பிரியேல்
நல்லவருடன் நட்பாய் இருந்து பிறகு அவரை விட்டு நீங்குதல் கூடாது.

38). கெ - கெடுப்பது ஒழி
உனக்கு கேடானதை, பிறர்க்குச் செய்யாமல் விடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

39). கே - கேள்வி முயல்

கேட்கத் தக்க நல்ல விடயங்களை, கற்றவர் கூறுவனவற்றை கேட்பதற்கு முயற்சி செய்.

40). கை - கைவினை கரவேல்

உனக்குத் தெரிந்த பயன்தரும் கைத்தொழிலை பிறர்க்கு ஒழிக்காதே.

41). கொ - கொள்ளை விரும்பேல்

பிறர் பொருளைக் கொள்ளையிட விரும்புதல் ஆகாது.

42). கோ - கோதாட்டு ஒழி

குற்றத்திற்குரிய விளையாட்டுக்களில் ஈடுபடாதே.

43). ச - சக்கர நெறி நில்

அரசனது கட்டளைக்கு அமைந்து நட. (சக்கரம்-ஆணை)

44). சா - சான்றோர் இனத்திரு.

பண்பாலும், அறிவாலும் நிறைந்த பெரியோர்களின் கூட்டத்தில் நீயும் ஒருவனாக இரு.

45). சி - சித்திரம் பேசேல்

இட்டுக்கட்டி ஒருவரைப் புகழ்வதையோ, இகழ்வதையோ செய்யாதே.

46). சீ - சீர்மை மறவேல்

புகழுக்கு ஏதுவாக இருக்கின்ற செயலை மறந்து நடத்தலாகாது.
(சிறப்புத் தருகின்றவற்றைச் செய்வதை மறத்தல் கூடாது)

47). சு - சுளிக்கச் சொல்லேல்

மனம் கசந்து முகம் சுண்டிப் போகுமாறான தீய (சுடு) சொற்களைச் சொல்லாதே.

48). சூ - சூது விரும்பேல்

சூதாடுதலில் விருப்பம் கொள்ளாதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

49). செ - செய்வன திருந்தச் செய்

எடுத்துக் கொண்ட செயலை திருத்தமாகச் செய்து முடிக்க வேண்டும்.

50). சே - சேரிடம் அறிந்து சேர்

கூடுவாரது தன்மை (பண்பு, ஒழுக்கம்) அறிந்து அங்கு சேர்.

51). சை - சை எனத் திரியேல்

பிறர் 'சீ" என்று வெறுக்கும்படி நடக்காதே.

52). சொ - சொல் சோர்வு படேல்

சொல்லும் சொல்லை (அவை அறிந்து ஆராய்ந்து) சொல்ல வேண்டும்.

53). சோ - சோம்பித் திரியேல்

எந்தவொரு முயற்சியும் இன்றி சோம்பலாக இராதே.

54). த - தக்கோன் எனத்திரி

"இவன் தகுதியானவன்' என்று பாராட்டுமாறு வாழ்வாயாக!

55). தா - தானமது விரும்பு.

பிறருக்கு உதவி செய்து வாழ்வதை விரும்புவாயாக!

56). தி - திருமாலுக்கு அடிமை செய்

மாயோனை (திருமாலை) வழிபட்டு உன் கடமையைச் செய்வாயாக.

57). தீ - தீவினை அகற்று

தீவினை உண்டாக்கும் செயல்களை நீக்கி விடு.

58. து - துன்பத்திற்கு இடம் கொடேல்

உனக்குத் துன்பம் உண்டாக்கும் தீச்செயல் எதற்கும் நீயே இடம் தந்து விடாமல் எச்சரிக்கையாக இரு.

59). தூ - தூக்கி வினை செய்

எச்செயலைச் செய்வதாயினும் ஆராய்ந்து பார்த்துச் செய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

60). தெ - தெய்வம் இகழேல்

நீ வணங்கத்தக்க தெய்வத்தை இகழாமல் மதித்து நட.

61). தே - தேசத்தோடு ஒத்து வாழ்

நாட்டு நடைமுறை அறிந்து அதற்குத் தக்க நீயும் ஒத்து வாழ்.

62). தை - தையல் சொல் கேளேல்

கட்டொழுங்கு இல்லாத பெண்களின் சொல்லைக் கேட்டு அவர் வழியில் நடவாதே.

63). தொ - தொன்மை மறவேல்

பழமையான பண்பாடு, நாகரிகம் என்பவற்றை மறந்து விடாதே.

64). தோ - தோற்பன தொடரேல்

தோல்வி எனத் தெரிந்த பின்பும் அச்செயலில் ஈடுபடாதே.

65). ந - நன்மை கடைப்பிடி.

நல்லவை எவையோ அவற்றை விடாமல் பற்றிக் கொள்.

66). நா - நாடு ஒப்பன செய்.

நாடு ஏற்கும் செயல்களையே செய்.

67). நி - நிலையில் பிரியேல்

நீ கொண்டிருந்த தகுதி நிலையில் இருந்து நீங்கிக் கீழே இறங்கி விடாதே.

68). நீ - நீர் விளையாடேல்

வெள்ள நீருள் பாய்ந்து விளையாடதே.

69). நு - நுண்ம நுகரேல்

இடை இடையே சிற்றுண்டி உண்ணுவதை ஒதுக்குவாயாக.

70). நூ - நூல் பல கல்

அறிவை வளர்க்கும் நூல்களை அதிகம் கற்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

71). நெ - நெற்பயிர் விளை

உணவுப் பயிராகிய நெல்லை அதிகம் விளைவிக்க வேண்டும்.

72). நே - நேர்பட ஒழுகு

நீ நேர்மையாவன் என்பதை நிலைப்படுத்துமாறு எப்பொழுதும் நடந்து கொள்.

73). நை - நைவினை நணுகேல்

வருந்தும் படியான செயலை செய்தலை நீ நெருங்காதே.

74). நொ - நொய்ய உரையேல்

சிறுமைத் தனமான சொற்களைச் சொல்லாதே.

75). நோ - நோய்க்கு இடம் கொடேல்

நோய் உண்டாவதற்குரிய வழிவகைகளை நீ உருவாக்காதே.

76). ப - பழிப்பன பகரேல்

பிறர் பழிக்கும் இழி சொற்களைக் கூறுதல் ஆகாது.

77). பா - பாம்போடு பழகேல்

தீமை பயக்கும் (உயிர்களோடு) பாம்புடன் நெருக்கம் கொள்ளுதல் ஆகாது.

78). பி - பிழைபடச் சொல்லேல்

எது பற்றிச் சொன்னாலும் பிழை உண்டாகுமாறு சொல்லாதே.

79).பீ - பீடு பெற நில்

பெருமை பெறத்தக்க வழியில் நிலை பெற வாழ்வாயாக!

80). பு - புகழ்ந்தாரைப் போற்றி வாழ்

போலியாக இல்லாமல் மெய்யாகப் பாராட்டுவோரை நீயும் பாராட்டி வாழ்வாயாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

81). பூ - பூமி திருத்தி உண்
நிலத்தை (மண்)ச் செப்பமிட்டு பயிர் செய்து உண்ண வேண்டும்.

82). பெ - பெரியாரைத் துணை கொள்
பெரியவர்களின் (சான்றோர்) கூட்டுறவை எப்பொழுதும் தேடிக் கொள்வாயாக.

83). பே - பேதமை அகற்று
அறியாமையை அகற்றி அறிவைப் பெற்றுக் கொள்வாயாக.

84). பை - பையலோடு இணங்கேல்
அறிவிலிகளான சிறுமையாளரோடு சேர்ந்திராதே.

85). பொ - பொருள் தனைப் போற்றி வாழ்
பொருளை அறவழியில் தேடி அதைப்பேணிப் பாதுகாத்து வாழவேண்டும்.

86). போ - போர்த் தொழில் புரியேல்
கூலிபெற்று உயிர்கொலை செய்யும் தொழில் செய்தலை தவிர்த்துக் கொள்.

87). ம - மனம் தடுமாறேல்
மனத்தை ஒரு நிலையில் வைத்து உறுதியான வாழ்வு கொள்ளுதல் வேண்டும்.

88). மா - மாற்றானுக்கு இடம் கொடேல்
பகையாளிக்கு இடம் கொடுக்கக் கூடாது.

89). மி - மிகைப்படச் சொல்லேல்
உள்ளதை உள்ளபடி சொல்லாமல் உள்ளதற்கு மிகுதியாகச் சொல்லாதே.

90). மீ - மீதூண் விரும்பேல்
அளவுக்கு அதிகமாக உண்ண விரும்பாதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

91). மு - முனை முகத்து நில்லேல்
போர் நடக்கும் இடத்தில் தகுந்த போர்ப்பயிற்சி இல்லாது நிற்காதே.

92). மூ - மூர்க்கரோடு இணங்கேல்
சிந்தனை இல்லாமல் சினம் கொண்டு செயற்படும் முரடர்களோடு நீ சேர்ந்திராதே.

93). மெ - மெல்லினல்லாள் தோள் சேர்
மென்மையாளாகவும் இல்லாளாகவும் நன்மையே நாடிச் செய்பவளாகவும் இருப்பவளோடு பொருந்தி வாழ்.
(மெல் + இல் + நல் + ஆள்)

94). மே - மேன் மக்கள் சொல் கேள்
செய்கரிய செய்யும் பெரியவர்கள் கூறும் சொற்களைக் கேட்டு நடப்பாயாக.

95). மை - மைவிழியார் மனை அகல்
ஒழுக்கமற்ற மங்கையர் வீட்டை நெருங்காதே.

96). மொ - மொழிவது அறிமொழி
சொல்வதை அறிந்து நடுநிலையோடு தெளிவாகச் சொல்.

97).மோ - மோகத்தை முனி
மிகுதியான ஆசையை அறவே ஒதுக்கி விடு.

98). வ - வல்லமை பேசேல்
உனது வல்லமையை நீயே புகழாதே.

99). வா - வாது முற்கூறேல்
வலியச் சென்று எவரையும் தர்க்க (விவாத)த்திற்கு அழைக்காதே.

100). வி - வித்தை விரும்பு
கல்வி முதலான கலைகளை விரும்பிக் கற்றுக் கொள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

101). வீ - வீடு பெற நில்

உலக வாழ்வின் பின்னர் இறவாப்புகழ் பெறத்தக்க நிலைபெற வாழ்வாயாக.

102). உ - உத்தமனாய் இரு.

மக்களுள் உயர்வுடையவனாக வாழ்.

103). ஊ - ஊருடன் கூடி வாழ்

நீ தனித்து வாழ வேண்டும் என்று எண்ணாமல் ஊர் உறவுடன் கூடி வாழ்.

104). வெ - வெட்டெனப் பேசேல்

உள்ளத்தைப் புண்படுத்தும் படியான சொல்லைச் சொல்லாதே.

105). வே - வேண்டி வினை செயேல்

திட்டமிட்டு தீங்கு (சதி) செய்யாதே, அடுத்துக் கெடுக்காதே.

106). வை - வைகறைத் துயில் எழு

விடியற்காலைப் பொழுது உறக்கம் நீங்கி எழுந்திருப்பாயாக.

107). ஒ - ஒன்னாரைத் தேறேல்

பகைப்பட்டு நிற்பவரை நண்பரெனத் தெரிவு செய்யாதே.

108). ஓ - ஓரம் ஓரம் சொல்லேல்

ஒரு பக்கம் சார்ந்து நின்று நடுவு நிலைமை தவறிச் சொல்லாதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5.2 கொன்றைவேந்தன்

"கொன்றை வேய்ந்த செல்வன் அடியினை என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே"
பொருள்:- கொன்றைமலர் சூடிய இறைவ (சிவபெருமா)னை போற்றி வணங்குவோம்"

01). அ - அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
பெற்ற தாயும் தந்தையும் நம் கண்கண்ட கடவுள்களாவார்.

02). ஆ - ஆலயம் தொழுவது சாலவும் நன்று
கோவிலுக்குச் சென்று இறைனை வழிபடுவது மிகவும் சிறந்தது.

03). இ - இல்லறம் அல்லது நல்லறம் அன்று
துணையோடு (இல்லாள்) சேர்ந்த குடும்ப வாழ்வே சிறந்தது. மற்ற வாழ்வு அற வாழ்வு ஆகாது.

04). ஈ - ஈயார் தேட்டைத் தீயார் கொள்வார்.
ஈகை செய்யாதவர்களின் பெருஞ் செல்வத்தைத் தீயவர்கள் கவர்ந்து செல்வர்.

05). உ - உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கழகு
உணவைக் குறைவாக அளவாக உண்பது பெண்களுக்கு அழகு தரும்.

06). ஊ - ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.
ஊரைப் பகைக்கின் சுற்றமே அழியும் (வேருடன் கெடும்)

07). எ - எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்.
அளவையியலும், இலக்கணமும் இரு கண்களைப் போன்றவை ஆகும்.
(எண் = அளவையியல் = தர்க்கம் ; எழுத்து = இலக்கணம்)

08). ஏ - ஏவா மக்கள் மூவா மருந்து
பிறர் கூறாமலே குறிப்புணர்ந்து செயற்படுவோர்.
(சொல்லாமலே பெரியர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09). ஐ - *ஐயம் புகினும் செய்வன செய்*

பிச்சை எடுத்தாகிலும் நல்ல பணிகளைச் செய் (வறுமை வந்த வேளையிலும்)

10). ஒ - *ஒருவனைப் பற்றி ஓரகத்து இரு*

ஒருவனைக் கணவனாக தேர்ந்தெடுத்து அவனுடனேயே பெண் என்பவள் வாழ வேண்டும்.

11). ஓ - *ஓதலின் நன்றே வேதியர்க்கு ஒழுக்கம்*

அந்தணர் (வேதியர்)களுக்கு வேதம் ஓதுவதை விட ஒழுக்கம் இன்றியமையாதது.

12). ஔ - *ஔவியம் பேசுதல் ஆக்கத்திற்கு அழிவு.*

பொறாமை கொண்டு கதைத்தல் செல்வத்திற்கு அழிவைத் தரும். (ஔவியம் – பொறாமை)

13). ஃ - *அஃகமும் காசும் சிக்கெனத் தேடு*

சிக்கனமாக இருந்து தவச (தானிய)த்தையும் செல்வத்தையும் சேர்த்து வை.

14). க - *கற்பு எனப்படுவது சொல் திறம்பாமை*

கற்பு என்று சொல்லப்படுவது தனது, துணையின் சொல்லில் இருந்து தளம்பாமல் வாழ்வது.

15). கா - *காவல்தானே பாவையர்க்கு அழகு*

பெண்கள் தன்னைத்தானே பாதுகாத்துக் கொள்வது அழகு.

16). கி - *கிட்டாது ஆயின் வெட்டென மற*

விரும்பியது கிடைக்கவில்லையெனில் அதனை உடனே மறந்துவிடு.

17). கீ - *கீழோர் ஆயினும் தாழுரை*

தன்னை விடத் தாழ்ந்தவர் (தகுதி குறைந்தவர்) ஆயினும் அவர்களிடம் பணிவாகப் பேசு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18). கு - குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை.
மற்றவர்களிடம் குறைகளையே பார்த்து சொல்லிக் கொண்டிருந்தால் அவருக்கு உறவு என்பதே இருக்காது.

19). கூ - கூர் அம்பு ஆயினும் வீரியம் பேசேல்
தன்னிடம் எத்தகைய கூரிய கருவி இருந்தாலும் கர்வமுடன் (இறுமாப்பு) வீறாப்புப் பேசக்கூடாது.

20). கெ - கெடுவது செய்யின் விடுவது கருமம்
தீமை செய்தவரையும் மன்னிப்பதே சிறந்த செயலாகும்.

21). கே - கேட்டில் உறுதி கூட்டும் உடைமை
வறுமையிலும் மனம் தளராமல் இருப்பது மேன்மை தரும்.

22). கை - கைப்பொருள் தன்னில் மெய்ப்பொருள் கல்வி
கையிலுள்ள பொருட்செல்வத்தைவிட அறிவுச் செல்வமான கல்வி சிறந்த செல்வம் ஆகும்.

23). கொ - கொற்றவன் அறிதல் உற்ற இடத்து உதவி.
மன்னன் அறிந்து கொள்ள வேண்டியது யாதெனில் மக்கள் துன்பப்படும் போதெல்லாம் அங்கு சென்று உடன் உதவ வேண்டும்.

24). கோ - கோள் செவிக் குறளை காற்றுடன் நெருப்பு
கோள் சொல்பவர்களின் செவிகளில் மேலும் கோள் மூட்டி விட்டால் அது காற்றுடன் நெருப்புப் பற்றி எரிவது போலாகும்.

25). கௌ - கௌவை சொல்லின் எவருக்கும் பகை
மற்றவர் மீது பழி சொல்லிக் கொண்டிருந்தால் அவருக்கு அனைவரிடமும் பகை உண்டாகும்.

26). ச - சந்ததிக்கு அழகு வந்தி செய்யாமை
குலம் தளைக்க மக்கட் செல்வம் முதன்மைத் தேவை.
(வந்தி = மலடு, மனையாளுடன் கூடி வாழுதல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27). சா - சான்றோர் என்கை ஈன்றோர்க்கு அழகு.
அறிவில் சிறந்த பெரியோர் பண்பாளர்களென்று மக்களைப் பாராட்டுவது பிள்ளைகளைப் பெற்றவர்குப் பெருமை.

28). சி - சிவத்தைப் பேணல் தவத்திற்கு அழகு.
சிவந்த ஒளிமயமானவ (சிவபெருமான்)னைத் துதித்து வழிபடுவதே தவயோகிகளுக்குச் சிறப்பைத் தரும்.

29). சீ - சீரைத் தேடின் ஏரைத் தேடு
சிறப்பாக வாழவேண்டுமென்றால் பயிர்த் தொழில் (உழவுத்தொழில்) செய்.

30). சு - சுற்றத்திற்கு அழகு சூழ இருத்தல்
இன்பத்திலும் துன்பத்திலும் துணையாக இருப்பதே உறவினர்களுக்கு சிறப்புத் தரும்.

31). சூ - சூதும் வாதும் வேதனை செய்யும்
சூதாட்டமும் வெட்டிப்பேச்சும் துன்பத்தையே தரும்.

32). செ - செய்தவம் மறந்தால் கைதவம் ஆளும்
செய்ய வேண்டி நற்செயல்களை மறந்தால் அவனை அறியாமை ஆட்டிப்படைக்கும்.

33). சே - சேமம் புகினும் யாமத்து உறங்கு
காவல் தொழில் செய்திட்டாலும் நள்ளிரவில் சிறுபொழுதாயினும் நித்திரை கொள்ள வேண்டும்.

34). சை - சை ஒத்து இருந்தால் ஐயம் இட்டு உண்.
உனக்கு ஈகை செய்வதற்கான வாய்ப்பு இருக்குமானால் மற்றவர்களுக்கு உணவு அளித்த பின் நீ உண்ண வேண்டும்.

35). சொ - சொக்கர் என்பவர் அத்தம் பெறுவர்
தூய மனமும் ஈகையும் உடையவர் எல்லா நலமும் பெறுவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36). சோ - சோம்பர். என்பவர் சோம்பித் திரிவர்
உழைக்காத சோம்பேறிகள் வறுமையிலும் வாடித் துன்புற்று அலைவர்.

37). த - தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை
தந்தையின் அறிவுரைக்கு மேலான அருள் மொழி எதுவுமே இல்லை.

38). தா - தாயிற் சிறந்தொரு கோயிலும் இல்லை
பெற்ற அன்னையை விட வணங்கத்தக்க மேலான கோயில் எதுவும் இல்லை.

39). தி - திரை கடல் ஓடியும் திரவியம் தேடு
கடல் கடந்து சென்றேனும் பொருள் ஈட்ட வேண்டும்.

40). தீ - தீராக் கோபம் போராய் முடியும்
அடங்காத கோபம் கலகத்தில் கொண்டு போய் விடும்.

41). து - துடியாப் பெண்டிர் மடியில் நெருப்பு
துணைவரின் துன்பம் கண்டு துடிக்காத மனைவி மடியில் கட்டிய நெருப்புக்குச் சமம்.

42). தூ - தூற்றும் பெண்டிர் சூற்று எனத் தகும்.
பிறர் பற்றி அவதூறு பேசித் திரியும் பெண்கள் குடும்பத்திற்கு (இயமன்) கூற்றுவன் போன்றவர்கள்.

43). தெ - தெய்வம் சீறின் கைதவம் மாளும்
தெய்வம் ஆளானால் தனது தவவலிமை அனைத்தும் அழிந்து போகும்.

44). தே - தேடாது அழிக்கின் பாடாய் முடியும்
உழைத்து மிச்சப்படுத்தாமல், இருப்பதையே செலவளித்து வந்தால் அது மீளாத் துன்பத்தையே தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

45). தை - தையும் மாசியும் வையகத்து உறங்கு (வைஅகம் = வைக்கோல்)

தை, மாசி மாதக் குளிர் தெரியாமல் உறங்குவதற்கு வைக்கோல் கூரைபோட்ட வீடே சிறந்தது.

46). தொ - தொழுது ஊண் சுவையின் உழுது ஊண் இனிது

பிறரை வணங்கி உண்டு வாழ்வதை விட நிலத்தில் உழுது பாடுபட்டு உண்பது மேன்மையாகும்.

47). தோ - தோழனோடும் ஏழைமை பேசேல்

உற்ற நண்பனே ஆயினும் அவனிடத்திலும்தன் வறுமை நிலையைக் கூறக்கூடாது.

48). ந - நல்லிணக்கம் அல்லது அல்லல் படுத்தும்

நல்லவர்கள் தொடர்பு இல்லையேல் துன்பம் ஏற்படும்.

49). நா - நாடு எங்கும் வாழக் கேடு ஒன்றும் இல்லை

நாட்டில் எல்லோரும் செழிப்புடன் அமைதியாக வாழ்ந்தால் எந்தத் துன்பமும் இல்லை.

50). நி - நிற்கக் கற்றல் சொல் திறம்பாமை

மற்றவர்களுக்கு அழகு சொன்ன சொல் தவறாமல் நடந்து கொள்வதாகும்.

51). நீ - நீரகம் பொருந்திய ஊரகத்து இரு

ஆறு, ஏரி, குளம் போன்ற நீர் நிலைகள் நிறைந்த ஊரில் வாழ்.

52). நு - நுண்ணிய கருமமும் எண்ணித் துணி

நாம் செய்யப்போகும் மிகச் சிறிய செயலையும் நன்கு சிந்தித்து அதன் பின் தொடங்கு.

53). நூ - நூல் முறை தெரிந்து சீலத்து ஒழுகு

அறநூல்களில் கூறப்படும் நீதிகளைத் தெரிந்து கொண்டு நல்வழியில் நீ ஒழுக்கமுடன் வாழ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

54). நெ - நெஞ்சை ஒழித்து ஒரு வஞ்சகம் இல்லை
உள்ளத்திற்கு தெரியாமல் ஒரு தீய செயலும் இல்லை.

55). நே - நேரா நோன்பு சீர் ஆகாது
மனநிறைவு இல்லாத நோன்பு (முயற்சி) சிறப்பு அளிக்காது.

56). நை - நைபவர் எனினும் வெய்யவர் ஆவர்
தாழ்ந்த நிலையில் இருப்பவரையும் அவர் மனம் நோக இழிவாகப் பேசக் கூடாது.

57). நொ - நொய்யவர் என்பவர் வெய்யவர் ஆவர்
எளிமையானவர் என்று இகழப்படுபவரும் ஒரு சமயத்தில் உயர்ந்தவராய் ஆவர்.

58). நோ - நோன்பு என்பது கொன்று தின்னாமை
புலால் உணவு உண்ணாமல் இருப்பதே சிறந்த நோன்பு.

59). ப - பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும்
ஒருவன் பாடுபட்டுப் பயிரிடப்பட்ட பயிரின் விளைச்சலைக் காணும் போது அவனது செயற்றிறன் (நற்பயன்) தெரியும்.

60). பா - பாலோடு ஆயினும் காலம் அறிந்து உண்.
பாலுடன் கலந்த உணவு என்றாலும் காலம் அறிந்து உண்ண வேண்டும்.

61). பி - பிறன் மனை புகாமை அறன் எனத் தகும்
மாற்றான் மனைவி மீது விருப்பம் கொண்டு அங்கு செல்லாமல் இருப்பதே சிறந்த ஒழுக்க நெறி ஆகும்.

62). பீ - பீரம் பேணி பாரம் தாங்கும்
தாய்ப்பால் அருந்தி வளர்ந்த குழந்தை வலிமை மிக்கதாய் இருக்கும்.

63). பு - புலையும் கொலையும் களவும் தவிர்
புலால் உண்ணல், உயிர்க்கொலை புரிதல், திருடுதல் ஆகிய கொடிய செயல்களில் ஈடுபடாதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

64). பூ - பூரியோர்க்கு இல்லை சீரிய ஒழுக்கம்
பண்பு இல்லாதவர்களுக்கு சிறந்த ஒழுக்கம் உண்டாவதில்லை. பூரியோர் – கீழ்மைக்குணம் உடையோர்

65). பெ - பெற்றோர்க்கு இல்லை சுற்றமும் சினமும்
அருள் (ஞானம்) கைவரப் பெற்றவர்களுக்கு உறவு, கோபம் எதுவும் இருப்பதில்லை.

66). பே - பேதமை என்பது மாதர்க்கு அணிகலம்
எல்லாம் அறிந்திருந்தாலும் ஒன்றும் அறியாதவள் போல் அடக்கமாய் இருத்தலே பெண்களுக்கு அணிகலம் போன்றதாகும்.

67). பை - பையச் சென்றால் வையம் தாங்கும்
எக்காரியத்திலும் தளம்பாமையை (நிதான) கடைப்பிடித்தால் உலகினர் ஏற்றுக்கொள்வர், வெற்றி கிடைக்கும்.

68). பொ - பொல்லாங்கு என்பவை எல்லாம் தவிர்
தீய செயல்கள் என்று கருதப்படும் எல்லாவற்றையும் விட்டு விடு.

69). போ - போனகம் என்பது தான் உழந்து உண்டல்
ஒருவன் தானே உழைத்து வளம் சேர்த்து உண்பதே நல்ல உணவாகும்.

70). ம - மருந்தே ஆயினும் விருந்தோடு உண்.
கிடைத்தற்கரிய அமிழ்தம் ஆனாலும் விருந்தினர்களோடு பகிர்ந்து உண்பாயாக.

71). மா - மாரி அல்லது காரியம் இல்லை
உரிய காலத்தில் மழை இல்லாமல் போனால் உலகில் வேறு எந்தக் காரியமும் நடைபெறாது.

72). மி - மின்னுக்கெல்லாம் பின்னுக்கு மழை
மின்னல் வானில் தோன்றுவது மழை வருவதற்கு அறிகுறி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

73. மீ - மீகாமன் இல்லா மரக்கலம் ஓடாது
மாலுமி (ஓடம் செலுத்துபவன்) இல்லாமல் பாய்மரக்கப்பல் இயங்காது.

74). மு - முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்
நாம் முன்பொழுதில் ஏதாவது காரியம் செய்தால் பிற்பொழுது அது நமக்கே வந்து சேரும்.

75). மூ - மூத்தோர் சொல்லும் வார்த்தை அமிர்தம்
முதியவர்கள் (அறிவில் சிறந்த பெரியோர்) சொல்லும் அறிவுரைகள், நீதிகள் அமிழ்தம் போன்று மேலானவை.

76). மெ - மெத்தையில் படுத்தல் நித்திரைக்கு அழகு
மென்மையான இலவம் பஞ்சு மெத்தையில் படுத்து உறங்குவது தான் தூக்கத்திற்கு நல்லது.

77). மே - மேழிச் செல்வம் கோழை படாது
உழுது பயிரிட்டு வரும் செல்வம் குறைவு அடையாது.

78). மை - மை விழியார் தம் மனை அகன்று ஒழுகு
மயக்கும் மங்கையர் (ஒழுக்க நெறி இல்லாத பெண்கள்)களின் இல்லம் செல்வதை தவிர்த்து விடு.

79).மொ - மொழிவது மறுக்கின் அழிவது கருமம்
ஆன்றோர் சொல்லைக் கேட்டு நடக்கவில்லை எனில் அழிவு ஏற்படும்.

80). மோ - மோனம் என்பது ஞான வரம்பு
மௌனம் காப்பது என்பது மெய்ஞ்ஞான அறிவை அடைய வழியாகும்.

81). வ - வளவன் ஆயினும் அளவு அறிந்து அளித்துண்
மிகுந்த செல்வம் உடையவன் என்றாலும் வரவுக்குள் செலவை அடக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

82). வா - வானம் சுருங்கில் தானம் சுருங்கும்
மழை பெய்யவில்லை. ஆனால் (கொடை) கொடுக்கும் அறச்செயல்கள் குறைந்துவிடும்.

83). வி - விருந்து இல்லோர்க்கு இல்லை பொருந்திய ஒழுக்கம்
விருந்தினரை ஓம்பும் (வரவேற்கும்) தன்மை இல்லாதவர் இல்லத்திற்குரிய தன்மை அற்றவர். இல்லறத் தன்மை நிறைவு பெறாது.

84). வீ - வீரன் கேண்மை கூர் அம்பு ஆகும்.
வல்லவனின் நட்பு உடையவனுக்கு தன் கையில் கூர்மையான அம்பு இருப்பது போல மிகவும் பாதுகாப்பானது.

85). உ - உரவோர் என்கை இரவாது இருத்தல்
எவரிடமும் சென்று இரந்து வாழாமல் இருப்பவனே வல்லவன் ஆவான்.

86). ஊ - ஊக்கமுடைமை ஆக்கத்திற்கு அழகு
மன உறுதியோடு ஒருவன் முயற்சி (ஊக்கம்) உடையவனாக இருந்தால் முன்னேற்றம் அடைவதற்கான சிறப்பு ஆகும்.

87). வெ - வெள்ளைக்கு இல்லை கள்ளச் சிந்தை
தூய உள்ளம் உடையவர்க்கு வஞ்சனை எண்ணங்கள் உண்டாகாது.

88). வே - வேந்தன் சீறின் ஆம் துணை இல்லை
அரசனின் கோபத்திற்கு ஆளானவருக்கு யாரும் துணையாக மாட்டார்கள்.

89). ஒ - ஒத்த இடத்தில் நித்திரை கொள்
மேடு பள்ளமற்ற இடத்தில் (சமதரையில்) உறங்க (நித்திரை) வேண்டும்.

90. ஓ - ஓதாதார்க்கு இல்லை உணர்வொடும் ஒழுக்கம்
நல்ல நூல்களைப் படிக்காதவர்களுக்கு அறிவோடு கூடிய நினைவாற்றலும் நல்ல நடத்தையும் இருக்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. ஔவைக் கதைகள்

6.1. நாலு கோடி:-

ஔவையார் பாண்டி நாடு விழாக்கோலம் பூண்டிருப்பதைக் கண்டு மகிழ்ச்சியுற்றார். "பாண்டிய மன்னன் தமிழைத் தன் இன்னுயிரினும் மேலாகக் கருதிப் போற்றியவன். தமிழின் நயத்தை, வளத்தை, எண்ண எண்ண இனிக்கும் சுவையை, பொருளாழத்தை, ஆயிரமாயிரமாண்டுகள் பழைமையுளதாயினும் குன்றாத இளமையை, உள்ளத்தை அள்ளும் கவிதைக் கருவூலத்தைக் கருதிக் களிப்பில் ஆழ்பவன்" என்று ஔவையார் தமக்குள் பூரிப்புடன் (பேசிக் கொண்டார்) நினைத்திருந்தார்.

புலவர் பெருமக்களின் கவிதை இன்பத்தை நுகரப் பேரவாக் கொண்டு, மிகச் சிறந்த முறையில் கவியரங்கம் ஒன்றை அமைத்துக் கவிஞர்களை அழைத்திருந்தான். பாண்டிய மன்னன், தன் தேவியுடன் நடுநாயகமாக அவையில் வீற்றிருந்தான். ஔவையாரை முதன்மைக் கவிஞராக மதித்து, தேவியுடன் சென்று எதிர்கொண்டழைத்து, அரங்கத்தின் நடுவில் தனக்கு முன்னர் இருந்த சிறப்பாசனத்தில் அமர்த்தினான். மன்னன் கவிஞர்களை நோக்கி; எந்தக் கவிஞரேனும் ஒரே எடுப்பில் நாலுகோடிப் பாடல்களைப் பாடிமுடிக்க வேண்டுமெனப் பணித்தான்.

அவற்றைக் கேட்டு வியப்பும் மகிழ்ச்சியும் கொண்ட, ஔவைப் பெருமாட்டியார் உடனே, புன்முறுவலோடு அரசனைப் பார்த்து "நான் பாடுகின்றேன்" என்று கூறிவிட்டு, "மன்னா! மனிதன் தன்மானம் உடையவன், தன் மதிப்போடு வாழ விரும்புபவன். பிறரையும் மதித்து, தன்னையும் பிறர் உரியவாறு மதிக்குமாறு வாழ்பவன். நம்மை மதிக்காதவரை நாம் மதித்தல் கூடுமா? அது இழிவன்றோ?

ஆதலின், நம்மை மதிக்காதவரின் முற்றத்தைக்கூட நாம் மிதித்தல் கூடாது. அவ்வாறு நம்மை மதியாதவரின் தலைவாசலைக்கூட நாம் எப்போதும் மிதியாமல், தன்மானகௌரவத்துடன் வாழ்வது ஒரு கோடி பொன் பெறும்" என விளக்கம் கூறி அக்கருத்துடைய,

'மதியாதார் முற்றம் மதித்தொருகாற் சென்று
மிதியாமை கோடி பெறும்"

என்று பாடினார்.

மன்னன் மகிழ்ச்சியோடு தலையசைத்து, மேலும் என்ன கூறப் போகிறார் என்பதில் நோக்கமாய் இருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் ஔவையார் "வேந்தே! விருந்தினரை வரவேற்றல் (உபசரித்தல்) பெருமைக்குரிய பண்பு. முதலில் வந்த விருந்தினரை மகிழ்வோடு வரவேற்று, அன்போடு (உபசரித்து) உணவளித்து, அவர்கள் விடை பெற்ற பின்னர் மேலும், விருந்தினர் வருவார்களோ என்று ஆவலோடு எதிர்பார்த்துக் காத்து நிற்பவர்.

முகமும் அகமும் மலர வரவேற்று, (நம்) அவர் விருப்பத்துக்கேற்ற உணவை உடனிருந்து "இன்னும் உண்ணுங்கள், இன்னும் உண்ணுங்கள்' என்று கனிவுடன் (உபசரித்து) உண்ணுமாறு வேண்டாதாரின் மனையில் உண்ணாமல் தன்மானத்தோடு வாழ்தல் ஒரு கோடி பொன்னுக்குச் சமம்" என்று விளக்கிப் பின்வரும் பாடலைப் பாடினார்.

"உண்ணீர் உண்ணீர் என்று உபசரியார் தம்மனையில்
உண்ணாமை கோடி பெறும்"

மேலும் தொடர்ந்து, 'மன்னா! நற்குடிப் பிறந்தாரைக் கண்டறிந்து அவருடன் நட்பு பூண்டு வாழ்தல் நன்றன்றோ?

"நல்லாரைக் காண்பதுவும் நன்றே, நலமிக்க
நல்லார்சொல் கேட்பதுவும் நன்றே – நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்று"

(மூதுரை -8)

எனவே, நல்ல குடிப்பிறந்த பண்பாளரை, கோடிபொன் கொடுத்தாவது, ஆய்ந்து கண்டறிந்து, அவர்கள் நட்பை என்றும் பெற்று வாழ்தல் கோடி பொன் பெறும்.

"கோடி கொடுத்தும் குடிப்பிறந்தார் தம்மோடு
கூடுதல் கோடி பெறும்"

எனப் பாடினார். இதில் ஐயமுண்டோ?

மன்னன் வியப்புற்று, 'இன்னுமொரு கோடி எதைக் கூறப் போகிறார்?' என்று அறியும் நாட்டத்தோடு, ஆர்வமாகக் கவனித்திருந்தான்.

பின்னர், ஔவையார் மன்னனை நோக்கி, "பாண்டிய வேந்தே! சொன்ன சொல் தவறாமை – கொடுத்த வாக்கைக் காப்பாற்றுதல் மனிதப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்புகளில் தலையாயது. "நிலம் பெயரினும் நின்சொல் பெயரல்" என்று நம் குல முன்னோர்க்குப் **புலவர் இரும்பிடர்த்தலையார்** அறிவுறுத்தியுள்ளதை நினைவு கூர்தல் வேண்டும். (புறம் – 3) கோடி கோடிப் பொன் கொடுப்பதாயினும் சரி, நா பிறழாதிருத்தல் – அதாவது கொடுத்த வாக்கைக் காப்பாற்றுதல் கோடி பொன் பெறத் தக்கதாகும்".

"கோடானு கோடி கொடுப்பினும் தன்னுடைநாக்
கோடாமை கோடி பெறும்"

என்று பெருமிதத்தோடு கூறியமர்ந்தார்.

6.2. அரியது :-

நாவல் மரத்தடியில், ஔவையார் முன்தோன்றிய முருகன், அவருடைய புலமைத்திறனையும், நுண்ணறிவையும், உள்ளத்து அருளையும் (ஆன்மீக ஞானத்தையும்) உலகுக்கு உணர்த்த விடுத்த வினாக்களில் ஒன்று "அரியது எது?" என்பது. அவ்வினாவுக்குச் சற்றும் தயங்காது ஔவையார்,

"கூரிய நீண்ட வேலேந்திய முருகா! உலகில் தோன்றியுள்ள எண்ணற்ற பிறவிகளுள் மிகவும் அரியது மானிடப் பிறவியே! அப்பிறவியிலும் கூன் – குருடு– செவிடு – அலித்தன்மை முதலிய உடல் ஊனங்கள் ஏதுமின்றி முழுமையான மனித உருவமாய்ப் பிறத்தல் அரிது. அவ்வாறு உடற்குறையேதுமின்றிப் பிறந்தாலும் கூட, இயல்பாய்ப் பெற்றுள்ள அறிவோடு கல்வி கேள்விகளால், கிடைக்கும் அறிவினைப் பெறுவது மிகவும் அரிதாகும். அவ்வறிவு தான் பெற்றிருப்பவர், உலகில் வேண்டிய அனைத்தையும் பெற்றவராவர். அதனைப் பெறாது, வேறெதனைப் பெற்றிருந்தும் யாதும் பயனில்லை. ஏனெனில், அறிவு அழிவு வராமல் காப்பது, உள்ளும் புறமும் காக்கும் கோட்டை போன்றது).

அத்தகைய உயர்வான அறிவினை, ஒருவர் விரும்பிப் பெற்றிருந்தாலும் ஈகைக் குணம் உடையவராயும், தவவொழுக்கம் மேற்கொள்பவராயும் இருப்பது மிகமிக அரிதாகும். (ஈத்துவக்கும் இன்பத்திலும் பேரின்பம் வேறில்லை = ஈந்து புகழுடன் வாழ்தலினும் உயிர்களுக்குப் பயன்தரும் செயல் வேறொன்றுமில்லை.)

மேலும், துறவு (தவம்) இன்றியமையாதது. துறவு (தவம்) செய்வார் தம் செயலை ஒழுங்குறச் செய்பவராவர். தமக்கு உற்ற நோயைப் பொறுத்துக் கொள்ளுதலும், பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யாமையுமே துறவி (தவத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுமையான உருவமாகும். அத்தகைய துறவை (தவத்தை) மேற்கொண்டு ஒழுகுவார்க்கு விரும்புவனவெல்லாம் விரும்பியவாறே கிடைக்கும்.

அவ்வாறு கொடை (தானமும்), துறவு (தவமும்) முறையாகச் செய்பவரை விண்ணுலகு வாயிற் கதவைத் திறந்து வைத்துக் கொண்டு வரவேற்கக் காத்து நிற்கும் என்பதில் ஐயமில்லை.

"அரியது கேட்கின் வரிவடி வேலோய்!
அரிது அரிது மானிடராதல் அரிது,
மானிடராயினும், கூன், குருடு, செவிடு,
பேடு நீங்கிப் பிறத்தல் அரிது,
பேடு நீங்கிப் பிறந்த காலையும்
ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது,
ஞானமும் கல்வியும் நயந்த காலையும்
தானமும் தவமும் தான் செய்தல் அரிது,
தானமும் தவமும் தான் செய்வர் ஆயின்,
வானவர் நாடு வழிதிறந் திடுமே"

என்று விடையளித்தார்.

(பேடு – அலித்தன்மை, ஞானம் – அருள் அறிவு, கல்வி – நூல்களைக் கற்றும், பட்டறிந்து பெறும் அறிவு, நயத்தல் – விரும்புதல், வானவர்நாடு – விண்ணுலகம் – தெய்வலோகம்)

6.3 இனியது :-

இவ்விடையைக் கேட்டு மகிழ்ந்த முருகன் மீண்டும் ஔவையாரை நோக்கி, "இனியது எது?" எனக் கேட்டான், உடனே ஔவையார்,

"இனியது கேட்கும் ஒப்பற்ற வேலவனே! தனித்திருத்தலே இனியது. தனித்திருந்து சிந்தையை ஒருவழி நிறுத்தி, ஆதி முழுமுதலாகிய பரம்பொருளைத் தொழுவது, அதைவிட இனியதாகும். பரம்பொருளையுணர்ந்த பற்றறுத்த அருளாளரோடு (ஆன்மீக ஞானிகளோடு) உடனிருத்தல், அதனினும் மிக மிக இனியதாகும். குரு நிலையில் விளங்கும் அம்மெய் அருளாளர் (ஞானி) களைக் கனவிலும் நனவிலும் சேர்ந்து (தரிசித்து) உள்ளத்துள்ளே உறையும் (பரம்) மெய்ப்பொருளை உணர்ந்து (அப்பரம்) அம்மெய்ப் பொருளுடன் ஒன்றி இரண்டறக் கலந்திருத்தலே அனைத்திலும் மிகுந்த பேரின்பம் தருவதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இனியது கேட்கின் தனிநெடு வேலோய்!
இனிது இனிது ஏகாந்தம் இனிது
அதனினும் இனிது ஆதியைத் தொழுதல்,
அதனினும் இனிது அறிவினர் சேர்தல்,
அதனினும் இனிது அறிவுள் ளோரைக்
கனவிலும் நனவிலும் காண்பது தானே"

என மிக உயர்ந்த இன்ப நிலையை எடுத்துரைத்தார்.
(அறிவினர் - மெய்யறிவு பெற்றோர், மெய்ஞ்ஞானிகள்)

ஔவை அடிகளாரின் மெய்ஞ்ஞானத்தையும், ஆழ்ந்த புலமையையும் அறிந்த முருகன், ஔவையாரைப் புகழ்ந்து வாழ்த்துக் (ஆசி) கூறி, அடுத்த நொடியிக்கணத்திலேயே மறைந்தான்.

முருகப் பெருமானை இளங்குமர வடிவில் நேரில் தரிசித்த ஔவைப் பெருமாட்டியார் பேர்இன்பத்தில் (பேரானந்தத்தில்) திளைத்துச் சிறிது நேரம் மெய்மறந்து நின்றுவிட்டார். பின்னர் "முருகா! முருகா!" என மெல்லக் கூறிக் கொண்டே தம் வழிநடைப் பயணத்தைத் தொடர்ந்தார்.

6.4 தொண்டர் பெருமை :-

ஔவையார், இருபக்கங்களிலும் மரஞ்செடிகள் தழைத்து வளர்ந்திருந்த வழியே ஒருநாள் சென்று கொண்டிருந்தார். நெடுந்தொலைவு நடந்ததால் கால் கடுத்தது. ஒரு நாவல் மரநிழலில் அமர்ந்தார். அம்மரத்தின் மீது ஓர் ஆயர் சிறுவன் ஏறிப்பழங்களைப் பறித்துத் தின்று கொண்டிருந்தான். அதனைக் கண்ட ஔவையார், அச்சிறுவனிடம் சில பழங்களைப் பறித்துப் போடுமாறு கேட்டார். அந்தச் சிறுவன், 'அம்மா! சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா?" என்று கேட்டான். ஔவையார் சற்றுப் புன்முறுவலோடு, "முட்டாள் பையன், பழங்களில் சுட்ட பழங்களும் சுடாத பழங்களும் உள்ளனவா? என்று மெல்ல முணுமுணுத்துக் கொண்டே, 'சுட்ட பழந்தான் போடப்பா!" என்றார். சிறுவன் மரக்கிளையை உலுக்கினான். பழுத்த பழங்கள் நிறைய உதிர்ந்தன. ஔவையார் சில பழங்களைப் பொறுக்கிக் கையில் வைத்துக் கொண்டு, ஒவ்வொன்றாய் எடுத்து, ஒட்டிக் கொண்டிருந்த மணலை அகற்ற வாயால் ஊதினார். அதனைக் கண்ட சிறுவன், 'பாட்டி, பாட்டி! அதிகம் சுடும். நன்றாய் ஊதிச் சாப்பிடுங்கள்" என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனைக் கேட்ட ஔவையார், முதலில் சிறுவன் கேட்டதன் உண்மையை உணர்ந்தார். சிறுவனின் நுண்ணறிவை வியந்தார். தாம் சிறுவனைத் தவறாய் எண்ணியதை உன்னி நாணமடைந்து, "உறுதிமிக்க கருங்காலிக் கட்டையைக் கோடாலியால் பிளந்தால் அந்தக் கோடாலி மழுங்கிப் போகும். ஆனால் அதே வலிமையான கோடாலி மெல்லிய வாழைத் தண்டில் பட்டால் துருப்பிடித்துத் தேய்ந்து போய்விடும். அதுபோல, அறிவாற்றலிலும், பட்டறிவிலும் முதிர்ந்த நான், இந்த எருமை மாட்டை மேய்க்கின்ற ஆயர் சிறுவனுக்குத் தோற்றுப் போனேனே! இந்தத் தோல்வியை எண்ணியெண்ணி இரண்டு நாள்கள் என்கண்கள் உறக்கம் கொள்ளா.

"கருங்காலிக் கட்டைக்கு நாணாக்கோ டாலி
இருங்கதலித் தண்டுக்கு நாணும் – பெருங்கானில்
கார்எருமை மேய்க்கின்ற காளைக்கு நான்தோற்றது
ஈர்இரவு துஞ்சாதுஎன் கண்"

என்று பாடிச் சற்று வாட்டத்துடன் நின்றார்.

(இருங்கதலி – பெரிய வாழை, நாணும் – (துருப்பிடித்துத்) தேய்ந்துவிடும், கான் – காடு, (மரஞ்செடிகள் அடர்ந்த இடம்) துஞ்சாது – உறங்காது).

உடனே மரத்தின் மேலிருந்த அச்சிறுவன் "தொப்"பென்று கீழே ஔவையாரின் முன்னே குதித்தான். ஔவையார் அவனைப் பார்க்கச் சற்றுத் தயங்கி மெல்ல நோக்கினார். என்ன வியப்பு (ஆச்சரியம்) அது. தமிழ்த்தெய்வம்! (பாலமுருகன்) உடனே தம் இருகரங்களையும் கூப்பி வணங்கினார். குமரன் ஔவையை நோக்கி, "ஔவையே! உன் உள்ளத்தில் சிறிது தன்முனைப்பு இருந்தது. அதனை உணர்த்தவே இப்படிச் செய்தேன். சரி, இருக்கட்டும். நான் கேட்கும் வினா(க்களு)க்கு உரிய விடையை (கனை)க் கூறுக, பெரியது எது? என்றான்.

உடனே ஔவையார் சற்றும் தயங்காது,

"பெரியது எதுவெனக் கேட்கும் ஒளி வீசும் வேலினை(உ)டைய தமிழ்க்கடவுளே (முருகா!) புவனம் – உலகம் தான் பெரியது" என்று கூறி, மேலும் சற்றுச் சிந்தித்தார். தொடர்ந்து "இல்லை, இந்த உலகினைப் படைத்தவன் (நான்முகன் – பிரம்மன்) நான் மறை அறிந்தவன். ஆதலால் அவன் (நான் முகன்) தான் பெரியவன். இல்லை. இல்லை, அவன் (நான் முகன்) கருநிறமுடைய முகிலோன் (திருமாலின்) தொப்புளினின்றும் தோன்றியவன். ஆதலால் திருமால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் பெரியவர்" என்று சிறிது தயக்கத்துடன் கூறி மீண்டும், "இல்லை, திருமால் அலைகடலில் பள்ளி கொண்டிருந்தார். எனவே அந்த அலைகடல்தான் பெரியது " என்றார்.

முருகன் சற்றுப் புன்முறுவல் பூத்ததையுணர்ந்த ஔவையார் மீண்டும், "இல்லை, அந்த அலை கடலைக் குறுமுனி – அகத்தியர் தம் உள்ளங்கையில் அடக்கிவிட்டார். அதனால் அந்தக் குறுமுனிதான் பெரியவர். ஊஃகும், அந்தக் குறுமுனி ஒரு மண்குடத்தில் தோன்றியவர். அந்த மண்குடம் ஞானத்தில் (பூமியில்) உள்ள மண்ணால் வனையப்பட்டது. ஆனால் ஞாலத்தை (பூமியை) ஆதிசேடன் என்னும் பாம்பு தாங்குகின்றது. அந்தப் பாம்பைப் (பார்வதிதேவி) மலைமகள் தன் சிறுவிரலில் மோதிரமாக அணிந்துள்ளாள். ஆதலால் மலைமகள் (பார்வதி) தான் பெரியவள்" என்று கூறி நிறுத்தினார். அதனைக் கேட்ட குமரன், தன் தாயின் பெருமையை எண்ணிப் பெருமிதம் கொண்டான். அதனையுணர்ந்த ஔவையார் சற்று யோசித்து, "இல்லை, இல்லை முருகா! உன் அன்னை மலைமகள் (பார்வதியை) உன் தந்தை சிவபெருமானின் இடப்பாகத்தில் அடக்கி வைத்துள்ளாரே, அதனால் உன் தந்தை சிவபெருமான் தான் அனைவரிலும் பெரியவர்" என்றார். 'அப்படியும் தன் தந்தைதானே பெரியவர்' என்று முருகன் தன் மனத்துக்குள் எண்ணி வியந்து பூரிப்பு கொண்டதை கண்ட ஔவையார் , உடனே முருகனை நோக்கி,

"குமரா ! உன் தந்தையாகிய சிவபெருமான் அடியவர்கள் – அதாவது தொண்டர்கள் இதயத்தில் அடங்கி இருப்பவர் அல்லவா! உலகில் (அதனால்) தொண்டர்கள் – அடியார்கள் தான் அனைவரினும் பெரியவர்கள் என்பதில் ஐயமேது?" என்று கூறிச் சற்று மிடுக்குடன் நிமிர்ந்து நின்றார். 'நான் ஒரு பக்தை – அடியவள். எனவே, நான்தான் பெரியவள், உயர்ந்தவள்' என்னும் கருத்தை மறைமுகமாகச் சொல்லாமல் சொல்லிவிட்டார் ஔவை அடிகளார்!

இக்கருத்தினை அழகிய இனிய பாடலாகவே பாடி முருகனின் பாராட்டு தலைப் பெற்றார். இதோ அப்பாடல்,

பெரிது பெரிது புவனம் பெரிது
புவனமோ நான்முகன் படைப்பு
நான்முகன் கரியமால் உந்தியில் வந்தோன்
கரியமா லோஅலைகடல் துயின்றோன்
அலைகடல் குறுமுனி அங்கையில் அடக்கம்
குறுமுனியோ கலசத்தில் பிறந்தோன்
கலசமோ புவியில் சிறுமண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புவியோ அரவினுக்க ஒருதலை பாரம்
அரவோ உமையவள் சிறுவிரல் மோதிரம்
உமையோ இறைவர் பாகத்து ஒடுக்கம்
இறைவரோ தொண்டர் உள்ளத் தொடுக்கம்
தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே"

(புவனம் - உலகம், உந்தி - தொப்புள், குறுமுனி - அகத்தியர், அங்கை - உள்ளங்கை, அரவு - பாம்பு, தொண்டர் - (பக்தர்கள்) அடியார்கள்)

6.5 மனைவியை இழந்தவர் :-

ஒருவன் தன்னைப் பத்துமாதம் பெற்றெடுத்துப் பாலூட்டிச் சீராட்டி வளர்க்கும் தாயை இழந்தால், அந்தத் தாய் தன் மணிக்கரத்தால் அருமையாகச் சமைத்து ஊட்டும் அறுசுவையோடு கூடிய உணவை இழந்தவனாவான். அருமைத் தந்தையை இழந்தால் அவன் தொடர்ந்து கற்கும் கல்வி தடைப்பட்டுவிடும். குழந்தை, குடும்பத்தின் - வீட்டின் செல்வம். அதன் மழலைச்சொல், செயல்கள் எல்லாம் வீட்டில் உள்ள அனைவருக்கும் மகிழ்ச்சியையும், இன்பத்தையும் கொடுக்கும். குழந்தை வீட்டின் நடமாடும் செல்வம். குழந்தையை இழந்தால் அந்த வீட்டின் செல்வத்தையே பறிகொடுத்தது போலாகும். உற்றார் உறவினர் நமக்கு எப்போதும் உறுதுணையாய் இருப்பவர். அவர்கள் தான் நம் நல்வாழ்விற்கு உறுதுணையான (ஆதாரமான) வர்கள். அந்த உறவினர்கள் போய் விட்டால் நம் வாழ்வே பாழ்தான்.

நம் உடன்பிறப்புக்கள் (சகோதரர்கள்) நமக்கு வலிமை சேர்ப்பவர்கள். நம் ஊக்கத்திற்கும் ஆக்கத்திற்கும் காரணமானவர்கள். அவர்களை இழந்தால் நாம் வலிமையற்றவர்களாய்ப் பிறருக்கு அஞ்சி அஞ்சி வாழும் அவல வாழ்வினராய் விடுவோம். ஆனால் ஒருவன் வாழ்க்கைத் துணைவியாய் உள்ள அருமை மனைவியை இழப்பானானால் அவ்வளவுதான்! முன்னே சொன்ன அனைவரையும் ஒருங்கே இழந்து அல்லல் பட்டு இடரு (அவலமு)றும் திக்கற்ற, உதவி (ஆதர)யற்ற - ஏதிலி (அநாதை) யாய் விடுவான்! அதாவது ஒரு குடும்பத்தில், இல்லத்தரசியாகிய மனைவிதான் அவனுக்கு தாயாய், தந்தையாய், செல்வக் குழந்தையாய், உற்றாராய், உடன் பிறப்பாய் எல்லாமாய் இருந்து குடும்பத்தையும் குடியையும் வாழ்விப்பவள். எனவே, வாழ்க்கைத் துணைவியாகிய - அருமை மனைவியை இழந்து - ஐயோ (பாவம்) அந்த மனிதன் துயரி (வேதனையி)ல் மூழ்கி மயங்கிக் கிடக்கிறான் என்றால் அது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையிலேயே அவனுக்கு மட்டுமல்லாமல் அவனுடைய வீட்டுக்கும், குடும்பத்துக்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பு! பேரிடிதான். அதில் ஐயமில்லை. இந்தப் பாட்டை மறக்காமல் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

தாயோடு அறுசுவைபோம் தந்தையொடு கல்விபோம்
சேயோடு தான் பெற்ற செல்வம்போம் – ஆயவாழ்வு
உற்றார் உடன்போம் உடன்பிறப்பால் தோள்வலிபோம்
பொற்றாலி யோடுஎவையும் போம்.

(தனிப்பாடல்) என்பார்.

இறந்தவர்களை நினைத்து ஆண்டாண்டுதோறும் அழுது அழுது புரண்டாலும், இறந்தவர் மீண்டும் உயிர் பெற்று எழுந்து வரப்போவதில்லை. நாளை எல்லோருக்கும் அதே நிலை (கதி)தான்! இதனை மனத்தில் கொண்டு, இவ்வுலகில் வாழுகின்ற நாள்வரையில் நல்ல காரியங்களைச் செய்து, பிறருக்கு ஆன உதவி செய்து வாழ வேண்டும்.

ஆண்டாண்டு தோறும் அழுதுபுரண்டாலும்
மாண்டார் வருவரோ மாநிலத்தீர் – வேண்டா
நமக்கும் அதுவழியே நாம்போம் அளவும்
எமக்கு என்ன என்று இட்டுண்டு இரும். (நல் – 10)

(என்பதை இப்பாடல் வழி கூறுவார்) என்று பாடிக் கொண்டே தம் வழி நடைப்பயணத்தை ஔவையார் மேலும் தொடர்ந்தார்.

6.6 இணங்கி வாழும் இல்லற வாழ்வே நல்லறவாழ்வாகும் :-

ஒரு குடும்பத்துக்குத் தலைவியாய் இருப்பவள் இல்லத்தரசி – மனைவி. இல்லத்துக்கு, அதாவது மனைக்குத் தலைவியாய் இருப்பவள் ஆதலால் மனைவி. அவ்வாறே இல்லத் தலைவியாதலால், இல்லாள் என வழங்கப்படுகிறாள். மனைவி தான் ஒரு குடும்பத்துக்குத் தாயாய், தந்தையாய், செல்வக் குழந்தையாய், பக்கபலமான உறவாய், உடன் பிறப்பாய் விளங்குபவள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவனுடைய மனைவி இறந்துபோனால், அவன் அனைத்தையும் இழந்தவனாகின்றான். அன்பு, அமைதி, அடக்கம், பொறுமை, பணிவு, மறந்து மன்னிக்கும் உயர்ந்த உள்ளம் முதலிய அனைத்துப் பண்புகளும் திரண்டு ஒருருவாய் விளங்குபவள் இல்லாள் (மனைவி). சுருக்கமாய்ச் சொல்வதானால், மனைவி ஒரு ஈகை (தியாக)த் திருவுருவம்!

ஒரு மனைவி தன் கடமைகளையும், பொறுப்புக்களையும் நன்கு உணர்ந்து, மனச்சாட்சிக்கு மாறுபடாமல் நடந்து கொள்வாள். அந்நிலையே அவளுக்குள்ள உரிமை – சுதந்திரம். அவளுக்கு உரிய கடமைகளிலும், உரிமைகளிலும் கணவனின் தலையீடு கூடாது. அந்த முறையில் கணவனும் மனைவியும் சமமானவர்கள். கணவனின் அன்பாணையை மனைவி ஏற்பாள். மதிப்பாள், செயல்படுவாள். ஆனால், மேலாண்மை (அதிகார) ஆணையால் அவளை அடக்க – அடிமைப்படுத்த முயல்வது மனிதப்பண்பு அன்று. கணவனின் மேலாண்மை (சர்வாதிகார)ப் போக்கு, குடும்ப நலனைச் சிதைத்துச் சீரழித்துவிடும். தன் குடும்பம் குழப்பமும், சச்சரவும், மன உளைச்சலும் இன்றி, இன்பத்தோடு வாழ்வதைத் தன் குறிக்கோளாகக் கொண்டு தன்னை ஈடுபடுத்திக் கொண்டு உரியவாறு செயல்படுபவளே ஒரு நல்ல மனைவி.
இதனை ஔவையார் பல பாடல்களில் தெளிவாக உணர்த்துகிறார்:

"நல்ல மனைவி குடும்பத்தில் இருந்தால் அக்குடும்பத்தில் இல்லாதது ஏதொன்றும் இல்லை. அனைத்துப் பொருள்களும் நிரம்ப உள்ளனவாகும். அத்தகைய மனைவி ஓர் இல்லத்தில் இல்லையென்றாலும், அல்லது அவள் இருந்தும், அன்பொழுக இனிமையாகப் பேசாமல், கடுமையாகப் பேசி உரிய முறையில் செயல்படாமல் இருப்பாளாயினும் அவள் இருக்கும் அவ்வீடு நல்ல வீடாக இராது, புலி வசிக்கும் புதராக இருக்கும்.

"இல்லாள் அகத்திருக்க இல்லாதது ஒன்றில்லை
இல்லாளும் இல்லாளே யாமாயின் – இல்லாள்
வலிகிடந்த மாற்றம் உரைக்குமேல் அவ்இல்
புலிகிடந்த தூறுஅய் விடும்.

(மூதுரை – 16) என்று கூறுவார்.

என்றும் எதிர்த்துப் பேசி, குடும்பத்தின் அமைதியைக் குலைக்கும் மனைவியினும் பேயுடன் வாழ்தலே மேலானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

..... எதிர்த்துப்
பேசும் மனையாளின் பேய்நன்று.."

(தனிப்பாடல்)

என்றும் கூறுகின்றார் ஔவைப் பெருமாட்டியார்.

இக்கருத்தினை ஔவைப்பாட்டி (அன்னையார்) மேலும் பல பாடல்கள் மூலம் வலியுறுத்துகிறார்.

எவை எவை, அல்லது யார் யார் எமன் என்று விளக்கும் ஒரு பாட்டில் 'கல்வியறிவில்லாத மக்களுக்குக் கற்றறிருந்தவருடைய சொல் கூற்றாகும் (எமனாகும்) கொடைச்சிந்தனை இல்லாதவருக்குத் கொடையே (தருமமே) எமனாகும். வாழை மரத்துக்கு அதன் குலை (கன்றே) எமனாகும். அவ்வாறே ஒரு குடும்பத்தில் முறைப்படி, உரியவாறு நடந்து கொள்ளாத மனைவி அக்குடும்பத்துக்கே கூற்றாவாள். (எமனாவாள்)

"கல்லாத மாந்தர்க்குக் கற்றுணர்ந்தார் சொல்கூற்றம்
அல்லாத மாந்தர்க்(கு) அறம்கூற்றம் - மெல்லிய
வாழைக்குத் தான்ஈன்ற காய்கூற்றம், கூற்றமே
இல்லிற்(கு) இசைந்தொழிகாப் பெண்" (மூதுரை-27)

என்கிறார்.

(கூற்றம் - யமன், அல்லாத மாந்தர் - தருமத்தை விரும்பாத மனிதர், இல்லிற்கு - குடும்பத்துக்கு)

மற்றொரு பாடலில். "திருநீறு பூசாத நெற்றி பாழானாது, நெய் இல்லாத உணவு பயனற்றது. ஆறு இல்லாத ஊர் அழகற்ற பாழ் ஊர். உடன்பிறப்பு இல்லாது தனிமையாகப் பிறந்துள்ளார்க்கு அவ்(வுடம்பே)டல் பாழானதாம். அவ்வாறே குடும்ப நலனுக்கு ஏற்ற மனையாள் இல்லையாயின் அவ்வீடே பாழானதாகும்.

'நீறு இல்லா நெற்றிபாழ், நெய்யில்லா உண்டிபாழ்
ஆறுஇல்லா ஊருக்(கு) அழகுபாழ் - மாறில்
உடன்பிறப்(பு) இல்லா உடம்புபாழ், பாழே
மடக்கொடி இல்லா மனை" (நல்வழி :24)

என்கிறார்.

(நீறு என்பது விபூதி எனப் பொருள்படினும் பொதுவாக வழிபடு சமயத்தைக் குறிக்க நெற்றியில் இடும் குங்குமம், திலகம், சாந்து, சந்தனம், நாமம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலியவற்றையும் குறிக்கும். மாறில் உடன்பிறப்பு – மாறுபாடு இல்லாத சகோதரர், மடக்கொடி – மனைவி.)

மீண்டும் ஒரு பாட்டில், ஔவை பெருமாட்டியார்,

"இலக்கண முறைப்படி அமையாத பாடலை விட முறைப்படி அமைந்தும் குற்றமுள்ளதாயின் அதனை ஒருவிதமாக ஏற்கலாம். நற்குடியில் (உயர் குலத்தில்) பிறந்து ஒழுக்கமின்றி வாழ்பவரைவிட, இழிகுடியில் பிறந்தும் ஒழுக்கத்துடன் வாழ்பவர் உயர்ந்தவர். முறையற்ற வீரத்திலும் தீராதப் பிணி மேலானது. அவ்வாறே பழிபாவங்களுக்கு அஞ்சாத மனைவியுடன் குடும்பம் நடத்துவதை விட, குடும்ப வாழ்வைத் துறந்து தனியே வாழ்வதே சிறந்தது.

'இழுக்குடைய பாட்டுக்(கு) இசைநன்று, சாலும்
ஒழுக்கம் உயர்குலத்தில் நன்று – வழுக்குடைய
வீரத்தின் நன்று விடாநோய்! – பழி அஞ்சாத்
தாரத்தின் நன்று தனி!' (நல்வழி –31) என்று பாடுகிறார்.

(இழுக்கு – (இலக்கணக்) குற்றம்: சாலும் – சிறந்த, வழுக்கு – நெறி தவறிய, தாரம் – மனைவி).

அன்பில்லாத மனைவியோடு ஒரு கணவன் தன்னை அடக்கிக் கொண்டு வாழ்வதன் கொடுமையைப் பற்றி, மற்றொரு பாட்டில் ஔவையார் கூறுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

தன் முன்னர் வந்து தோன்றிய முருகனின் வினா ஒன்றுக்கு விடை தருகிறார் ஔவையார்.

"உலகில் கொடியது யாது? என்று கேட்கிறான் முருகன். ஔவையார் உடனே கூறுகிறார்.

"மிக மிகக் கொடியது வறுமை" அதனின் பெரிதும் கொடுமையானது ஒருவர் இளமையில் ஏழைமையை பட்டறிதல் (அனுபவித்தல்) அதைவிடக் கொடுமையானது குணப்படுத்த முடியாத கொடிய நோய் – (புற்று நோய், 'எய்ட்சு" என்னும் நோய் போன்றது) ஆனால், அத்தகைய தீராத கொடிய நோயினையும் விடக் கொடுமை வாய்ந்தது அன்பில்லாத மனையாளோடு இல்லறம் நடத்துவது!" என்று கூறிவிட்டு, நிறுத்தாமல் அதனையும் விடப் பெருங்கொடுமையானது, அத்தகைய அன்பில்லாத மனையாளொடு ஒரு கணவன், ஒருவாறு தன்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றிக்கொண்டு – அடங்கி வாழ்ந்து, அவள் கையால் போடும் சோற்றை இன்பமாய் உண்பதுபோல உண்டு காலங் கழிக்கிறானே, அந்தோ! கொடுமை கொடுமை – கொடுமைகளுள்ளும் கொடுமை!

'கொடிது கொடிது வறுமை கொடிது,
அதனிலும் கொடிது இளமையில் வறுமை,
அதனிலும் கொடிது ஆற்றொணாக் கொடுநோய்,
அதனிலும் கொடிது அன்பிலாப் பெண்டிர்,
அதனிலும் கொடிது
இன்புற அவள் கையில் உண்பதுதானே!"

(தனிப்பாடல்)

எனத் தனிப்பாடல் வழி இயம்புவார்.

இறுதியாக, இக்கொடுமைக்கு ஒரு முடிவு கட்டும் பாங்கில் ஔவையார், "கணவனுக்கு ஏற்ற மனைவி வாய்க்கப் பெற்றால், குடும்பம் எப்படியும் இனிது நடைபெறும். குடும்பத்தின் அமைதியையும், சச்சரவு அற்ற ஒழுங்கான நல் வாழ்வையுமே முதன்மையாகக் கருதி கணவன் நிலையறிந்து விட்டுக் கொடுத்து வாழாமல், பிடிவாதமும் தன் முனைப்பும் கொண்டு முறைகேடாக மனைவி நடந்து கொள்வாளானால், கணவன் அக்குடும்ப வாழ்வைத் துறந்து, மௌனமாக துறவு (சந்நியாசம்) மேற்கொண்டு, வெளியேறிவிடுதலே சாலச் சிறந்தது.

பத்தாவுக்கு ஏற்ற பதிவிரதை உண்டானால்
எத்தாலும் கூடி இருக்கலாம் – சற்றேனும்
ஏறுமா றாக இருப்பாளே யாமாயின்
கூறாமல் சந்நியாசம் கொள்'

(தனிப்பாடல்)

என்று அறிவுரை கூறுகின்றார்.

(பத்தா – கணவன், பதிவிரதை – இல்லாள், ஏறுமாறாக – முறைகேடாக)

எனவே, கணவனும் மனைவியும் தத்தமது கடமைகளையும், பொறுப்புக்களையும் உரிமைகளையும் உணர்ந்து, குடும்பத்தில் அமைதியும், மகிழ்ச்சியும் நிலவும் வகையில் ஒருவர்க்கொருவர் விட்டுக் கொடுத்து வாழ்வார்களானால் இல்லற வாழ்வே நல்லற வாழ்வாக விளங்கும்.

அவ்வாறு வையத்துள் வாழ்வாங்கு வாழும் குடும்பத்துக்கு மண்ணுலக வாழ்வே விண்ணுலக வாழ்வாகத் தோன்றும். அக் குடும்பத்தினர் தேவர்களைப் போலவே மதித்துப் போற்றப் பெறுவர் என்பது திண்ணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6.7 தென்னையின் நன்றியுணர்வு :-

"ஒருவருக்கு உதவி செய்தால் அவர்கள் (நல்லவர்கள்) எப்போது நமக்கு அந்நன்றிக் கடன் ஆற்றுவார்கள்? என்று எண்ணவே வேண்டாம். இதோ இந்தத் தென்னைகளே எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. உரியவர்கள் அத்தென்னைகளை முறைப்படி நட்டு அடியிலே - வேர்ப்பகுதியிலே வெறும் நீரூற்றி வளர்த்தார்கள். அதை உண்டு உயர்ந்து வளர்ந்ததும் அவை தாம் வேரால் உண்ட வெற்று நீரை மாற்றி, இனிய குளிர்ந்த ஊட்டச்சத்துள்ள இளநீர் வடிவிலும் இன்சுவைத் தேங்காய் வடிவிலும்தம் உச்சியில் தாங்கி அவர்களுக்குத் திருப்பி அளிக்கின்றன. அதுபோலப் பிறருக்கு (நல்லவர்களுக்கு) நாம் ஓர் உதவி செய்தால் அவர்கள் நமக்குக் கைம்மாறு செய்வார்களா? என்று ஐயப்படத் தேவை இல்லை. உரிய நேரத்தில் பலன் உறுதியாகத் திரும்பக் கிடைக்கும் என்னும் உண்மையைத்தான் இத்தென்னைகள் நமக்கு உணர்த்துகின்றன என்னும் கருத்து ஔவையின் உள்ளத்தில் பட்டது. அதை அப்படியே ஒரு கவிதை வடிவில் பாடிவிட்டார்.

"நன்றி ஒருவற்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டா - நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்தருத லால்" (மூதுரை)

என்பதே அப்பாடல்.

(தெங்கு - தென்னை, தாள் - அடிப்பகுதி, தலை - உச்சிப்பகுதி)

6.8 வலியவராயினும் துணை வேண்டும் :-

"மிகுந்த ஆற்றல் உடையவர், செல்வமும் செல்வாக்கும் மிகுதியாக உடையவர் ஆனாலும், அவருக்குத் துணை வலிமை வேண்டும். அது இன்றியமையாதது. துணைப்பலம் இல்லாமல் எந்த ஆற்றலாளரும் எக்காரியத்தையும் சாதிக்க முடியாது. எப்படி அரிசி, தான் முக்கியமாக இருந்தாலும், அதனை மூடியுள்ள (சாதாரணமான) உமியை நீக்கினால், அது முளைக்காதோ, அப்படித்தான் துணைவலிமை இல்லாதவருடைய ஆற்றலும், முயற்சியும் பயனளிக்கா என்னும் உண்மை ஔவையின் உள்ளத்தில் தோன்றியது. அக்கருத்து ஒரு பாட்டாய் மலர்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பண்டு முளைப்பது அரிசியே யானாலும்
விண்டுமி போனால் முளையாதாம் – கொண்டபேர்
ஆற்றல் உடையார்க்கும் ஆகாது அளவின்றி
ஏற்ற கருமம் செயல்" (மூதுரை – 11)

(பண்டு – உமி நீங்குதற்கு முன்னே, விண்டு – நீங்கி, அளவு – துணைவலிமை, கருமம் – மேற்கொள்ளும் காரியம்)

6.9 கல்லாதவன் கவி :-

"அந்த அழகிய மயில், தன் வண்ணத் தோகையை விரித்து மிக அழகாக (சிங்காரமாக) ஆடுவதைக் கண்டு, இந்த அற்ப வான்கோழியும், தானும் மயிலாக நினைத்துக் கொண்டு ஆடுகிறது போலும்!" என எண்ணமிட்டது ஔவையின் (அவர்) ஒப்புவமை காணும் உள்ளம் !

"இவை ஜயறிவுடைய அற்பப் பறவைகள் ஒன்றைப் பார்த்து மற்றொன்று நடிப்பதிலோ, செயல்பட முயல்வதிலோ ஏதும் வியப்பில்லை. ஆனால் ஆறறிவு படைத்த மனிதர்களும் இப்படிச் செய்கிறார்களே! முற்றும் கற்றறிந்த மூதறிஞர்கள், ஆழ்ந்த பொருளும், அழகிய உவமைகளும், அரிய கற்பனைகளும், நெஞ்சைச் சிந்தனையில் ஆழ்த்தும் கருத்துகளும் பொதிந்த செஞ்சொற் கவிதைகளால் வள்ளல்களையும், மன்னர்களையும், செல்வச் சீலர்களையும் புகழ்ந்து பாடிப் பரிசுகள் பல பெறுகிறார்கள். அவர்களைத் தங்கள் இருக்கைகளினின்றும் எழுந்து நின்று இருகை கூப்பி வணங்கி, வரவேற்றுச் சிறப்பாக நலன்செய் (உபசரிக்) கிறார்கள். அவர்களுக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு, உயர்ந்த மதிப்பு, மிகுந்த பெருமை (மரியாதை)

"இவர்களைப் பார்த்து, முறையான நூல்களை முழுமையாய்க் கற்காத சில அரைக்குடங்கள், தாமும் கவிஞர் என்றும், புலவர் என்றும், அறிஞர் என்றும் தாமாகவே பட்டம் சூட்டிப் பறை சாற்றிக் கொள்கின்றனர். இந்த அரைக்குட அறிஞர்கள் பொருளற்ற வெற்றுச் சொல்லடுக்குகளைத் தொகுத்துக் கவிதையென்று பாடிப் பெருமைப்பட்டுக் கொள்கிறார்கள் இவர்கள். அவற்றைக் கேட்டு மகிழவும் (ரசிக்கவும்) அவர்களைப் பாராட்டிப் புகழவும் சில கும்பல்களும் உள்ளன. அவர்கள் கூற்று, கற்றோர் அவையில் எடுபடுமா? அவர்களுடைய வெற்று கலகலப்புக் (ஆரவாரங்)களும் விளம்பல்(ரங்)களும் காலத்தை வென்று நிற்குமா? நீர்மேற் குமிழிபோல் அல்லவா பூத்துப் பொசுக்கெனப் பொரிந்து போய்விடும்?" என்று எண்ணிய அக்கவிஞர் பெருமாட்டியின் அந்த எண்ணம் ஓர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகிய பாட்டாய் மலர்கிறது. அப்பாடலைச் சிறுவயது முதல் பலரும் படித்திருப்பார். இதோ அதனை மீண்டும் நினைவு கூர்வோம்.

"கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானும் அதுவாகப் பாவித்துத் - தானுந்தன்
பொல்லாச் சிறகைவிரித்து ஆடினாற் போலுமே
கல்லாதான் கற்ற கவி "

(மூதுரை - 14)

6.10 அற்பருக்கு உதவுதல் இடர் விழைவிக்கும்

காட்டையடுத்துள்ள ஊர் எல்லையருகில் ஒரு வேங்கைப் புலி படுத்துக்கிடந்தது. ஊருக்குள் வந்துவிடுமோ என்று பயந்து கத்திகளும், கம்புகளும் எடுத்துக்கொண்டு அதனை அடித்து விரட்டிக் கொல்ல அங்கு ஓடினர் ஊரார். ஆனால் அது உணர்ச்சியற்று மயங்கிப் படுத்துக்கிடந்தது. ஓரிருமுறை தலையைத் தூக்கித் தூக்கி நிமிர முடியாமல் மண்ணில் சாய்ந்து விட்டது. அப்போது இந்த நஞ்சு (விஷக்கடி மருத்துவ (வைத்திய)ரும் இங்கு வந்தார். அதன் அருகில் சென்று பார்த்தார். அதன் காலில் அரத்தம் கசிந்து கொண்டிருந்தது. "இதை ஏதோ நச்சு நாகம் கடித்து விட்டிருக்கிறது. நஞ்சு தலைக்கேறி உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறது. ஐயோ பாவம்!" என்று கூறி, அங்கிருந்த புதர்கள் பக்கமாகச் சென்றார். ஏதோ பச்சிலையைக் கொண்டு வந்து கசக்கிச் சாற்றைப் பிழிந்து அப்புலியின் வாயில் விட்டார். சிறிது நேரத்தில் அப்புலி உடலை இலேசாக அசைத்தது. கண்ணைத் திறந்து பார்த்தது. எழுந்து நிற்க முயன்று கொண்டிருந்தது. இந்த மருத்துவர் மட்டும் அங்கிருந்து அசையவில்லை. பக்கத்திலேயே இருந்தார்.

சிறிது நேரத்தில் அந்தப்புலி மயக்கம் தெளிந்து எழுந்தது. ஆனால் அந்த மருத்துவர் கொஞ்சமும் அசையவில்லை. தன் (புலி) உயிரைக் காப்பாற்றியவர் என்று தம்மை ஒன்றும் செய்யாது என்று நினைத்தார் போலும்!. ஆனால் சிறிது நேரத்தில் அந்தப் புலி அவர்மேல் பாய்ந்து மருத்துவர் கழுத்தினைக் கடித்துக் கொன்று தசைகளைப் பிய்த்துச் சிதைத்துத் தின்று விட்டு, காட்டுக்குள் விரைந்து ஓடி ஒளிந்து கொண்டது" பகுத்தறிவில்லாத மனிதன்! என்று கூறிக்கொண்டே, நன்றியறிவு இல்லாத அற்ப குணமுடைய கயவர்களுக்கு உதவி (உபகாரம்) செய்தால், செய்தவர்களுக்குத் தீமையும் கேடும் தான் விளையும். அவர்களை நெருங்குவதே மிகுந்த ஆபத்தானது. அவ்வாறே, விழிப்புணர்ச்சியும், பகுத்தறிவும் இல்லாமல் செய்யும் செயலும் அழிவையே தரும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்த உண்மை மக்கள் மனத்தில் ஆழப் பதிய வேண்டும். அக்கருத்தினை நன்கு நினைவு வைத்துக் கொள்ளக் கவிதை வடிவில் இருத்தலே தக்கது" எனக் கூறிப் பாடிய கவிதைதான்,

வேங்கை வரிப்புலி நோய் தீர்த்தவிடகாரி
ஆங்கதனுக் (கு) ஆகாரம் ஆனாற்போல் – பாங்கறியாப்
புல்லறி வாளர்க்குச் செய்த உபகாரம்
கல்லின்மேல் இட்ட கலம்

(மூதுரை – 15)

சிறிது தூரம் சென்ற பிறகு, அங்கே ஓர் ஆறு ஓடியதைக் கண்டார். சலசலவென்று ஓடும் நீரோட்டத்தையும், ஒரே சீரான அதன் போக்கையும் அங்கே பள்ளமும் மேடும் மாறி மாறித் தோன்றுவதையும் கண்டார். "செல்வத்தின் நிலையும் இப்படித்தான். இன்று ஒருவரிடத்திலே இருக்கும். மறுநாள் அவரை ஓட்டாண்டியாக்கிவிட்டு மற்றொருவர் கைக்கு மாறிவிடும். அதனால்தானே அதற்குச் "செல்வம்" என்று அறிஞர்கள் பெயரிட்டார்கள்!"

"பொருள் உள்ளவர்களைப் பார்த்து, 'பெருமைப் படாதீர்கள். உங்களை விட்டு எந்தக் கணத்திலும் சென்று விடுவோம்' (செல்வோம்) என்று சொல்லாமல் சொல்லிக் கொண்டிருக்கிறது செல்வம்! அதனால் தம்மிடத்தில் செல்வம் வந்தால், பாடுபட்டுத் தேடிய அப்பணத்தைப் புதைத்து வைத்து, உடலினின்று உயிர் பிரிந்தபின், வேறு யாரையோ பயன்படுத்த (அனுபவிக்க) விடும் பாவிகளாக இராமல், பசித்தவர்களுக்கு வயிறாரச் சோறிடவேண்டும். பருகத் தண்ணீர் தரவேண்டும். அந்த அறம் (தருமம்) தான் 'தலைகாக்கும்' என்னும் கருத்துப் பொதிந்த,

ஆறிடும் மேடும் மடுவும் போல் ஆம் செல்வம்
மாறிடும் ஏறிடும் மாநிலத்தீர் – சோறிடும்
தண்ணீரும் வாரும் தருமமே சார்பாக
உண்ணீர்மை வீறும் உயர்ந்து"

(நல்வழி – 32)

என்னும் பாட்டையும்,

"பாடுபட்டுத்தேடிப் பணத்தைப்புதைத்து வைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள் – கூடுவிட்டு இங்கு
ஆவிதான் போனபின் யாரே அனுபவிப்பார்
பாவிகாள் அந்தப் பணம்"

(நல்வழி – 22)

என்னும் பாட்டையும் ஔவையார் மெல்லப் பாடிக் கொண்டிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6.11 மூவகைச்சினத்தார் :-

பிளந்து போன கற்களை மீண்டும் சேர்க்க முடியாதல்லவா? அப்படித்தான் ஒருவர்மீது கோபம் கொண்டால் அதனை மறந்து விடாமல் பகையினைப் பெருக்கிக் கொள்வர். அந்த முதல் வகையினர் – கீழ் மக்கள். பிரிந்து கிடக்கும் பொன் துண்டுகளை உருக்கிச் சேர்த்து விடலாம். அதைப் போல, கோபம் கொண்ட இருவரைப் பிறர் தலையிட்டுச் சேர்த்து வைத்து விடலாம். அவர்கள் இடைப்பட்ட நிலையினர். சான்றோர், உயர்ந்த பண்பாளர். அவர்கள் ஒருவர்க்கொருவர் கோபித்துக் கொண்டால் அடுத்த நொடியில் (கணத்திலே) அதனை மறந்து, ஏதும் நடவாததுபோல இணைந்து கொள்வர். அம்பால் பிளவுபட்ட நீர்ப்பகுதி உடனே கூடிக்கொள்வது போல. இவர்கள் மூன்றாம் வகையினர். இவர்களே உயர்ந்த பண்பாளர்கள்.

இந்தப் பொருத்தமான உவமைக்கு ஏற்ற உண்மைக் கருத்தினைக் கவிதையாகப் பாடி விட்டார் உவமைக்கேற்ற உண்மை காணுவதில் தந்நிகரற்ற ஔவை பிராட்டியார். இதோ அப்பாடல்,

கற்பிளவோடு ஒப்பர் கயவர் கடுஞ்சினத்துப்
பொற்பிள வோடு ஒப்பாரும் போல்வரே – விற்பிடித்து
நீர்கிழிய எய்த வடுப்போல மாறுமே
சீரொழுகு சான்றோர் சினம் (மூதுரை 23)

6.12 அடக்கம் உடையவர் அறிவிலர் ஆகார் :-

"இதுவும் ஓர் உண்மையை உணர்த்துகிறது. சிலர் அடக்கமாகவும், அமைதியாகவும் இருப்பர். அவருடைய நிலையினைக் கண்டோ, உருவத்தைக் கண்டோ, அவர் சுறுசுறுப்பற்றவர், மந்த மதியினர், இயங்கிச் செயல்படும் ஆற்றல் அற்றவர் என்று முடிவு செய்துவிடக் கூடாது. அவர் ஏதோ ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிருக்கலாம். அல்லது தாம் எதனையோ செய்து முடிக்க உரிய காலம், இடம், சூழ்நிலை முதலியவற்றைப் பற்றித் திட்டமிட்டு அமைதியாய்க் காத்திருக்கவும் கூடும். எதனையும் நன்கு புரிந்து கொள்ளாமலும், அறிந்து கொள்ளாமலும் முடிவுக்கு வந்துவிடுதல் முறையற்றது. இந்தக் கருத்தைத்தான், நீண்ட நெடுநேரம் ஆடாமல் அசையாமல் காத்திருந்து, உரிய மீன் வந்ததும் "திடும்" எனக் கவ்விக் கொண்ட இந்தக் கொக்கு உணர்த்துகிறது. அக்கருத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் வாயினின்றும் பின்வரும் பாடல் வெளிப்படுத்தும்,

அடக்கம் உடையார் அறிவிலர் என்றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா – மடைத்தலையில்
ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி இருக்குமாம் கொக்கு.

(மூதுரை – 16)

(கடக்க – அளவிட, மடைத்தலை – நீர்நிலக் கரை, உறுமீன் – தன் ஆற்றலுக்கு ஏற்ற அளவான மீன்)

6.13 மரங்களின் ஈகை உணர்வு :-

மனிதப் பதர்கள் செய்யும் கொடுமையைப் பொருட்படுத்துவதில்லை. அம்மரங்கள் அவற்றை வெட்டிச் சாய்த்துக் கொல்லும் வரை, அவ்வாறு கொடுமை செய்பவருக்கும், கொடிய வெயிலை மறைத்துத் தம் நிழல் தந்து காத்தும், பிற வகைகளிலும் உதவுகின்றனவே. ஆ, ஆ..! என்னே இவற்றின் ஈகை (தியாக) வாழ்வு!" என்று மேலும் ஆழ்ந்து சிந்தித்து வியப்பில் ஆழ்ந்திருந்த ஔவை அன்னையின் முகத்தில், ஏதோ அரிய கருத்து ஒன்றைக் கண்டது போன்ற புன்முறுவல் தோன்றியது.

"ஆம் ஈகை உயிரி (தியாக ஜீவன்) களாகிய இம் மரங்களைப் போல், அறிவுடைய பெருமக்கள் – நல்லவர்கள், பிறர் தமக்கு எவ்வளவு தான் கொடுமைகளும், வேதனைகளும், தீமைகளும் செய்தாலும் அவற்றைச் சிறிதும் எண்ணாமல் – பொருட்படுத்தாமல் அவர்களுக்குத் தாம் இவ்வுலகில் வாழும்வரை, தம்மால் ஆன உதவிகளைத் தொடர்ந்து செய்து காப்பாற்றுவார்கள்.

அந்தக் கருத்தினைத்தான் இம்மரம் நினைவுறுத்துகிறது என்று மெல்லப் பேசிக் கொண்டார்.

பின்னர், இக்கருத்தினை ஒரு கவிதையாகவே பாடி விட்டார் நம் பெருமாட்டியார். அதுதான்,

சாந்தனையும் தீயனவே செய்திடினும் தாம் அவரை
ஆந்தனையும் காப்பர் அறிவுடையோர் – மாந்தர்
குறைக்கும் தனையும் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாம் கண்டீர் மரம்

(மூதுரை 30) என்னும் பாடல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சாந்தனையும் – சாகும்வரை, தாம் அவரை ஆம்தனையும் காப்பர் – அவர்கள் (அறிவுடைய பெரியோர்கள்) தமக்குத் தீமை செய்தவர்களுக்குத் தம்மால் முடிந்தவரை உதவி செய்து, காப்பாற்றுவார். மாந்தர் – மனிதர்கள், குறைக்கும் தனையும் – (மரங்கள் தம்மை) வெட்டிச் சாய்த்துக் கொல்லும் வரையிலும்)

6.14 உண்மை உறவினர் :-

ஆஆ! இந்தக் கொட்டி, ஆம்பல் நெய்தல் முதலியன நீரோடு பிறந்து நீரால் வளர்ந்து, வாழ்ந்து அந்நீர் வற்றிப் போகும்போது தாமும் உடல் காய்ந்து மடிந்து போகின்றனவே! என்னே, இவற்றின் உண்மைப் பற்றும், பாசமும் ஒட்டிய உறவு நெறியும், நட்பின் திட்பமும்!

இவற்றைப் போன்று வாழ்விலும் தாழ்விலும் அகலாது ஒருங்கிணைந்து என்றும் வாழ்பவரே உண்மையான உறவினர், உயிரான நண்பர்!

இதனை நன்குணர்ந்து என்றும் விழிப்புணர்வோடு வாழ வேண்டும் என்று தலையை அசைத்தவாறே பின்வரும் கவிதையைப் பாடினார்.

"அற்ற குளத்தின் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர் – அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி உறுவார் உறவு..!

(மூதுரை 117)

(அற்ற – நீர் வற்றிப்போன, அறுநீர்ப் பறவை – விட்டு நீங்கிவிடுகின்ற நீர் வாழ் பறவைகள், உற்றுழி – வறுமை அல்லது துன்பம் வந்தபோது, தீர்வார் – விட்டு நீங்கிப் போய்விடுபவர், உறவு அல்லர் – உறவினர் ஆகார், ஆம்பல் – அல்லி, கொட்டி – ஒருவகை நீர்க்கிழங்கு, ஒட்டி உறுவார் – நீங்காது உடனிருந்து வருத்தத்தை பட்டறிபவர் (அனுபவிப்பவர்) உறவு – உண்மையான உறவினராவர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6.15 பழமரமும் வௌவாலும் :-

"இவ்வௌவால்களை, "இம் மரத்தில் பழங்கள் நிறைய உள்ளன. வாருங்கள், வாருங்கள். தின்று மகிழுங்கள்!" என்று எவராவது அழைக்கிறார்களா என்ன! மரங்கள் பழுத்தால் எங்கோ தொலை தூரத்திலுள்ள இவ்வௌவால்களும் பிற பறவைகளும் தாமே வலியச் சென்று பழங்களை உண்டு களிக்கின்றன. கன்றைக் கண்ட உடனே கனக்க மடிசுரந்து பால் பொழியும் ஆ (பசு)வினைப் போல, பிறருக்குத் தம் செல்வத்தையோ செல்வாக்கையோ, ஒளிக்காமல் வழங்கியுதவக் காத்து நிற்கும் கருணையுள்ளம் படைத்த பண்பாள (உத்தம)ர்களைக் கண்டால், உலகத்தார் தாமே வலிய அவர்களையடைந்து அன்போடும், பண்போடும், மரியாதையோடும் பழகி, அவர்களால் பயனடைந்து, அவர்களை உறவினர்களாக – உற்றார்களாக, உயிர் நண்பர்களாகக் கருதிப் புகழ்ந்து கொண்டாடி மகிழ்வர். வள்ளல் உள்ளம் படைத்த அந்த நல்லோர், பிறருக்கு உதவுவதால் தாம் அடையும் பேரின்பத்தை "ஈத்து உவக்கும் இன்பத்தை" எண்ணியெண்ணி மகிழ்வார்!

இந்தக் கருத்தைத்தான் கனிந்து நிற்கும் இக்கனி மரம் உணர்த்துகிறது.

'மரம்பழுத்தால் வௌவாலை வாவென்று கூவி
இரந்து அழைப்பார் யாவரும் இங்குஇல்லை – சுரந்துஅமுதம்
கற்றா தரல்போல் கரவாது அளிப்பாரேல்
உற்றார், உலகத் தவர்" (நல்வழி)

எனப்பாடிக் கொண்டே அங்கிருந்து சென்றுவிட்டார்.

(இரந்து அழைப்பார் – கெஞ்சிக் கூவி அழைப்பவர், அமுதம் சுரந்து – (பசு) பாலைச் சுரந்து, கற்றா – கன்றையுடைய ஆ (பசு) கரவாது – ஒளிக்காமல், அளிப்பரேல் – கொடுப்பார்களாயின், உலகத்தவர் உற்றார் – உலகிலுள்ளோர் உறவினராக விளங்குபவர். (வௌவால்கள் பழுத்த மரத்தை நோக்கித் தாமே வலியச் சென்று பழங்களைத் தின்று மகிழ்வது போல, உலகத்தார் வள்ளல் உள்ளம் படைத்தவரையடைந்து பயன்பெற்று அவருக்கு உறவினராக விளங்குவர்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6.16 கடுமையும் மென்மையும் :-

முரட்டுத் தோலையுடைய யானையின் உடலைத் துளைத்து உட்புகுந்த அம்பு, மெத்தன்ற பஞ்சுப் பொதியை ஊடுருவாது, அப்படியே அதன்மேல் நின்றுவிடும். இங்கே, கனமான இரும்புக் கடப்பாரையால் பிளக்க முடியாத கடினமான பாறை, இந்த மர (தாவர) ங்களின் நுண்ணிய சிறுசிறு வேர்களுக்கு நெகிழ்ந்து கொடுத்திருக்கிறது! ஆம் இவையும் ஓர் அரிய கருத்தை உணர்த்துகின்றன.

கடுகடுத்து, வெட்டெனப் பேசும் பேச்சு – கடுமையான சொல் – சுடு சொல் எந்தப் பலனையும் தராது. காரியத்தையே கெடுத்துவிடும். ஆனால் மென்மையான, நயமான இனிய சொல்லால் – இதமான மொழியால் எதையும் எளிதில் சாதித்து விடலாம். இதைத்தான் உலக வாழ்வில் காணக் கூடியுள்ளது. என்று மெல்லக் கூறித் தலையை அசைத்து, "ஆம், வெப்பமான சூரியனைக் கண்டு பொங்காத கடல், குளிர்ந்த நிலவைக் கண்டு, தன் அலைக்கரங்களைக் கொட்டிக் குதித்துக் கூத்தாடிப் பொங்கிப் பூரிப்படைகின்றதே! பிறர் கூறும் இனிய சொல் தமக்கு இன்பம் தருதலை பட்டறிந் (அனுபவித்) தவர், எவராவது வன்சொல்லைச் சொல்வாரா? அது எந்தப் பயனையும் தராதே.

'இன்சொல் இனிது ஈன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது?

என்று வள்ளுவரும் இந்தக் கருத்தைத்தானே கூறுகின்றார். இதே கருத்தை 'வெட்டெனப் பேசேல்" என்று ஆத்திசூடியில் கூறியிருக்கிறார். இதோ அப்பாடல்,

"வெட்டேன் அவை மெத்தென் அவை வெல்லாவாம், வேழத்தில்
பட்டுருவும் கோல்பஞ்சில் பாயாது – நெட்டிருப்புப்
பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின்
வேருக்கு நெக்கு விடும்" (நல்வழி 33)

(வெட்டேன் அவை – வெட்டெனப் பேசும் வன்சொற்கள், மெத்தென் அவை – மென்மையான இனிய சொற்கள், வெல்லாவாம் – பயன்தரமாட்டா, வேழம் – யானை, பட்டு உருவும் வேல் – (யானையின் உடலில்) பட்டுத் துளைத்து ஊடுருவும் அம்பு, நெட்டு இருப்புப் பாரை – நீண்ட இரும்பால் ஆன கடப்பாரை, நெக்குவிடா – பிளக்காத, உடையாத, நெக்குவிடும் – (நெகிழ்ந்து) பிளந்து கொடுக்கும்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6.17 உதவும் உயர்குணத்தார் :-

"பிறர்க்குத் துன்பம் வந்தால் அதனைப் போக்கத் தம் இன்னுயிரையும் கொடுத்துதவும் உயர்ந்தோர், நல்லவர்கள், கருணையுள்ளங் கொண்டவர்கள், மன்னர்கள். வள்ளல்கள், முதலியோர், தம்மை எவரேனும் பகைவர் வலிமையோடு எதிர்த்துத் தாக்கினால் தம் உயிரை விட்டாவது மானத்தை காத்துக் கொள்வார்களேயல்லாமல், அப்பகைவர்களுக்கு சிறிதேனும் பணிந்து கொடுக்க மாட்டார்களே! அந்த உண்மையைத் இந்தச் சுமைதாங்கி காட்டுகிறது! என்று கூறிக்கொண்டே பாடுகின்றார்.

"உற்ற இடத்தில் உயிர்வழங்கும் தன்மையோர்
பற்றலரைக் கண்டால் பணிவரோ? கற்றூண்
பிளந்து இறுவ தல்லால் பெரும்பாரம் தாங்கின்
தளர்ந்து வளையுமோ தான்!

(உற்ற இடத்தில் – (பிறருக்குத் துன்பம்), ஏற்படும்போது, உயிர் வழங்கும் – உயிரையும் விடும், பற்றலர் – பகைவர், கற்றூண் – கல்தூண், பிளந்து இறுவது – இரண்டாய் உடைந்து விடுவது)

இக்கருத்துக்குச் சான்றாக ஒரு நிகழ்ச்சி நிழலாடியது.

"பாவம் அந்தச் **சேரமான் கணைக்கால் இரும்பொறை!** ஒப்பற்ற போர் மறவன்! உயர்ந்த கவிஞன், மானமே உருவான மன்னவன், அவனுடைய பொல்லாத காலம் **சோழ மன்னன் செங்கணனோடு** போர் புரிகையில் அவனது யானைப் படையில் இருந்த சில யானைகள் மதம் பிடித்துப் பிளிறிக் கொண்டே கலைந்து ஓடின. அதனால் படை வீரர்களும் மருண்டு ஓடினர். அவன் படைபலம் குன்றிவிட்டது. உடனே எளிதாக அவனைச் சோழன் செங்கணான் பிடித்துச் சிறையில் அடைத்துவிட்டான்.

ஒருநாட்டின் மன்னன் என்பதைக் கூட எண்ணிப் பார்க்காமல் நாயைக் கட்டுவது போலச் சேரமானைச் சங்கிலியால் கட்டிப் போட்டுக் காவலாளர் சிலரையும் காவலாக அமர்த்தினான். சிறையில் அடைக்கப்பட்ட அவன் உணவின்றி, தண்ணீர்த் தாகம் மிகுந்து வாடினான். உயிர் ஊசலாடியது. தன் நிலையையும் மறந்து, அச்சேரமான் அங்கிருந்த காவலரிடம் குடிக்கக் கொஞ்சம் தண்ணீர் வேண்டுமென்று கேட்டான். கயவர்களான அக்காவலர்கள் சேரமன்னனை எள்ளி நகையாடிக் கேவலமாகப் பேசிக் கொண்டே சென்று, நீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு வந்தனர். அதையுணர்ந்த சேர மன்னன், அந்த வெட்க (அவமான)த்தைத் தாங்காமல், அந்நீரை அருந்தாமலேயே தன் நிலையினை ஒரு கவிதையாக எழுதி வைத்துவிட்டு உயிர் துறந்தானே. அந்தக் கவிதை என் நெஞ்சத்தில் என்றும் நிலையாக நிற்கிறது."

"ஆஃஆ ! அது எவ்வளவு அருமையான கவிதை! தான் உயிர்விட்ட காரணத்தைத் தெளிவுறக் கூறியுள்ளான் அவ்வரசக் கவிஞன், சேரமான்! 'அரச தலைமுறை (பரம்பரை) யினர், தாய் வயிற்றினின்றும் குழந்தை செத்துப் பிறந்தாலும், உருவமற்ற தசைப் பிண்டம் பிறந்தாலும், அவற்றை ஆள் அன்று என்று கருதாமல், வாளால் கீறித்தான் முறைப்படி புதைக்கவோ, எரியூட்டவோ செய்வார்கள். அப்படியிருக்க, போர்க்களத்தில் பகைவர் கை வாள் படாது, சங்கிலியால் நாய் போலக் கட்டி, இவ்வாறு துன்பப்படச் செய்த பகைவரிடமிருந்து, பசியையும் தாகத்தையும் அடக்கிக் கொள்ளும் மனவலியை இழந்து, அவரை விடாய் (தாகம்) தணிய நீர் தருமாறு இரந்து பெற்று வயிற்றுப் பசி தீர – தணித்துக் கொள்ள எண்ணிய, என் போன்ற இழிநிலையடையாரை, என் அரச தலைமுறை (பரம்பரை) யினர், இவ்வுலகில் பிள்ளையாய்ப் பெறுவார்களோ? (இந்த இழிநிலைக்கு ஆளாகிய யான் மானமிழந்து உயிர் வாழ்வதா?")

அக்கவிதை மெல்லப் பாடுகிறார்:

குழவி பிறப்பினும் ஊன்றடி பிறப்பினும்
ஆள் அன்று என்று வாளில் தப்பார்
தொடர்படு ஞமலியின் இடர்ப்படுத்து இரீஇய
கேளல் கேளீர் வேளாண் சிறுபதம்
மதுகை இன்றி வயிற்றுத்தீத் தணியத்
தாம்இரந்து உண்ணும் அளவை
ஈன்ம ரோஇவ் வுலகத் தானே

(புறம் – 74)

(குழவி இறப்பினும் – தாய் வயிற்றினின்றும் குழந்தை செத்துப் பிறந்தாலும், ஊன்தடி – (உருவம் அமையாத) தசைப் பிண்டம், வாளில் தப்பார் – அதனை வாளால் பிளக்கத் தவற மாட்டார்கள், தொடர்ப்படு – சங்கிலியால் கட்டப்பட்ட, ஞமலி – நாய், இரீஇய – இருத்திய, கேளல் கேளிர் – பகைவர், வேளாண் சிறுபதம் – உதவியால் கொண்டு வரப்பட்ட சிற்றுணவான நீர், மதுகை – (மன) வலிமை, இரந்து – பிச்சையெடுத்து, ஈன்மரோ இவ்வுலகத்தார் – (அரச பரம்பரையினர்) பிள்ளையாகப் பெறுவார்களோ, இவ்வுலகத்தில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'உணவையும் நீரையும் விரும்பும் இந்த வயிற்றுப் பசி, அப்பப்பா மிகமிகக் கொடியது! அந்தப் பசி வந்துவிட்டால் தன்மானம், தான் பிறந்த குலத்தின் மேன்மை, கற்றுள்ள கல்வி, வரையாது வழங்கும் வள்ளல் தன்மை, நுண்ணறிவுத் திறன், உயர் பதவி, தவம், உயர்வு, முயற்சித் திறன், ஆடவர்தாம் விரும்பும் மகளிர் மேல் கொண்டுள்ள காதல் ஆகிய இந்தப் பத்தும் பறந்து போய் விடுமல்லவா? பாடுகிறார்.

மானம் குலம், கல்வி, வண்மை, அறிவுடைமை
தானம், தவம், உயர்ச்சி, தாளாண்மை – தேனின்
கசிவுவந்த சொல்லியர்மேல் காமுறுதல் பத்தும்
பசிவந் திடப்பறந்து போம்.

(நல்வழி – 26)

(வண்மை – வள்ளல் தன்மை – ஈகைக்குணம், தாளாண்மை – முயற்சி, தேனின் கசிவு வந்த சொல்லியர் – இனிமை மிகுந்த சொல்லையுடைய மகளிர், காமுறுதல் – காதல் கொள்ளுதல்)

6.18 ஒவ்வொருவரும் ஒவ்வொன்றில் வல்லவர் :-

"மனிதர்களுள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு தனித்திறமையும், தனித் தன்மையும், கலையாற்றலும், நுட்பக்கூறும் பெற்றவர்களாக இருப்பர். ஒருவரிடம் காணும் அரிய ஆற்றலும், நுட்பமும், புதுமைச் செயலும் மற்றவர்க்கு இல்லையென்று எண்ணுவது தவறு. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்று எளிது. ஒவ்வொருவரும் ஒவ்வோர் கலையில் அல்லது செயலில், சாதனையில் வல்லவர்களாக இருப்பார்கள். இது இயற்கையின் நியதி!"

இந்தக் கருத்து ஓர் அரிய பாடலாக மலர்ந்தது அதுதான்.

வான்குருவி யின்கூடு, வல்லரருக்கு, தொல்கறையான்
தேன் சிலந்தி யாவர்க்கும் செய்யரிதால் – யாம்பெரிதும்
வல்லோமே யென்று வலிமைசொல வேண்டாம்காண்
எல்லோர்க்கும் ஒவ்வொன் (று) எளிது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6.19 கம்பரும் ஔவையும் :-

ஔவையார் பொதுவாக ஏழைகளுடனும் தன் பணிவின் மூலமாக நெருங்கிப் பழகுபவர். ஒருமுறை அவர் செலவு (பிரயாணம்) ப்படும் பொழுது வழியில் களைப்புற்றதால் ஒரு வீட்டின் திண்ணையில் படுத்து உறங்கி விட்டார். அவ்வீடு சிலம்பி என்னும் வறிய கணிகையின் வீடு. (ஆடல், பாடல்களில் தேர்ந்தவள்). ஔவை கண்விழித்த போது சிலம்பி நின்றுகொண்டிருந்தாள். அவள் ஔவை பாட்டியிடம் நீங்கள் களைப்புற்றிருப்பதால் தான் காச்சிய கூழை குடிக்கும்படியாக வேண்டினாள். பாட்டியும் மகிழ்வுடன் கூழைப்பருகிக் கொண்டிருக்கும் போது அவளது வீட்டுச் சுவரிலே அரை குறையாக எழுதப்பட்டிருந்த பாடல்வரிகளை,

தண்ணீரும் காவிரியே தார் வேந்தன் சோழனே"
மண்ணாவ தும்சோழ மண்டலமே"

என்றும் முடிவுபெறாமலிருப்பதைப் பார்த்துக் காரணம் கேட்டாள். அதற்கு அவள் ஒருநாள் கவியரசர் கம்பர் தன்னிடம் வந்ததாகவும், அவரிடம் தன்னைப்பற்றி ஒருபாடல் எழுதவும் கேட்டுக்கொண்டாளாம். அதற்குக் கம்பரோ தனக்கு ஆயிரம் பொற்காசுகள் தரும்படியாகக் கேட்டதாகவும், தன்னிடம் அப்போது 500 பொற்காசுகளே இருந்து அதைக் கொடுத்ததாகவும், அதற்கு அவர்முடிவு பெறாத பாடலின் இரண்டு வரிகளையும் பாடிவிட்டுச் சென்றுவிட்டதாகவும் கூறினாள்.

பொதுவாக கவியரசர் கம்பராமாயணம் எழுதிய கம்பரைப்பற்றிப் பல கதைகளுள்ளன. அவர் கம்பராமாயணம் எழுதத் தொடங்கிய பொழுது அவருக்குத் தமிழ்ச்சான்றோர் நடுவில் எதிர்ப்புகளிருந்ததாகவும் இவரது மகன் அம்பிகாபதி அவரை எழுதவேண்டாமெனத் தடுத்ததாகவும், ஆனால் அவரின் பணத்தாசையினால்; அதாவது காலத்திற்கு காலம் தமிழர் நடுவில் தோன்றும் தற்குறித்தன்மையுள்ள, 'ஆல் பழுத்தால் இங்கே அரசு பழுத்தால் அங்கே" என்ற வயிற்றுப் பிழைப்புத்தமிழர் போல் அன்றும் இருந்துள்ளார்கள் என்பதை கம்பரின் செயற்பாடு துலக்கும்.

ஔவையார் பாடலின் இறுதி வரிகளையும்;
"பெண்ணானவள் அம்பர்ச் சிலம்பி அரவிந்தத்தாள்
அணியும் செம்பொன் சிலம்பே சிலம்பு"
என்று பாடி நிறைவு செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாடலின் பொருளானது; சிறந்த நீரென்று போற்றப்படுவது காவேரி நீரே! அரசருள் சிறந்தவன் சோழமன்னனே! சிறந்த நாடெனப் போற்றப்படுவதும், சோழநாடே, சிறந்த பெண்ணெனக் கூறப்படுபவள் அம்பர் என்ற ஊரில் வாழும் சிலம்பி என்னும் பெயருடையவளே! சிறந்த காலில் அணியும் சிலம்பானது அவள் தன் தாமரை போன்ற அடிகளில் அணியும் பொற்சிலம்பேயாகும் என பாடலை நிறைவு செய்துள்ளார்.

ஒருமுறை வயலோரமாகப் போய்க்கொண்டிருந்த ஔவையைப் பார்த்து, அவ்விடம் சென்றிருந்த கம்பர் குறும்புத்தனமாக சிலேடையுடன்

"ஒருகாலில் நாலிலைப் பந்தலடி" என்று, ஔவை விடை தெரியாது வெட்கப்பட்டுத் தலைகுனியட்டுமென்று கம்பர் அடிபோட்டுப் பாடினார். ஔவையோ ஒருகணமேனும் தாமதிக்கவில்லை. தனது "ஆசுகவி" பாடும் திறத்தால்

எட்டே கால் லட்சணமே எமனே றும்பரியே
மட்டில் பெரியம்மை வாகனமே – முட்டமேற்
கூரையில்லா வீடே! குலராமன் தூதுவனே
ஆரை அடா சொன்னாய் அது"

இங்கு "ஆரையடா" என்பது இருபொருள் தரும் ஒருசொல். ஒன்று அடி என்பதற்கு அடா என்பது, மற்றையது ஒரே தண்டில் நான்கே இலைகளுடன் நீர்நிலைக் கரைகளில் நிற்கும் ஒரு வகைக் கீரைச்செடி (தாவரம்).

இப்பாடலின் பொருள் – தமிழில் எண் எட்டை (8) 'அ' என்றும், கால் (1/4) ஐ "வ" என்றுமே தொல்தமிழர் பயன்படுத்தினர். எனவே
'எட்டேகால்' இலட்சணமே – அவ இலட்சணமே எமனேறும்பரியே – கூற்றுவன் (யமன்) செல்லும் எருமையே
மட்டில் பெரியம்மை வாகனமே – கழுதையே
முட்டமேற்கூரையில்லா வீடே – குட்டிச்சுவரே
குலராமன் தூதுவனே – (அநுமான்) குரங்கே
என்றவாறாக திட்டி வசை கூறி தனது விடையாக "ஆரைக் கீரை" யைக் குறிப்பிடுகின்றார்.

இன்றும் தம்மை விளம்பல் (விளம்பரம்) செய்வதற்காகப் பலர் பல விழாக்களை செய்கின்றனர். இவர்களையே போற்றிப் புகழ்ந்து, மதிப்பும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்கின்றனர். கம்பர் பொன்னுக்கும் பொருளுக்கும் பாடுவதால் அவரைப் பெரிய கவி எனக் கொண்டாடினர். பொதுவாக நஞ்சாக, வேம்பாக (இனமுரண், மொழி முரண்) இவர் போன்றோரின் கவிதைகள், பாடல்கள், உரைகள், நூல்கள் இருந்தாலும் பட்டொளி வீசும் பாவலர்களையே கொண்டாடும் இவ்வுலகை நீதிநூல் ஔவையார் நையாண்டி செய்து ஒரு பாடலைப் பாடுகின்றார்.

"விரகர் இருவர் புகழ்ந்திட வேண்டும்
விரல் நிறைய மோதிரங்கள் வேண்டும் – அரையதனில்
பஞ்சேனும் பட்டேனும் வேண்டும் அவர்கவிதை
நஞ்சேனும் வேம்பேனும் நன்று"

நீதிநூல் பாடிய சோழர்கால ஔவையும், கம்பரும், ஒட்டக்கூத்தரும், புகழேந்தியும், சமகாலத்தவரென்றே அதாவது கி.பி 12 நூற்றாண்டளவே என்கின்றனர் பலர். ஆனால் கம்பர் கி.பி 9ஆம் நூற்றாண்டெனக் கொள்வாரும் உளர்.

அதே போல **ஔவைப் பெருமாட்டியும் உக்கிரப்பெருவழுதிப் பாண்டியன் காலந்தொட்டுக் குலோத்துங்க சோழன் காலம் வரை ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்திருக்க வேண்டும் எனவும் கூறுகின்றனர்.** எனவே சங்ககால ஔவையும், நீதிநூல் ஔவையும், விநாயகர் அகவல் ஞானக்குறள் (310) ஔவையும் ஒருவரே என்கின்றனர். இதற்கு அவர்காட்டும் சான்று, கஞ்சமலை (பிரான்மலை)யிலிருந்து பெற்ற கருநெல்லிக்கனியைத் துறவர் ஒருவர் "அதியமான் நெடுமான் அஞ்சி"க்குச் சாதல் நீங்கக் கொடுத்ததாக **"கரபுரநாதர் புராணம்"** (தென்மம்) "கூறுமென", 'கார்மேகக் கோனாரே" கூறுகின்றார். "மால்வரை கமம் பூஞ்சாரல் கவி நெல்லி அமிழ்து வினைதீங்கனி ஔவைக் (கு) ஈந்த அதியன்" என **சிறுபாண் ஆற்றுப்படை 99-103** கூறும். அதே போல **'கொங்கு மண்டலச் சரிதம்,** நல்லிசைப் புலவர் ஔவையார் பக்கம் 152 இல் சாதலை நீக்கும் கருநெல்லி தன்னைத் தமிழ்ச் சொல் ஔவைக்கு (ஆதாரத்தோடு) சான்றோடு கொடுத்தவன் அதியமான் என்கிறதாம். அத்தோடு ஔவை ஒரு 'குண்டலினி" யோகி (சித்தர்) யாகவும் கூறப்படுகிறார். எனவே ஔவை பல் நூற்றாண்டு வாழ்ந்தார் என்கின்றனர். இதை **பரிமேலழகர் திருக்குறள் உரை 11 ஆம் குறளும்** இக்கருத்தைக் குறிப்பிடும். **ஔவையும்** தனது புறநானூற்றுப் பாடல் **91இல்** இதைக்குறிப்பிடுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலோத்துங்கசோழன் முடிசூடிய போது ஔவை "வரப்புயர" என்று வாழ்த்தி அமர்ந்தார். அவையோர் ஒன்றும் விளங்காமல் விழிக்கவே ஔவையார் தொடர்ந்தும் தம் வாழ்த்தைக் கூறி முடித்தாராம்.

"வரப்புயர நீர் உயரும்
நெல்லுயரக் குடியுயரும்
குடியுயரக் கோலுயரும்
கோலுயரக் கோனுயர்வான்

உழவுத் தொழிலின் இன்றியமையாமையை ஆள்வோர்க்கு எவ்வளவு நுட்பமாக உணர்த்துகிறார். குழந்தைகள் மனதில் இது பதிந்தால் நாடு உயரும் என்பதற்கு ஐயம் உண்டோ?



அன்பளிப்பு:
நா.வை.குமரிவேந்தன் (மகேந்தியாசா)
மின் கண்காணிப்பாளர், இலங்கை மின்சார சபை (ஓய்வு).
நிறுவுநர், இலங்கைக் குமரித் தமிழ்ச்சங்க மன்றம்.
84, வெற்றி(யெயந்தி)நகர், கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணைநின்ற நூல்கள்

திருக்குறள் வாழ்வியல் உரை	:- முதுமுனைவர். இரா.இளங்குமரன்
திருக்குறள் தெளிவுரை உரை	:- முனைவர்.மு.வரதராசன்
திருக்குறள் தெளிவுரை உரை	:- பரிமேலழகர்
பெய்யெனப் பெய்யும் மழை	:- நா.வை.குமரிவேந்தன்
ஔவையார் வாழ்வும் வாக்கும்	:- பேரா.தி.முத்துகண்ணப்பன்
ஔவையார் வாழ்வும் வாக்கும்	:- நர்மதா பதிப்பகம்
ஔவையார்	:- தமிழண்ணல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பு:-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பு:-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பு:-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வுயர்த்தும் மொழி

உலகின் முதல்மொழியே – எம்
உணர்வின் முதல் மொழியாம்
கலைகளின் சீர்மொழியே – எம்
கண்ணிற் சிறந்ததுவாம்!
அலகில் ஆற்றல்மொழி – எம்
அன்னைத் தமிழ் மொழியாம்
தொல்காப்பிய மொழியே – எம்
தாய தமிழ் மொழியாம்
பல்காப்பிய மொழியே – எம்
பண்பாடுணர்த்தும் மொழி
வெல்லும் தமிழ்மொழியே – எம்
வீரவாழ்வு மொழியாம்
பண்ணும் இயல் கூத்தும் – இப்
பாருக்களித்த மொழி
எண்ண உயர்வினுக்கே– தலை
இருப்பெனும் செம்மொழியாம்
மண்விண் இருக்கும் வரை –தமிழ்
வாழ்வுயர்த்தும் மொழியாம்

– பாவேந்தர் பாரதிதாசன் –

ஆசிரியரின் வெளி வந்த நூல்கள்

பெய்யெனப் பெய்யும் மழை
ஒருங்கு இருக்கை [யோகாசன] நெறி
அகனின் விழிப்புக்கதைகள்
மதுரை எரிகிறது
தமிழியச் சான்றோர் –1
உலக உயர் தனிச்செம்மொழி செந்தமிழ்
தமிழர் இலக்கிய இலக்கணம் [ஓர் அறிமுகம்]
தமிழர் மெய்யியல் கோட்பாடு
[திருக்குறள் , ஔவை நூல்கள்]

வெளி வர இருப்பவை

தொடக்கால கல்வியர் சான்றோர்–1
[நெருந்தீவின் வாழ்வியல் வரலாறு]
தமிழ்த் தாய்வும்
தமிழியச் சான்றோர் 2-3 பகுதிகள்
திருக்குறட்சிந்தனைகள்
தொல் தமிழர் [இலங்கை]
தமிழர் மதமும் பண்பாடும்

வேழன் பதிப்பகம், கிளிநொச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org